32





PANDIAN TAMIL VACHAKAM

BOOK VII

(Based on the New Syllabus, 1939)

28 MAR 1940
MADRAS

BY

M. RAJAMANIKKAM

AND

M. V. RAGHAVAN



The Educational Publishing Co.

Thyagarayanagar :: MADRAS

PANDIAN TAMIL VACHAKAM

AN APPRECIATION

This series of Tamil Readers for the Elementary Schools from Standards 1–8 is a new venture and shows many improvements upon the old form of readers.

They follow fairly closely the new Syllabus for Elementary schools and endeavour to supply the necessary new words for each class.

There is also considerable variety in the reading matter provided and the selections of nursery rhymes, ballads and poems for the various classes are on the whole excellent.

The books contain a good selection of pictures, some of which are illustrative of stories and are given with a view to the children writing sentences about them or explaining them in their own words. There are al[illegible] many extracts from newspapers which will help t[illegible] children to appreciate the value of newspapers.

A great deal of help is given in the way of compo[illegible] tions partly by definite instruction and partly by prov[illegible] ing sufficient material for exercises.

The books follow a regular course in regard [illegible] matter and grammar and take the pupil stage by stage. [illegible] the latter books there are some excellent specimens [illegible] dialogue and drama.

Books 5, 6, 7 and 8 include prose selections fro[illegible] outside authors.

On the whole this series of books is a welco[illegible] improvement on most of the books hitherto publish[illegible] and should be very useful indeed in all schools. T[illegible] style and getup is exceedingly good.

(The Rev.) H. A. Pop[illegible]

8-3-40

1194

பாண்டியன் தமிழ் வாசகம்

ஏழாம் புத்தகம்

1732

THE REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

ஆக்கியோர் :

வித்வான், மா. இராசமாணிக்கம், B. O. L.

தமிழாசிரியர், முத்யாலுப்பேட்டை உயர்கலாசாலை, சென்னை.

வித்வான், ம. வி. இராகவன்

தமிழாசிரியர், இராமகிருஷ்ண மிஷன் உயர்கலாசாலை, சென்னை.

1148
474.8c86

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி

தியாகராயநகர் சென்னை

பதிப்புரிமை] 1939 [விலை அணா 8

PRINTED AT
KABEER PRINTING WORKS
195, HIGH ROAD, TRIPLICANE

1149
REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

முகவுரை

பண்டு தொட்டே தமிழகத்தை ஆண்டுவந்த சேர சோழ பாண்டியருள், தமிழைப் பேணி வளர்த்த பெருமை **பாண்டியர்க்கே உரியது.** ஆதலின், தமிழ் 'தென்றமிழ், மதுரைத் தமிழ், பாண்டித் தமிழ்' என்றெல்லாம் கூறப்படும். இப்பெற்றி நோக்கியே, இத்தமிழ்ப்பாட வரிசை **பாண்டியன் தமிழ் வாசகம்** எனப் பெயர் பெற்றது.

இந்நூற்றொகுதி, கல்வித் துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள **புதிய பாட இயல்** (Syllabus)படி தயாரிக்கப் பெற்றது. புதிய பாட இயலில் குறிப்பிடப்பட்டுள்ள **ஒவ்வொரு குறிப்பும்** இதன்கண் சிறப்பிடம் பெற்றுள்ளது.

கிராம மாணவன் தன்னளவில் உலக **விஷயங்களை** அறிதற்கு வேண்டும் அளவு பிழையின்றிப் பேசுதல், படித்தல், எழுதுதல், ஆகிய தமிழ் அறிவினையும் பொது அறிவினையும் பெறச்செய்தலே இப்பாட இயலின் நன்னோக்கமாகும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்நூல் வரிசை தயாரிக்கப் பெற்றுளது.

பாட இயலிற் கண்டுள்ளவாறு புதிய சொற்களும் சொற்றொடர்களும் பாடந்தோறும் தரப்பெற்றுள்ளன. கதை, விஞ்ஞானம், பயிர்த்தொழில், கைத்தொழில், சுகாதாரம், சரித்திரம், உரையாடல், இலக்கியம், நாடகம் முதலிய அறிவியற் பாடங்கள் ஒவ்வொரு நூலிலும் எழுதப்பட்டுள்ளன. பாட்டுகளில் வகுப்புக்கு ஏற்றவாறு கும்மி, தாலாட்டு, அம்மானை, பந்தாட்டம், ஊசல், கண்ணி, பள்ளு, குறம் முதலிய பழம் பாடல்களும், புதிய பாடல்களும், அபிநயப் பாக்களும் ஆங்காங்கே தரப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் **கேள்விகள், பயிற்சி, இலக்கணம்** என்பவை வகுப்புக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டுள்ளன. **மவுன வாசிப்பின்** அவசியம் படப் பயிற்சிகள்

மூலமாகவும் கதைப் பாடங்கள் முதலியவை மூலமாகவும் வற்புறுத்தப்பட்டுள்ளது. கடிதம் எழுதுதற்கும், கட்டுரை எழுதுதற்கும் தக்கவாறு சில பாடங்கள், மாதிரிக் கடிதங்கள் இன்ன பிறவும் தரப்பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின், பாண்டியன் தமிழ் வாசக வரிசை—புதிய பாட இயற்படி நன்முறையில் அமைந்துள்ள **மாணவர் விருந்து** எனல் பொருந்தும். இந்நூல் வரிசை இத்தமிழகத்தே நல்வரவு கொள்ளும் எனும் துணிபுடையேம்.

மா. இராசமாணிக்கம்

ம. வி. இராகவன்

ஆசிரியர்க்கு

1. **குறிப்புப் புத்தகம்**—பத்திரிகைச் செய்திகளை ஒட்டிவைத்துக் கொள்ளும் **நோட்டுப் புத்தகம்**—இவற்றின் அவசியத்தை விளக்கி, இவற்றை வைத்துக்கொண்டு பயன்பெறப் பழக்குதல் வேண்டும்.

2. பல பொருள்களை நேரிற்காணச் செய்தலின் மூலமாகக் **கட்டுரை எழுதுதற்குரிய விஷய ஞானத்தைப்** பெருக்குதல் வேண்டும்.

3. மாணவரைப் பல இடங்கட்கு அழைத்துச் செல்லல் - அவ்விடங்களைப்பற்றிய செய்திகளை விளக்கல் - அவற்றைப் பற்றிக் கட்டுரை வரையச் செய்தல்—பத்திரிகைச் செய்திகளை அன்றாடம் அறிவித்துப் பிள்ளைகட்கு உலக அறிவை ஊட்டுதல்- இன்ன பிறவும் மாணவர் முன்னேற்றத்துக்கு ஏற்றவையாம்.

4. பயிற்சிகளில் தரப்பெற்றுள்ள பலவகைச் செய்திகளைப் பற்றிய எல்லாத்துறைகளிலும் பிள்ளைகளைத் திறம்படப் பழக்குதல் வேண்டும். பயிற்சிகளை மாதிரியாகக் கொண்டு, மேலும் பல உதாரணங்கள் தந்து, பிள்ளைகளிடம் வேலை வாங்குதல் வேண்டும்.

5. தோட்ட வேலை, சிறிய கைத்தொழில்கள் இவற்றைப் பிள்ளைகளே செய்யப் பழக்குதல் நலம். பிள்ளைகள் தாம் செய்வனவற்றையும் தம் அநுபவத்தையும் குறிப்புப் புத்தகத்தில் அன்றாடம் எழுதச் செய்தல் நலமாகும்.

6. பாட நூல்களில் வரும் சம்பாஷணைகளை நாடகமாக நடிக்கச் செய்தல், நாடக ரூபத்தில் எழுதச் செய்தல், நாடக ரூபத்தில் உள்ளவற்றைக் கதை ரூபமாக எழுதச் செய்தல், கதையில் கூறப்படும் பாத்திரங்களாகத் தம்மை நினைந்து சுயசரிதை கூறுதல் போலவும், கண்டார் கூறல் போலவும், கேட்டார் கூறல் போலவும் சொல்லவும் எழுதவும் செய்தல் - முதலியன மாணவர்க்குப் பேசுந் திறனையும் எழுதுந் திறனையும் பெருக்கும் வழிகள் ஆகும்.

7. கதைப்படங்களையும் பிற பயிற்சிகளில் வரும் படங்களையும் கண்டு சில வாக்கியங்கள் கோவையாகக் கூறப் பழக்கலும், எழுதப் பழக்கலும், கதையை முழுவதும் கூறவும் எழுதவும் பழக்கலும் பிள்ளைகட்குப் பெரும்பயன் அளிக்கும்.

8. இன்ன இன்ன இடங்களில் **க, ச, த, ப** மிகும் என்பதைப் பிள்ளைகட்கு உதாரணத்துடன் அறிவித்து, அவ்வறிவைப் பாடங்கள் வாயிலாகப் பெருக்கிப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பிள்ளைகளைப் பழக்குதல் ஆசிரியரது தலையாய கடனாகும்.

9. **ர, ற; ல, ள; ந, ன, ண**—இவற்றின் பேதம் விளங்கச் சொற்களில் இவற்றை வைத்து உச்சரிக்கப் பழக்குதல், தக்க இடங்களில் நிறுத்தக் குறிகளை அமைத்துப் பொருள் விளங்குமாறு படிக்கப் பழக்குதல், அங்ஙனமே பேசச் செய்தல் முதலியன பிள்ளைகளை மொழியறிவிற் கவலை கொள்ளச் செய்யும் நல்ல தொண்டாகும்.

10. செய்யுட்களில் சிலவற்றுக்கு நிறுத்தக் குறிகளை இட்டுள்ளோம்; சிலவற்றுக்கு இல்லை. தக்க இடங்களில் தக்க குறிகளை மாணவரைக் கொண்டு இடச்செய்தல் வேண்டும் என்பதற்கே அங்ஙனம் அவை குறியின்றி விடப்பட்டுள்ளன. செய்யுளைச் சீர்பிரித்துப் பிழையின்றி வரிவரியாக எழுதப் பழக்குதல் அவசியமாகும்.

11. அபிநயப் பாடல்கள் முதலியவற்றை அபிநயத்தோடு எடுத்தல்—நலிதல் முதலிய ஸ்வர பேதங்கள் விளங்கக் கற்பித்துப் பாடச் செய்தல் சிறந்தது.

12. உடற்பயிற்சி, சுகாதாரம் முதலிய முக்கியமான செய்திகளின் அவசியத்தைப் படங்கள், கதைகள், காட்சிகள் இவற்றின் மூலம் நன்கு அறிவுறுத்தி, அவற்றில் போதிய கவலை எடுத்துக்கொள்ளும்படி மாணவரைப் பழக்குதல் ஆசிரியர் பண்பாகும்.

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
1.	நானிலம்	...	1
2.	வாக்கிய அமைப்பு	...	8
3.	கன்னனும் குந்தியும்	...	13
4.	குறிப்புகள் தயாரித்தல்	...	19
5.	கதைப் பாடம்	...	23
6.	கம்பர்	...	26
7.	கிராமக் கைத்தொழில்கள்	...	34
8.	பத்திரிகை வாசித்தல்	...	40
9.	செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரை	...	44
10.	கைத்தொழில் படங்கள்—I	...	51
11.	எக்ஸ் ரே	...	54
12.	எனது உல்லாசப் பிரயாணம்	...	59
13.	என் வரலாறு (நிலக்கரி)	...	66
14.	எங்கள் பாண்டி மன்னன்	...	73
15.	கைத்தொழில் படங்கள்—II	...	80
16.	எனக்கு வந்த யோகம்	...	82
17.	சாரணச் சிறுவர்	...	90
18.	நாடகக் காட்சிகள்	...	97
19.	இரவீந்திரநாத தாகூர்	...	103
20.	கிராமப் பிளான்	...	110
செய்யுட் பகுதி			
I.	கலைமகள் துதி	...	111
II.	நீதிப் பகுதி	...	112
III.	கதைப் பகுதி	...	121
IV.	பல்சுவைப் பகுதி	...	125

பாண்டியன் தமிழ் வாசகம்

28 MAR 1940
MADRAS

ஏழாம் புத்தகம்

1. நானிலம்

பூமிக்கு வழங்கும் பெயர்களில் நானிலம் என்பது ஒன்று. நான்கு வகையான நிலங்களையுடையது பற்றி நிலத்திற்கு இப்பெயர் இடப்பெற்றது. எனவே, நானிலம் என்பது ஒரு காரணப் பெயராம். இந்த நால்வகை நிலப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டே பழந்தமிழ் மக்களுடைய நாகரிகமும், வாழ்க்கை முறைகளும், தெய்வவழிபாடு முதலிய பலவும் அமைந்திருந்தன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவே நிலத்தின் நான்கு வகைகளாகும். இவற்றுள் மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், காடும் காட்டுச் சார்பான இடமும் முல்லை என்றும், ஊரும் ஊரைச் சுற்றியுள்ள நன்செய் நிலமும் மருதம் என்றும், கடலும் கடற்கரையோரப் பிரதேசமும் நெய்தல் என்றும் வழங்கப்படும்.

இனி இந்த நிலங்களின் இயற்கை அமைப்பு, இவற்றில் வாழும் மக்களின் தொழில், வாழ்க்கை முறைகள், தெய்வம் என்பவற்றைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

குறிஞ்சி : இயற்கைக் காட்சியில் முதன்மையாவது மலையே. உயர்ந்து பரந்து பருத்துக் காணப்படும் அதன் இயற்கைத் தோற்றத்தின் பெருமையை என்னென்று உரைப்பது! மேகத்தைத் தடுத்து மழை பெய்விப்பது

மலையே அன்றோ! அது பல சிற்றாறுகளையும் பேராறுகளையும் அனுப்பி, நம்மை ஊட்டி வளர்க்கின்றது. பகைவர் நம்மை அணுகாதவாறு தடுக்கும் பெரிய போர் வீரன் என்று அதைச் சொல்லலாம்.



குறிஞ்சி மலர் இங்கு விசேஷமாக அலரும் புஷ்பமாதலால், இந்நிலப்பகுதி குறிஞ்சி எனப் பெயர் பெற்றது.

இந்நிலத்தில் அகில், சந்தனம், தேக்கு, வேங்கை போன்ற மரங்கள் மிகுந்து வளரும்; மலை நெல், தினை ஆகிய தானியங்கள் பயிராகும். இயற்கையாக அமைந்து காணப்படும் அருவி, சுனை, குட்டைகளில் குவளை மலர் பூத்திருக்கும். குறிஞ்சி, காந்தள், வேங்கை முதலிய பூக்களும் இந்நிலத்திற்கு உரியனவாம். யானை, புலி, கரடி, சிங்கம், காட்டுப்பன்றி முதலிய விலங்குகள் இந்நிலத்தில் திரிந்து வாழும். கிளியும், மயிலும் இந்நிலத்தில் அதிகமாக வாழும் பறவைகளாகும்.

மலைச்சரிவிலும் அடிவாரங்களிலும் காணப்படும் மலை நிலத்துக் குடியிருப்புக்குக் குறிச்சி, சிறுகுடி என்னும் பெயர்கள் வழங்கின. அவற்றில் வாழ்ந்த மக்கள், உரமான உடலமைப்பும், அஞ்சா நெஞ்சமும், சுதந்திர உணர்ச்சியும் உடையவராய் இருந்தனர். இவர்களில் ஆடவர் குறவர் எனவும், மகளிர் குறத்தியர் எனவும் அழைக்கப் பெற்றார்கள். விலங்குகளை வேட்டையாடுதல், தேன் சேகரித்தல், கிழங்கு கல்லி எடுத்தல், பயிரிடுதல் ஆகிய தொழில்களைக் குறவர் செய்து வந்தனர். தினைப்புனம் காத்தல், அறுவடைக் காலங்களில் ஆடவர்க்குத் துணை புரிதல், தானிய மணிகளைக் குத்திப்

புடைத்துக் குதிர்களில் சேகரித்து வைத்தல் ஆகிய காரியங்களைக் குறத்தியர் செய்தனர்.

குறிஞ்சி நிலத்து மன்னர்க்குச் **சிலம்பன், வெற்பன், பொருப்பன்** என்ற பெயர்கள் வழங்கின. மலை நில மன்னர்களில் **அதிகமான், பாரி** போன்றவர் சிறந்த கொடையாளிகளாய் விளங்கினர். குறிஞ்சி நிலம் இயற்கை அழகின் இருப்பிடம் அல்லவா? அழகிற்கு 'முருகு' என்பது மற்றொரு பெயர். அதனை உடையவனை முருகனை மலைவாணர் வழிபட்டார்கள். இந்த மலை நிலக் கடவுள் அவர்களுக்குக் கண்கூடான தெய்வமாய் வள்ளியை மணந்த வரலாறு பிரசித்தமானதே. முருகன் வள்ளி முன் வேங்கை மரமாக நின்று திருவிளையாடல் புரிந்ததால், மலை வாசிகள் இதையும் தெய்வத்தன்மை உடையதாகக் கொண்டு வழிபடலாயினர்.

முல்லை: காட்சி இன்பத்தில் முல்லை குறிஞ்சிக்கு அடுத்த படியானது. இப்பிரதேசத்தில் கொன்றை காயா, குருந்தம் முதலிய மரங்கள் நிறைந்த காடுகள் காணப்படும். முல்லைக் கொடி எங்கும் அடர்ந்து படர்ந்து இருந்தமையால், இந்நிலத்திற்கு 'முல்லை' என்ற பெயர் வழங்கப் பட்டது. இந்நிலத்தில் முல்லை மலர் அதிகமாய் இருக்கும்.



காட்டாறுகள் முல்லையில் பெருகிப் பாயும். பசுக்களே இந்நிலத்தின் விசேஷப் பிராணிகளாம். கானங்கோழியும் மயிலும் முல்லையில் வாழும் பறவைகள் ஆகும்.

காட்டாறுகளின் கரைக்குச் சமீபத்தில் **பாடி, சேரி**

எனப்படும் இந்நிலத்து ஊர்கள் விளங்கும். ஆயர் என்னும் பழந்தமிழ் மக்களே இந்நிலத்தில் வாழ்ந்தோராவர். அவர்களில் ஆடவர்க்கு **ஆயர், இடையர்** என்றும், பெண்டிர்க்கு **ஆய்ச்சியர், இடைச்சியர்** என்றும் பெயர்கள் வழங்கின. இங்குள்ள புன்செய்களில் வரகு, சாமை போன்ற தானியங்களை விளைத்தும், காடுகளில் பசுக்களை மேய்த்தும் இந்நில மக்கள் வாழ்ந்திருந்தனர். முல்லை நிலத்து அரசன் **குறும்பொறை நாடன்** என்று வழங்கப் பெற்றான்.

மாடுகள் மேய்த்தும், மாதரிடம் வேடிக்கை புரிந்தும் தம்மை மகிழ்வித்த மாயவனை திருமாலை அவர்கள் தெய்வமாகக் கொண்டனர். அவர்கள் மாயவனைக் கண்ணென்றே கருதிக் **கண்ணன்** என்னும் பெயரும் சூட்டினர். கோக்களைக் காத்த அவன் கோபாலனும் ஆனான். கண்ணன் ஆயர்பாடியில் புரிந்த திருவிளையாடல்களைப் பற்றி நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

மருதம்: நாடு நகரங்கள் நிறைந்து நன்செய் நிலங்கள் மிகுந்து காணப்படும் நிலப்பகுதியே மருத நிலம் ஆகும். மருதம் என்னும் மரம் மிக மலிந்து வளர்ந்து இருந்ததால், இந்நிலம் மருதம் எனப் பெயர் பெற்றது. வஞ்சி, காஞ்சி என்ற மரவகைகள் இங்கு அதிகமாக வளர்ந்திருந்தன. கிணறுகளும், பொய்கைகளும், ஆறுகளும் இந்நிலத்தை வளம்படுத்துவனவாம். தாமரை, செங்கழுநீர், குவளை ஆகிய நீர்ப்பூக்கள் மருத நிலத்தின் மலர் வகைகளாகும். எருமை, நாய் முதலிய பிராணிகள்



இங்கு உள்ள பிராணிகளாம். நீர்க்கோழி, நாரை, தாரா என்னும் பறவைகள் இந்நிலத்தில் அதிகமாய் இருந்தன.

மருத நிலத்து ஊர்களுக்குப் **பேரூர்,** **மூதூர்** என்ற பெயர்கள் வழங்கின. அவற்றில் வாழ்ந்த மக்கள் **உழவர்** ஆவர். பெண் பாலாருக்கு **உழத்தியர்** என்பது பெயராகும். நெற்பயிர் விளைத்தல் சம்பந்தமான உழவுத் தொழிலையே இந்நில மக்கள் புரிந்தனர். 'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிதாம்.' ஆதலின், இவர்கள் வாழ்க்கை மிக இனியதாகவே இருந்தது. செல்வத்திலும், கொடையிலும், நாகரிகத்திலும் இவர்கள் மேன்மையுற்று விளங்கினர். இந்நிலத்தில் செங்கோல் செலுத்திய வேந்தன் **ஊரன்,** **நாடன்** என்று வழங்கப் பெற்றான்.

'வரப்புயர நீருயரும்; நீருயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோல் உயரும்,' என்ற முதுமொழிப்படி, செல்வப் பெருக்கிற்கு உரிய தெய்வமான இந்திரனை இந்நில மக்கள் தெய்வமாகக் கொண்டனர். இந்திரனுக்கு இவர்கள் செய்துவந்த சிறப்பான விழாவிற்கு 'இந்திர விழா' என்பது பெயர்.

நெய்தல் : கடற்கரைப் பிரதேசமாகிய இந்நிலப் பாகத்தில் நெய்தல் என்னும் ஒருவித மலர் நிரம்பி இருந்தமையால், இந்நிலத்திற்கு இப்பெயர் இடப்பெற்றது. தாழையும் புன்னையும் இங்குச் செறிந்து வளரும். அவற்றின் மலர்களும் இந்நிலத்தில்உண்டு.



நீர்க் காக்கை, அன்னம் முதலிய பறவைகளும், சுறா, முதலை போன்ற நீர் வாழ் பிராணிகளும் இங்கு வாழும்.

மணற்கேணியும், உவர்க் கழியும் நெய்தல் நிலத்து நீர் நிலைகளாய் இருந்தன.

நெய்தல் நிலத்தில் கடற்கரை ஓரங்களில் விளங்கிய ஊர்கள் **பாக்கம், பட்டினம்** என்று பெயர் பெற்றன. பரத வர் என்னும் இந்நிலவாசிகள் மீன் பிடித்தல், உப்பு விளைத்தல், படகு ஓட்டுதல் போன்ற தொழில்களைச் செய்து வாழ்ந்தனர். இந் நில மகளிர் **பரத்தியர்** எனப் படுவர். இவர்கள் தலைவன் **துறைவன், சேர்ப்பன்** என்ற பெயர்களால் வழங்கப் பெற்றான். கடலுக்குக் கடவுளாகிய வருணனையே இவர்கள் வழிபட்டு வந்தார்கள்.



இந்த நான்கு வகை நிலங்களோடு **பாலை** என்பதொன்றையும் சேர்த்து ஐந்தாகக் கூறுவதுண்டு. நானிலத்தில் எது அழிந்து பாழாயினும், அது பாலை நிலமாகும். ஆதலின், சிறப்பாக மேற்கூறிய நான்கையே கூறுவது வழக்கம். பாலை நிலத்தில் பயிரேது. பச்சையேது! அங்கு வாழ்ந்த **மறவர், எயினர்** என்ற சாதியார், உடல் வருந்த உழைக்க வழியில்லாததால் வழிப்பறி செய்தே வாழலாயினர். இவர்கள் ஊர்களில் புகுந்து கொள்ளையிடுவதும் உண்டு. இந்நிலத் தலைவன் **எயினன்** என்பவனாவான். பாலை நிலத்து மக்கள் துர்க்கா தேவியைத் தங்கள் தெய்வமாகத் கொண்டிருந்தார்கள்.

ஆதி காலத்தில் தமிழ் நாடு இவ்வித இயற்கை நிலப் பிரிவுகளுடன் விளங்கியது. காலம் செல்லச் செல்ல மக்கள் பெருகப் பெருக, போக்குவரவு ஏற்பட்டு, யாவரும்

கலந்து வாழ்ந்து, நாளாவட்டத்தில் நானில மக்களும் ஒரு நில மக்களாய் விரவி வாழலாயினர்.

கேள்விகள்

1. குறிஞ்சி நிலம் எவ்வாறு அமைந்திருக்கும்?
2. அந்நில மக்கள் புரியும் தொழில்கள் எவை?
3. முல்லை என்று அந்நிலம் பெயர் பெறக் காரணம் என்ன?
4. முல்லை நிலத்துத் தானியங்கள் எவை?
5. முல்லை நிலத்துக் கடவுள் இயற்றிய திருவிளையாடல் ஒன்று கூறுக.
6. மருதம், நெய்தல் என்னும் நிலங்களின் அமைப்பைக் கூறுக.
7. முல்லை, நெய்தல் நிலத் தலைவர்கட்கு வழங்கிய பெயர்கள் எவை?

பயிற்சி

1. அடிப்படை, கொடையாளி, பேரூர், விரவி – இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுது.
2. சிலம்பு, பொருப்பு, வெற்பு, மலை – ஒரு பொருட் சொற்கள். இவை போன்ற சொற்களை இப்பாடத்திலிருந்து எடுத்தெழுது.
3. நானிலம் = நான்கு + நிலம், பேரூர் = பெருமை + ஊர், மூதூர் = முதுமை + ஊர். இம்மாதிரியான சொற்களை எடுத்து எழுதிப் பிரித்துக் காட்டு.
4. சிற்றூறு, பேராறு, சிறுகுடி, பெருங்குடி - பிரித்துக் காட்டு.
5. எயினன், மறவன், ஆயன், உழவன், பரதவன் – பெண்பால் கூறு.
6. குறத்தியர், இடைச்சியர், பள்ளத்தி - ஆண்பால் கூறு.

இலக்கணம்

ஒன்றன் பெயரே **பெயர்ச் சொல்.** மேசை, முருகன், கழுதை - முதலியன பொருள்களைக் குறிக்கும் பெயர்கள். இப்பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.

1. **பொருட்பெயர்** - பொருளின் பெயரைக் குறிப்பது.
   இராமன், சீதை, மேசை, பேனா.
2. **இடப்பெயர்** - இடத்தின் பெயரைக் குறிப்பது.
   வீடு, ஆறு, மலை, பள்ளிக்கூடம்.

3. **காலப்பெயர்** - காலத்தின் பெயரைக் குறிப்பது.
ஆண்டு, மாதம், வாரம், நாள், மணி, மார்கழி.
4. **சினைப்பெயர்** - உறுப்புக்களின் பெயர்களைக் குறிப்பது.
கிளை, கை, கால், வால், துதிக்கை.
5. **குணப்பெயர்** - பொருள்களின் குணத்தைக் குறிப்பது.
வெண்மை, நன்மை, செம்மை.
6. **தொழிற்பெயர்** - தொழிலின் பெயரைக் குறிப்பது.
வருதல், நடத்தல், ஆட்டம், செலவு.
7. **காரணப்பெயர்** - ஒரு காரணம் பற்றி இடப்பெற்ற பெயர்.
நானிலம், நாற்காலி, உடை, முக்காலி.
8. **இடுகுறிப்பெயர்** :—காரணம் புரியாமல் முன்னோர் வைத்தது.
மரம், தென்னை, கல், வண்டு.

2. வாக்கிய அமைப்பு

வாக்கியம் என்பது ‘ஏதேனும் ஒரு கருத்தைத் தெளிவாகச் சில பல சொற்களால் பூரணமாக வெளியிடுவது,’ எனப் பொருள்படும் ஒரு வடசொல். எனவே, வாக்கியம் என்பது, பொருள் முற்றுப்பெற்று நிற்கும் ஒரு சொற்றொடரே ஆகும். இவ்விதச் சொற்றொடர் பலவற்றால் விளக்கப்படும் விஷயம், அதன் அளவிற்கும் அமைப்பிற்கும் ஏற்ப **நூல்** என்றும், **வியாசம்** என்றும் பெயர் பெறும். புத்தகமாகிய ஒரு பெருங் கட்டடத்திற்கு வாக்கியங்கள் சுவர்களாயுள்ளன. ஆகையால், வாக்கியங்கள் எவ்வளவுக்கெவ்வளவு சொல்லின் இனிமையும் பொருள் நயமும் உடையனவாய் அமைகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு விஷயத்தின் அழகு மேம்பட்டு நிற்கும்.

எழுவாய், பயனிலை என்னும் இரண்டும் வாக்கியத்தின் முக்கிய உறுப்புக்களாகும். இவற்றுள் எழுவாய் பெயர்ச் சொல்லாகவும், பயனிலை பெரும்பாலும் வினைச்

சொல்லாகவும், சிறுபான்மை வினவாகவும், பெயராக வும் வரும். 'கந்தன் வந்தான்,' என்னும் வாக்கியம் வினை முற்றைப் பயனிலையாகப் பெற்றுளது. 'அவன் கந்தனு?' என்பது வினுப் பயனிலை பெற்ற வாக்கியமா கும். 'கந்தன் அவன்,' என்பது பெயர்ப்பயனிலை பெற்ற ஒரு சொற்றொடராம். எழுவாய் எப்பொழுதும் ஒரு பெயரைக் குறிப்பதாகவே இருக்கும். பயனிலை எழுவாயின் தொழிலை உணர்த்திப் பொருளை முடித்துக் காட்டும். இதற்கு 'வினை முற்று' என்னும் பெயரும் வழங்கப்படும். **செயப்படு பொருள்** என்பது வாக்கியத் தின் மூன்ருவது உறுப்பாகும். இதுவும் பெயர்ச்சொல் லாக நிற்கும். இம்மூன்று உறுப்புக்களையும் பெற் றுள்ள வாக்கியம் **செயப்படுபொருள் குன்ரு வினை**யைப் பய னிலையாகவும், எழுவாய், பயனிலை என்னும் இரண்டு உறுப்புக்களையே அடைந்துள்ள வாக்கியம் **செயப்படு பொருள் குன்றிய வினை**யைப் பயனிலையாகவும் கொள்ளும்.

மேற்கூறிய உறுப்புக்களுடன் அமையும் வாக்கி யமே பொருள் முற்றுப் பெற்றதாயும், இலக்கணமுடை யதாயும் கருதத்தகும். இவற்றைச் சரிவர அமைத்து எழுதவோ பேசவோ அறியாதவர், எவ்வளவுதான் விஷயங்களைக் கரைத்துக் குடித்திருந்தாலும், பயன் இல்லை. இதைக் குறித்து வேடிக்கையான கதை ஒன்று உண்டு: ஓர் ஆசிரியர் தம் வகுப்பிலுள்ள ஒரு மாணவ னைப் பார்த்துப் பாட புத்தகத்திலுள்ள ஒரு வாக் கியத்தைச் சுட்டி, "தம்பீ, இந்த வாக்கியத்திற்கு எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் கூறுவாய்," என்று கேட்டாராம். அப்பையன் அவற்றைக் கூறத் தெரியாமல் விழித்தானும். ஆசிரியர் அவனை நோக்கி, "அப்பா, நீ எழுவாய்; உன்னல் இங்கு ஏதும் **பயனிலை** எழுந்து போவதே **செயப்படு பொருள்**" என்ருராம். ஆத

லின், நீங்கள் ஒவ்வொருவரும் இவ்வுறுப்புக்கள் மூன்றையும் செம்மையாக உபயோகிக்கப் பழக வேண்டுவது மிகவும் அவசியம்.

இனி, வாக்கியத்தின் வகைகளைப் பற்றிக் கவனிப்போம்: அது **தனி வாக்கியம், சேர்க்கை வாக்கியம்** என இரண்டு வகைப்படும். முன் கூறிய உறுப்புக்களில் இரண்டு அல்லது மூன்றைச் சாமானியமாகப் பெற்று, அளவில் சுருக்கமானதாய் வருவது தனி வாக்கியம். பற்பல சொற்கள் எழுவாய், பயனிலை, செயப்படு பொருளைத் தழுவிச் சேர்ந்து வர, அளவில் பெருக்கமானதாய் வருவது சேர்க்கை வாக்கியமாகும். **தனி வாக்கியம்:** கண்ணன் வந்தான். **சேர்க்கை வாக்கியம்:** சிறந்த நீதிமானான பாண்டியன், மறையவர் வாயிற் கதவினைத் தட்டிய தனது கரத்தைத் தானே வாளால் வெட்டி எறிந்தான். இவ்விதச் சேர்க்கை வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைத் தழுவி வரும் சொற்றொடர் பொருள் முடிவு பெறாமல் நிற்பதால், **எச்சச் சொற்றொடர்** எனப்படும். இச்சேர்க்கை வாக்கியத்தில் 'சிறந்த நீதிமானான பாண்டியன்' என்பதும், 'மறையவர் வாயிற் கதவினைத் தட்டிய தனது கரத்தை' என்பதும் எச்சச் சொற்றொடர்களாகும். இத்தொடர்களைப் பற்றி இலக்கண விதிகளில் இன்னும் விரிவாக அறிந்துகொள்ளலாம்.

வாக்கியங்களை இயன்ற வரையில் சுருக்கமாக எழுதுவதே நலம். ஆனல், ஒரு கருத்தை விளக்கச் சிறிது சிறிதாகப் பல வாக்கியங்களை அமைத்தலாகாது. இயன்றவளவு கருத்துக்களைச் சில சொற்களில் தெளிவாகப் பொருள் புலப்படும்படி அடக்கிச் சுருக்கி எழுதுவது நடையழகு பெற்றுத் திகழும். 'வாசுதேவன் தெலுங்கு பேசக் கற்றுக்கொள்கிருன்; அவன் தெலுங்கு எழுதவும் கற்றுக்கொள்கிருன்.'—இவ்வாக்கியங்களை 'வாசு

தேவன் தெலுங்கு பேசவும் எழுதவும் கற்றுக்கொள்கிறான்,' என்று சுருக்கமாக எழுதிவிடலாமல்லவா? இரண்டாக எழுதுவது அனுவசியந்தானே ?

நீண்ட வாக்கியங்களை எழுதுவதில் மாணவர் விருப்பங் கொள்ளலாகாது. எழுதுவதில் மிக்க பழக்கம் உள்ளவர்கள்கூட நீண்ட வாக்கியங்களை இயற்றும்போது எடுப்பிற்கு ஏற்ற முடிப்பு அமைப்பதில் தவறிவிடுதல் கூடுமாகையால், எழுதப் பயிலும் மாணவர்கள் தவறு செய்ய நேரும் என்பது நிச்சயம். எந்த எச்சத்தை எப்படி முடிப்பது என்பதை ஆராய்வதில் காலம் வீணுகும். ஆகையால், ஒவ்வொருவரும் 'சுருங்கக் கூறி விளங்க வைக்கும்' வழியை நாடுதல் அவசியம்.

வாக்கியத்தின் இடையிடையே நேர்க் கூற்றுகள் வரும் போது, அவை சிறு வாக்கியத்தில் வருமானல் அயற்கூற்றுக மாற்றியும், பெரிய வாக்கியத்தில் வருங்கால் நேர்க்கூற்றுகவே அமைத்தும் எழுதுதல் நலம். ஏனெனில், நீளமான நேர்க்கூற்றை அயற்கூற்றுக்குவது ஒரு சிரமமான காரியம்; சிறிய நேர்க்கூற்றை அயற்கூற்றுக்குதல் எளிது.

நேர்க்கூற்று என்பது பிறர் கூறியதை அவர் கூறியதாகவே அமைப்பது. பிறர் கூறியதை மாற்றிப் படர்க்கைப்படுத்தி எழுதுவது **அயற்கூற்று** எனப்படும். இவற்றை முறையே **தன் மொழி, பிறர் மொழி** என்று கூறுவது உண்டு.

நேர்க்கூற்று : தந்தையார், "சுந்தரம், இந்நேரம் எங்கே சென்றிருந்தாய் ?" என்று கேட்டார்.

அயற்கூற்று : தந்தையார் சுந்தரத்தை அவன் அந்நேரம் எங்கே சென்றிருந்தான் என்று கேட்டார்.

நேர்க்கூற்றுக வரும் பாகத்தைக் குறிப்பிட மேற்கோள் குறியீடுகளை "........" இந்த விதமாக அமைத்துக் காட்ட வேண்டும்.

மேலே கூறப்பெற்ற விஷயங்களை நீங்கள் கருத்திற் கொண்டு, வகுப்பில் வாரந்தோறும் எழுதும் வியாசங்களை அமைக்க முயன்று, நல்ல எழுத்தாளர்கள் ஆவீர்களாக!

பயிற்சி

1. செம்மையாக, சொற்றொடர், பயனிலை, அயற்கூற்று — இவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுது.

2. சொற்றொடர் = சொல் + தொடர், வாரந்தோறும் = வாரம் + தோறும், பயனிலை = பயன் + நிலை, வாயிற்கதவு = வாயில் + கதவு, அயற்கூற்று = அயல் + கூற்று. இங்ஙனமே பிறவற்றையும் பிரித்துக் காட்டு.

3. மறவர், கரம், விதிகள், வாசுதேவன், பாண்டியன், வாள்— இடுகுறிப் பெயர்கள் எவை? காரணப் பெயர்கள் எவை?

4. சேர்க்கை, மாணவர், அழகு, நடை, இரவு, தெரு, கரம் — என்னென்ன பெயர்கள்?

இலக்கணம்

1. **மரம்**—இது எல்லா வகை மரங்கட்கும் **பொதுப் பெயர்** ஆகும் **பலா** — இது ஒரு வகை மரத்துக்கே **சிறப்புப் பெயர்** ஆகும்.

(i) விலங்கு, ஆடவர் — பொதுப் பெயர்கள்.

(ii) நாய், இராமன் — சிறப்புப் பெயர்கள்.

2. காற்றாடி — காற்றில் பறக்கும் எல்லாப் பொருள்களுக்கும் வழங்கும் **காரணப் பெயர்**. ஆயினும், இது **இடுகுறி** அளவாய் நின்று சிறுவர் விளையாடும் பட்டத்தையே குறிக்கும். ஆதலால், காற்றாடி— **காரண இடுகுறிப் பெயர்** எனப்படும்.

முள்ளி, முக்கண்ணன் — காரண இடுகுறிப் பெயர்கள்.

3. தன்மைப் பெயர்: நான், யான், நாங்கள், யாங்கள், நாம்.

முன்னிலைப் பெயர்: நீ, நீர், நீவிர், நீங்கள்.

படர்க்கைப் பெயர்: அவன், அவள், அவர், அது, அவை என்பனவும் பிற எல்லாப் பெயர்களும்.

3. கன்னனும் குந்தியும்

கன்னன் குந்தி தேவியின் மூத்த மகன். குந்தி தேவி இள வயதில் சூரியன் அருளால் கன்னனைப் பெற்ருள்; பெற்ற அன்றே பெட்டியில் வைத்துக் கங்கை யாற்றில் விட்டுவிட்டாள். கன்னன் அத்தினபுரத்துத் தேர்ப்பாகனுல் எடுத்து வளர்க்கப்பட்டான். அவன் இன்னவர் பிள்ளை என்பது எவருக்குந் தெரியாது. கண்ணன், திருமாலின் அவதாரம் ஆதலால், அவன் ஒருவனுக்கே இந்த இரகசியம் தெரியும்.

துரியோதனன் கன்னனது உயிர் நண்பன்; குந்தி தேவியின் பிள்ளைகளான பாண்டவர் ஐவர்க்கும் கொடிய விரோதி. அதனுல் கன்னனும் பாண்டவர்க்கு விரோதி ஆனுன். பாண்டவர்க்கும் துரியோதனுதியர்க்கும் போர் நடக்க ஏற்பாடு ஆயிற்று. அப்பொழுது கண்ணன் பாண்டவர்க்குத் துணை புரிவதாக வாக்களித்தான். அவன் தன் அத்தையான குந்திதேவியிடம் சென்று, "அத்தையே, 'இல்லை' என்று இரப்பவர்க்கு 'இல்லை' என்று சொல்லாது கொடுக்கும் கன்னன், நீ இளமையிற் பெற்ற பிள்ளை. அவன் இப்போது பாண்டவர்க்கு எதிர் நின்று போர் செய்ய இருக்கின்ருன். ஆதலால் நீ, அவன்பாற் சென்று உண்மையைக் கூறி, அவனை நின்பால் மீட்டு இழுத்துக்கொள். அவன் நமது பக்கம் சேரின், நமது பலம் பெருகும்" என்ருன்.

குந்திதேவி திடுக்கிட்டாள். அவளுக்கு அதுவரை கன்னன் தன் முதல் மகன் என்பது தெரியாது. அவள் கன்னன் குண நலங்களைக் கேட்டு மகிழ்ந்தவள். கன்னனுக்கும் அவளிடம் பெரு மதிப்புண்டு. குந்தி, "எனது ஒரு மகன் ஒரு கட்சியிலும், ஐவர் எதிர்க்கட்சியிலும் இருந்து போர் செய்வதெனின், அது கொடுமையே!" எனக்கூறிக் கன்னன் மாளிகை நோக்கி நடந்தாள்.

குந்திதேவியின் வருகையைக் காவலர் மூலம் அறிந்த கன்னன் ஓடோடி வந்தான்; அப் பெரிய வளைப் பணிந்தான்; உள்ளே அழைத்துச் சென்றான்; தக்க ஆசனத்தில் அவளை அமரச் செய்தான். கன்னன் குந்தியை நோக்கி, "அம்மா, மஹா வீரர்களாகிய பாண்ட வரைப் பெற்ற தாங்கள், என்னை நோக்கி வந்த காரணம் யாது?" என்று மரியாதையுடன் கேட்டான். குந்தி யம்மை அவனை அன்பொழுகப் பார்த்து, "அப்பனே, யான் என் திருமணத்துக்கு முன் சூரியன் அருளால் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றேன்; உலகப் பழிக்கு அஞ்சிப் பெற்ற அன்றே அக்குழவியைப் பெட்டியில் வைத்துக் கங்கையாற்றில் விட்டுவிட்டேன். அக்குழந்தை நீயே என்பதை இன்று அறிந்தேன்; அறிந்தவுடன், தாயன்பு பிடர் பிடித்துத் தள்ள நின்பால் வந்தேன்" என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

கன்னன், "அம்மா, இங்ஙனம் பல பேர் வந்து தாம் தாம் என் தாயார் எனக் கூறினர். நான் அனுப் பப்பட்ட பெட்டியில் இருந்த புடவையைத் தந்து அவர் களை உடுத்திக்கொள்ளச் சொன்னேன். அவர்கள் அதனை உடுத்த முடியாது அல்லற்பட்டார்கள். தாங்கள் அதனை உடுத்திக்கொள்ளின், தங்கள் கூற்றை யான் நம்புவேன்" என்று கூறி, உள்ளே சென்று அப் புடவையைக் கொணர்ந்தான். குந்தியம்மை அதனை வாங்கி உடுத்திக்கொண்டு ஒரு துன்பமும் இன்றி இருந் தாள். அது கண்ட கன்னன் தாயைக் கண்ட இளங் கன்றைப் போலத் தாயன்பு பெருக்கெடுக்கத் தரையில் விழுந்து தாயைப் பணிந்து கண்ணீர் விட்டான்.

குந்தியம்மை அவனைத் தன் மடிமீது இருத்தி, உச்சி மோந்து, அன்புக் கண்ணீர் விட்டு, "ஐயனே, நீ துரியோ தனனை விட்டு, உன் தம்பியராகிய பாண்டவரைச் சேர்.

அவர்கள் உன்னை அரியாசனத்து இருத்தி, முடிசூட்டி, நின் ஆணைவழி நிற்பர். அவர்களை உதவியாக வைத்துக் கொண்டு, நீ நாடாள்வாய்" என்றாள். அவ்வளவில் கன்னன், "தாயீர், தாங்கள் மற்றும் ஒரு முறை அவ்வாறு கூற வேண்டா. தாங்கள், யான் பிறந்த அன்றே என்னைத் துறந்துவிட்டீர்கள். அன்றுமுதல் என்னை வளர்த்தவன் திருதராட்டிரனது தேர்ப்பாகன் ஆவன். அவனுக்குப் பின் என்னை இன்றளவும் பாதுகாப்பவன் துரியோதனன். அவன், யார் என்று அறியத் தகாத என்னை அங்கநாட்டுக்கு அரசன் ஆக்கினன்; எனக்கு முடி சூட்டினன்; தன் பெருவாழ்வை எனக்கே தெரிந்து அளித்தான். அவனுடைய சுற்றத்தார், தம்பிமார் முதலியோரை என் அடி வணங்கச் செய்தான். அவன் என்னை உயிர்த்துணைவனாக மதித்து இருக்கிறான். இனி நடைபெறும் போரில் எனது துணையையே எதிர் பார்த்து நிற்கிறான்.

"ஒரு நாள் அவன் இல்லாத பொழுது நான் அவன் பெருந்தேவியுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டு இருந்தேன். அப்போது துரியோதனன் என் பின் புறமாக வந்தான். அதை நான் காணவில்லை. அவனைக் கண்ட பெருந்தேவி ஆட்டத்தை விட்டு எழுந்தாள். அவள் எழுந்த காரணம் அறியாத யான், அவளை இருக்கச் செய்ய அவளது மேகலையைப் பற்றினேன். அவ்வளவில் அஃது இற்று, மணிகள் தரையிற் சிதறுண்டன.

அந்தச் சமயத்தில் துரியோதனன் என் எதிரே வந்து நின்றான். அவனைக் கண்டு யான் திடுக்கிட்டேன். அவன் இல்லாத பொழுது அரசமாதேவியுடன் தனியே சொக்கட்டான் ஆடியதே தவறு. அத்துடன், அவள் மேகலையைப் பற்றியது அதனினும் பெருந் தவறு. யான் இவற்றை எண்ணிக் கலங்கிய போது, அவன்

என்னைப் புன்முறுவலோடு நோக்கி, "அண்ணு, யான் சிந்திக் கிடக்கின்ற இம் மணிகளைக் கோக்கவோ? பொறுக்கவோ?" என்ருன்.

"இந்த நிகழ்ச்சியை யான் எண்ணுந் தோறும் என் மனம் அவன்பால் குழைகின்றது. இத்தகைய உயிர் நண்பனை, போர் மூளுவது நிச்சயம் என்பதை நன்கு அறிந்தும், இச்சமயத்தில் விட்டுவருதல் எனது இயல் பிற்கு மாருனது. நான், அவன் செய்த நன்றியை மறத் தல் முடியாது. என் உயிர் போவதாயினும் சரியே. நான் அவனை விட்டு நீங்கேன். அவனுக்கு உறுதுணை யாக இருந்து, போரில் எனது செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுவே எனக்குப் புகழும் கருமமும் தருமமும் ஆகும். இது சத்தியம்," என்ருன்.

குந்தியம்மை, தான் தலைநாள் ஈன்ற மைந்தனது நற்குணத்தைக் கண்டு மகிழ்ந்தாள்; ஆயினும், அவன் பாண்டவர்பால் இல்லையே என்பதை எண்ணிக் கண் ணீர் விட்டாள். அவளது துயரங் கண்ட கன்னன், அவளது கண்ணீரைத் துடைத்து, "தாயே, தாங்கள் துன்பப்படுவதில் பயனில்லை. எல்லாம் ஊழ்வினைப்படி நடக்கும். தங்கட்கு வேண்டுவன கேளுங்கள், தருவேன்" என்று கனிந்து மொழிந்தான்.

குந்திதேவி, "அப்பனே, நீ வளர்க்கும் பாம்புக் கணையை அர்ச்சுனன் மீது ஒரு முறைக்கு மேல் விடாதே; மற்ற இளையரோடு கடுமையாகப் போர் செய் யாதே. நீ இந்த இரண்டு வரங்களும் எனக்களி" என் ருள். பிள்ளைகள் மீது வைத்த வாஞ்சையால் தாய் இவற்றைக் கேட்கிருள் என்பதை அறிந்து மகிழ்ந்த கன்னன், "அம்மா, அவ்விரண்டு வரங்களையும் தந் தேன். ஒரு கணைக்குத் தப்புபவன்மீது மறுகணை தொடுத்தல் ஆண்மையோ? மானமோ? மன்னவர்க்கு

அறமோ? யான் அரவக்கணையை ஒரு முறையே விடுவேன். உயிர் உளோர் பிழைப்பர்.'' என்றான்.

பின்னர்க் கன்னன் தாயை நோக்கி, "அம்மையே, தாங்கள் இப்போர் முடியும் வரை உமக்கு நான் மகன் என்னும் உண்மையைப் பாண்டவர் அறியாதபடி மறைக்க வேண்டும். இதனை அவர் அறியின், எனக்கு இப்பூமியாள் உரிமையைத் தருவர். நானோ அதனை என் உயிர்த்துணைவனான துரியோதனனுக்கே கொடுப்பேன். இது சத்தியம். நான் அர்ச்சுனனால் கொல்லப்பட்டதும் தாங்கள் போர்க்களம் குறுகி, எனது உடலை மடிமீது வைத்து, 'மகனே' என்று அழைத்து அழவேண்டும். யான் இறந்த பிறகேனும் எனது நற்குடிப் பிறப்பை உலகம் அறிதல் நல்லது. இந்த இரண்டு வரங்களையும் தாங்கள் எனக்கு அளித்தல் வேண்டும்'' என்றான். அம்மையும் இசைந்து, அவனிடம் விடைபெற்றுக் கண்ணீரும் கம்பலையுமாகச் சென்றாள்.

பிள்ளைகளே, கன்னனது உயர்குணம், தாயிடத் தன்பு, வீரகுணம் இவற்றைப் பாருங்கள். இத்தகைய பெருமக்கள் வாழ்ந்த நாடு நமது தாய் நாடு.

கேள்விகள்

1. கன்னனது பிறப்பைப் பற்றிய வரலாறு யாது?
2. குந்தியம்மைக்கு 'இரகசியம்' அறிவித்தவன் யாவன்? 'இரகசியம்' யாது?
3. குந்தி தேவியே தன் தாய் என்பதைக் கன்னன் எவ்வாறு உணர்ந்தான்?
4. துரியோதனனைப் பற்றிக் கன்னன் எவ்வாறு பாராட்டிக் கூறினான்?
5. கன்னன் துரியோதனனைப் பிரிய முடியாது என்பதற்குக் கூறிய காரணங்கள் எவை?
6. குந்தி தேவி கேட்ட இரண்டு வரங்கள் எவை?
7. கன்னன் கேட்ட இரண்டு வரங்கள் எவை?

8. கன்னன் குணாதிசயங்கள் எவை? அவை எவற்றால் விளங்குகின்றன?

9. நீ இப்பாடத்தால் அறியும் நீதி யாது?

10. இப்பாடத்திற்குப் பொருத்தமான வேறு 'தலைப்பு' யாது?

பயிற்சி

1. குண நலங்கள், பெருமதிப்பு, ஓடோடி, பெருக்கெடுக்க, இயல்பிற்கு—இவற்றை வாக்கியங்களில் உபயோகி.

2. ஆட்டம், மறத்தல், தொடுத்தல், அளித்தல்—தொழிற் பெயர்கள். இத்தகைய தொழிற் பெயர்களை இப்பாடத்திலிருந்து பொறுக்கி எழுது.

3. கண்ணன், அரண்மனை, பகல், கை, நன்மை, விடுதல்—என்னென்ன பெயர்கள்?

4. அரண்மனை; தேர், வில், முக்கண்ணன், வள்ளல்—என்னென்ன பெயர்கள்?

5. நாம், நீங்கள், அரசியர், அமைச்சர், மாளிகைகள், ஆறடுக்கு மாளிகை—என்னென்ன பெயர்கள்?

6. ஆட்டம், நடத்தை, ஏற்றுமதி, வருகை, வரவு, செலவு.—என்ன பெயர்கள்? ஏன்?

இலக்கணம்

1. அண்ணன், தம்பி, தங்கை, மாமன், மாமி—கிளைப்பெயர்கள்

2. குறவன், பார்ப்பனி, இடையன், வேளாளன்—சாதிப் பெயர்கள்.

3. கால், அரை, முக்கால், இரண்டு–எண்ணல். வீசை, பலம், மணங்கு, பாரம்–எடுத்தல். படி, மரக்கால், கலம், உழக்கு–முகத்தல். கெஜம், பர்லாங், மைல், அடி–நீட்டல்.—**இவை அளவைப் பெயர்கள்.**

4. பாடினான்–வினைமுற்று. பாடினவன்–இது பாடினவனை, அவன் செய்த (பாடுதலாகிய) வினையால் அணைந்த பெயர். எனவே, பாடினவன், பாடினவனை, பாடினானை–வினையால் அணையும் பெயர்கள். இப்பெயர் இருதிணை, ஐம்பால், மூவிடங்களிலும் வரும்.

(i) வந்தவளை, வந்ததை, வந்தவற்றை—**இருதிணை.**

(ii) வந்தவனை, வந்தவளை, வந்தவரை, வந்ததை, வந்தவற்றை—**ஐம்பால்.**

(iii) வந்தேனை, வந்தாய்க்கு, வந்தவனது—**மூவிடம்.**

4. குறிப்புகள் தயாரித்தல்

ஒரு பாடம் படித்தவுடன் அதில் உள்ள முக்கிய மான செய்திகளை நினைவிற் கோடற்குச் சில குறிப்பு களேனும் அவசியமாகும். அவற்றைச் சேர்த்து வைத் துக்கொள்ளுதல், அப்பாடத்தைக் கட்டுரையாக எழுதப் பயன்படும் அல்லவா? இங்கு இதற்குரிய உதாரணம் ஒன்று கூறுவோம்:

சென்ற பாடத்து விஷயத்தை எடுத்துக்கொள் வோம். "கன்னனும் குந்தியும்" என்னும் அப்பாடத் தின் முக்கிய அம்சங்கள் எவை?

1. கன்னன் பிறப்பு, வளர்ப்பு.
2. கண்ணன் குந்தியிடம் கன்னனைப் பற்றிக் கூறல்.
3. குந்தி கன்னனிடம் செல்லல்.
4. இருவருக்கும் நடைபெறும் உரையாடல்.
5. கன்னன் மனவுறுதி.
6. குந்தி பெற்ற வரங்கள்.
7. கன்னன் பெற்ற வரங்கள்.
8. நீதி.

இந்த எட்டுக் குறிப்புகளையும் நன்ருய் நினைவிற் கொள்ளும் மாணவன் இக்கதையை எச்சமயத்தும் நன் ருய் எழுதிவிடலாம் அல்லவா? இங்ஙனமே ஒவ்வொரு பாடத்திற்கும் தனி நோட்டுப் புத்தகத்தில் குறிப்புகள் (Hints) தயாரித்து வைத்தல் மிகுந்த நன்மை செய்வ தாகும். இதனைச் செய்துவரும் மாணவர்க்கே இதன் பெரும்பயன் விளங்கும்.

பள்ளிக்கூடத்தில் நடைபெறும் பாடங்களை எல்லா மாணவரும் வீட்டில் படிக்கலாம். படித்துப் பயன் என்ன? மறுநாள் ஆசிரியர் கேட்கும் போது பிள்ளை கள் விழிக்கிருர்கள். இவ்விழிப்புக்குக் காரணம் என்ன?

குறிப்புகள் தயாரித்துப் படியாமையே காரணம் ஆகும். ஆதலால் நீங்கள், ஒவ்வொரு பாடத்திற்கும் குறிப்புகள் தயாரித்து நன்முறையில் படித்து உயர்வீர்களாக!

இவ்வாறே புதியதாய்க் கட்டுரை ஒன்று எழுத நேரும் பொழுதும், அதனை எழுதுவதற்கு முன் யோசித்துக் குறிப்புகள் தயாரித்துக்கொள்ள வேண்டும். "இந்தியாவும் புத்தமதமும்" என்பது பற்றிக் கட்டுரை ஒன்று வரைவதாக வைத்துக் கொள்வோம்: இதற்குச் சரித்திரம் நமக்கு உதவி செய்கிறது. நாம் சரித்திர அறிவைக் கொண்டு இதற்குக் குறிப்புகள் தயார் செய்ய வேண்டும்; ஒவ்வொரு குறிப்பைப் பற்றியும் ஒரு 'பாரா' விஷயம் எழுதவேண்டும். இக் கட்டுரையைக் கீழ்க்கண்டவாறு தொடங்கி எழுத வேண்டும்:

"இந்தியாவும் புத்த மதமும்"

குறிப்புகள்:—1. புத்தமதத் தோற்றம் (புத்தர் வரலாறு)
2. அவருக்குப் பின்னும் அசோகருக்கு முன்னும் அதன் வளர்ச்சி.
3. அசோகரும் புத்த மதமும்
4. கனிஷ்கரும் புத்த மதமும்
5. ஹர்ஷரும் புத்த மதமும்
6. புத்த மதம் ஏன் அழிந்தது?
7. முடிவு

கட்டுரை

1. இந்தியாவில் வேத மார்க்கத்திற்குப் பிறகு தோன்றியது புத்தமதம். வேத மார்க்கத்தில் உயிர்க் கொலைகள் நிகழ்ந்தன. மக்கள் பிணி, மூப்பு, சாக்காடுகளால் துன்புற்றனர். இவற்றைக் கண்டு பொருத 'சித்தார்த்தர்' என்னும் சாக்கிய வம்சத்து இராஜகுமாரர்

தம் மனைவியையும் ஒரே மகனையும் பெற்றோரையும் அரச பதவியையும் துறந்து, உயிர்கட்கு இன்பம் தரத் தக்க வழி ஒன்றைத் தேடக் காட்டை அடைந்தார்; காட்டில் பல துன்பங்களை அனுபவித்தார்; பொறி புலன்களை அடக்கி ஒருமுகப்படுத்திப் பன்னெடுநாள் யோசித்தார்; உலகத் துன்பங்கட்குக் காரணம் ஆசையே என்பதை அறிந்தார். அவர், தாம் அறிந்து கொண்ட சன்மார்க்க போதனைகளை வட இந்தியா முழுவதும் சென்று பிரசாரம் செய்தார்: "மனிதர்கள் ஆசைக்கு இடந்தரல் ஆகாது. ஆசையே எல்லாத் துன்பங்கட்கும் காரணமாகும். இளைஞர் பெற்றோர், பெரியோர்களிடம் அன்புடனும் அடக்கத்துடனும் நடத்தல் வேண்டும். எவரும் எவ்வுயிர்க்கும் தீங்கு புரிதல் ஆகாது. எல்லோரும் எப்பொழுதும் நல்லதையே செய்ய வேண்டும். இவ்விதிகள் பின்பற்றப்படுமாயின், இவ்வுலகமே சுவர்க்கமாகும்" என்பனவே புத்தர் போதித்த போதனையின் சாரம்.

குறிப்பு :—இம்முறையில் மற்றப் பாராக்களையும் ஒழுங்காகச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் வேண்டும். எந்தக் கட்டுரை எழுத நேரினும், இந்த முறையைப் பின்பற்றுக.

கட்டுரைப் பயிற்சி

1. 'பத்திரிகைப் படிப்பு' என்பதற்குக் குறிப்புகள் தயார்செய்.
2. 'செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரை' என்னும் விஷயத்திற்குக் குறிப்புகள் தயார்செய்.
3. 'எனது உல்லாசப் பிரயாணம்' என்னும் பாடத்திற்குக் குறிப்புகள் தயார் செய்.
4. 'கன்னன்' வரலாறு எழுதக் குறிப்புகள் தயார் செய்.
5. 'ஏரியும் அதன் பயன்களும்' என்னும் விஷயம் எழுதக் குறிப்புகள் தயார் செய்.
6. 'மூங்கிலும் அதன் பயன்களும்' என்பதுபற்றி எழுதக் குறிப்புகள் தயார் செய்.

பயிற்சி

1. நின்றவன் இருந்தவனை அழைத்துப் பாடியவனுக்கு அறிமுகப்படுத்தினான்.—இதில் வினைமுற்று எது? வினையால் அணையும் பெயர்கள் எவை?

2. வருதல் கடினம் என்று வந்தவன் சொன்னான், படித்தவனைக் கேட்டல், இருந்தவன் விழித்தல் செய்தான், அஞ்சினவனே வருதல் அழகு.—இவற்றுள் தொழிற் பெயர்கள் எவை? வினையால் அணையும் பெயர்கள் எவை?

3. பாட்டி, படி, வீசை, மைல், யான், நீவிர், அவர்கள்—என்னென்ன பெயர்கள்?

இலக்கணம்

தொழிற்பெயர் விகுதிகள்: தல், அல், அம், கை, ஐ, வை, கு, பு, தி, சி, வி, உள், காடு, பாடு, மதி, மை, து முதலியன.

நடத்**தல்**, செல்**லல்**, கட்**டம்**, வி**லை**, வரு**கை**, நி**லுவை**, போக்**கு**, நடப்**பு**, மற**தி**, கவர்**ச்சி**, கல்**வி**, விக்**குள்**, சாக்**காடு**, ஏற்**பாடு**, ஏற்று**மதி**, நடந்த**மை**, நடப்ப**து**.

நடத்தல்—தொழிற்பெயர்.

நடந்தான்—வினைமுற்று.

நடந்தவன்—வினையால் அணையும் பெயர்.

பயிற்சி: கீழே தரப்பட்டுள்ளவற்றைக் கொண்டு மற்றையவற்றைக் கூறு:—

சென்றான், நிற்றல், தூங்கினானை, போதல், எழுந்தான், பாடினவனுக்கு.

5. கதைப் பாடம்

I

படங்களைக் கொண்டும் கீழ்வரும் சொற்களின் உதவி கொண்டும் இங்குக் குறிக்கப்பட்டுள்ள கதையைக் கூறுக.

வில்லியம் கௌபர்—ஆங்கிலப் புலவர்—அல்லி மலர்—கைத்தடி—கவனிக்கிறது—முயற்சி—பற்களால்—வியப்போடு—முத்தம்.





II

கீழ்வரும் குறிப்புகளைக் கொண்டு கதை எழுதித் தலைப்பும் கொடு:—

காகம்—முட்டைகள்—பாம்பு—நரி — யோசனை—அரசி—முத்து மாலை — புற்று—ஏவலாட்கள்—இடித்தல்—அடித்துக் கொல்லுதல்—மாலை எடுத்து மீளல்—கவலை—ஒழிந்தது.

III

கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கதை எழுது; தலைப்புக் கொடு :—

மரம்–வேடன்–இரண்டு புருக்கள்–இராஜாளி–குறி–புற்று–நகர்ந்து கொண்டே–தீண்டிற்று–குறி தவறி–புருக்கள்—சுகப்பட்டன.

பயிற்சி

கீழ்வருவனவற்றுள் தொழிற் பெயர்கள் எவை? வினைமுற்றுகள் எவை? வினையால் அணையும் பெயர்கள் எவை? ஒன்றை மற்ற இரண்டாக மாற்றுக.

எழுதினுன், படித்தல், நடந்தானை, ஆட்டம், செலவிட்டான், கொணர்ந்தவனுல்.

காக்கை, அண்டங்காக்கை; பறவை, மயில், பெட்டி, இரும்புப் பெட்டி; பிள்ளைகள், ஆண் பிள்ளை—பொதுப் பெயர்கள் எவை? சிறப்புப் பெயர்கள் எவை?

மாமி, ஆழாக்கு, முழம், கால், நான், அவள்—என்ன பெயர்கள்?

இலக்கணம்

1. கண்ணன் வெண்ணெய் தின்ருன். 2. கண்ணன் விளையாடினுன். 3. கண்ணன் வீடு சென்ருன்.–இவை மூன்று தனி வாக்கியங்கள். இவற்றை ஒரே தொடர் வாக்கியம் ஆக்குவதெப்படி? முதல் இரண்டு வாக்கியங்களில் உள்ள வினைமுற்றுகளை வினையெச்சங்களாக்கினுல் தனி வாக்கியம் அமையும்: ‘கண்ணன் வெண்ணெய் **தின்று விளையாடி** வீடு சென்ருன்.

இங்ஙனமே இந்த வினையெச்சங்களை வினைமுற்றுகள் ஆக்கினுல், தனித்தனி வாக்கியம் அமைந்துவிடும்.

பயிற்சி

(i) முருகன் சந்தைக்குப் போனுன்; பலாப்பழம் வாங்கினுன்; ஆறணு கொடுத்தான்; வீடு வந்தான்.—இதனை ஒரே வாக்கியமாக்கு.

(ii) முருகன் கிழவேடம் எடுத்து, வள்ளியிருந்த தினைப்புனம் சென்று, இறுதியில் அவளை மணந்தான்.—இதைத் தனி வாக்கியங்களாக மாற்று.

6. கம்பர்

வைகறை நேரத்தில் கதிரவன் உதயத்தை ஒட்டி முன்தோன்றும் செவ்வானத்தினுல் ஒளியின் வரவும், இருளினது செலவும் ஏக காலத்தில் நிகழ்ந்துகொண்டிருந்தன. புள்ளினங்கள் பொள்ளென ஒலித்துக் கூட்டங் கூட்டமாய்ப் பறந்து இரை தேடச் செல்லலாயின. உழவர் தத்தம் தோள்களில் கலப்பைகளைத் தாங்கியவராய், எருதுகளை ஓட்டிக்கொண்டு கழனிகளுக்கு ஏகிய வண்ணம் இருந்தனர். பெண்டிர் வீடுகளைப் பெருக்கி மெழுகிக் கோலமிட்டும், பாத்திரங்களைக் கழுவியும், செல்விருந்து செல்ல, வருவிருந்தினரை ஓம்புதற்குச் சித்தம் செய்வாராயினர். பனியால் நனைந்த பயிர்களின் பசுமைக் காட்சியினுலும், மனோகரமாக வீசும் சற்றுக் குளிர்ச்சியான காற்றுலும், அதிகாலையில் துயில் எழுந்தோர் மனத்தில் தூய்மை அரும்பியது. பகலவனும், கீழ்த் திசையில் மெல்ல உயர்ந்துகொண்டிருந்தான்.

அச்சமயம் சோழ நாட்டிலுள்ள கிராமம் ஒன்றினை அடுத்திருந்த பிடாரி கோவிலின் வெளித் திண்ணையில் அயர்ந்து நித்திரை போன சிறுவன் ஒருவன், துயில் நீங்கி, வாடையால் மெலிந்தவனுய், கையினுல் மெய் பொத்தியவாறு அமர்ந்திருந்தான். அவன் முகத்தில் கவலை குடிகொண்டிருந்தது. அவன் மிக்க தளர்ச்சியுற்றவனுய்க் காணப்பட்டான். தரையை நோக்கிய வண்ணம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவன், மெல்ல எழுந்து, ஊருக்குள் புகுந்து, வேளாளர் தெரு வழியே நடந்து சென்றுன். சென்றவன் தன்னெதிர்ப் பட்ட முதியவர் ஒருவரைக் கண்டு, தன்னை வேலைக்கமர்த்திக்கொண்டு ஆதரிக்கக் கூடியவர் எவரையேனும் தான் காணக்கூடுமோ என்று விசாரித்தான். அவர், "தம்பி

அதோ உள்ளது வள்ளல் இல்லம். அங்குச் சென்றால் காரியமாகும்,'' என்று கை காட்டி விட்டார்.

அகதியான சிறுவன் அங்ஙனமே வள்ளலின் மனை வாயிலை எய்தினான். அந்த வீட்டின் திண்ணையில் அமர்ந் திருந்த நடுத்தர வயதுள்ள ஒருவர், தம்மைச் சுற்றிக் கை கட்டி வாய் புதைத்த வண்ணம் நின்றுகொண் டிருந்த பண்ணையாட்களுக்கு, அன்று நடைபெற வேண் டிய காரியங்களைப் பற்றிக் கட்டளை இட்டுக்கொண்டிருந் தார். சிறுவன் தனது நுண்ணறிவால் அவர் ஒரு பெரிய தனிகர் என்பதையும் உதார குணமுடையவர் என்பதையும் தெரிந்துகொண்டு, சற்றுத் தூரத்தில் நின்றவாறே அவரை வணங்கினான். வணங்கலும், அவர், "தம்பீ, இப்படி வா!'' என்றழைக்க, சிறுவனும் அவர் அருகிற் சென்று, கை கட்டி நின்றான். அவர், "அப்பா, உன் ஊர் எது? பெயரென்ன? நீ என்பால் பெற விரும்புவது யாது?'' என்று வினவினார்.

சிறுவன் அவரைநோக்கித் தழுதழுத்த குரலில் பின்வருமாறு கூறலானான்: "ஐயா, யான் திருவழுந் தூரில் பிறந்தவன். என் தந்தையார் பெயர் ஆதித்தர் என்பது. கம்பர் எனப்படும் பூசாரி வகுப்பைச் சேர்ந் தவன் யான். சில ஆண்டுகட்கு முன்னர்த் தாயாரோடு அறுசுவையையும், தந்தையாரோடு கல்வி பெறும் பேற் றையும் இழந்தேன்; ஆதரவற்றவனாய், ஊர்தோறும் தங்கி, உணவிரந்துண்டு, நடைமெலிந்து இவ்வூர் நண்ணி னேன்; இவ்வூருக்கு வந்ததும் ஒருவரை நோக்கி, 'இவ் வூரின் பெயர் என்ன?' என்று கேட்டேன். அவர், 'திருவெண்ணெய் நல்லூர்' என்றார். நல்லூர் என்ற பெயர் செவியிற்பட்டதும், 'இங்கு நாம் நல்லுதவி பெற லாம்,' என்ற நம்பிக்கை எனக்கு உண்டாயிற்று. வழி நடையால் பாதங்கள் நோவ, நேற்றிரவு இவ்வூர்ப்

பிடாரி கோவிலை அடைந்தேன். அங்கிருந்த பூசாரி என்மீது இரக்கங்கொண்டு சிறிது உணவு அளித்தார். யான் அதனையுண்டு, அங்கேயே படுத்து உறக்கத்தில் ஆழ்ந்தேன். காலையில் ஒரு காராளர் முகத்தில் விழித்தேன். 'இவ்வூரில் என்னை வேலைக்கமர்த்திக்கொள்வார் எவரையேனும் தாங்கள் தெரிவிக்கக் கூடுமோ ?' என்று யான் வினவ, அவர் தங்களைக் கை காட்டி விட்டார். தாங்களே என்னை ஆதரிக்க வேண்டும். எனக்கு எல்லாம் தாங்களே."

இவ்வாறு சிறுவன் கண்ணீரும் கம்பலையுமாய் உரைத்துத் தம்மைக் கை கூப்பி வணங்கியதைக் கண்ட வள்ளலின் உள்ளம் உருகிவிட்டது. அவர் அச்சிறுவனை நல்ல விவேகி என்றறிந்துகொண்டார். உடனே அவர், "தம்பீ, கவலை வேண்டா. நீ இங்கு இருக்கலாம்," என்றார். இவ்வாக்கு, சிறுவன் மனத்தில் பால் வார்த்தது போல இருந்தது. தம்மை அடைந்தவர் குறைகளைக் கூர்ந்து அறிந்து போக்கும் அவ்வள்ளல், தம் குமாரன் பள்ளிக்குச் செல்லும்போது சுவடிகளைத் தூக்கிக்கொண்டு போகும் பணியில் அச்சிறுவனை அமர்த்தினர். தாயோடு அறுசுவையும் தந்தையோடு கல்வியும் இழந்ததாகக் கூறிய சிறுவன், வள்ளலார் மனையில் உண்டியும், பள்ளியில் கல்வியும் பெற்றான்.

இங்ஙனம், சில ஆண்டுகள் கழிந்தன. தூக்குத் தூக்கி வேலையே அச்சிறுவனைக் கைதூக்கி விடுவதாயிற்று. கணக்காயர் பாடம் சொல்லிவந்த போதெல்லாம் அவன் கவனமாய்க் கேட்டு மனத்தில் பதித்துக்கொண்டான்; நாளாவட்டத்தில் இலக்கண இலக்கியங்களில் பயின்று, வல்லவனானான். கவி பாடும் வன்மை அவனிடம் இயற்கையிலேயே அமைந்திருந்தது. வருத்தமின்றி விருத்தம் பாடுவதில் அவன் பெற்றிருந்த திறமை

கண்ட வள்ளலும் கணக்காயரும், 'இவன் ஈசுவரானுக்கிரகம் பெற்ற ஓர் ஆசுகவி,' என்று பேசிக்கொண்டார்கள். **சடையன்** என்று சகம் புகழும் அவ்வள்ளல், இளைஞனை மிகவும் கௌரவித்து அன்புடன் ஆதரித்து வந்தார். கம்பர் என்னும் பூசாரி வகுப்பில் பிறந்தவனாதலின், அவ்விளைஞனை யாவரும் **கம்பர்** என்ற பெயராலேயே அழைக்கலாயினர். நாளாகவாகக் கம்பர் புகழ் நாடெங்கும் பரவலாயிற்று.



கலா விநோதரான சடையப்ப வள்ளலது ஆதரவில் திருவெண்ணெய் நல்லூரிலும், அதன் சுற்றுப் புறத்திலுள்ள மற்ற ஊர்களிலும், கம்பரால் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. கம்பர் தெய்வாமிசம் பெற்றவர் என்று கண்டுகொண்ட சடையப்ப வள்ளல், அக்காலத்தில், அதாவது பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், சோழநாட்டு இறைமை பூண்டிருந்த இரண்டாம் குலோத்துங்கச் சோழனிடம் அவரை அழைத்துச்

சென்று, அறிமுகம் செய்து வைத்தார். குலோத்துங்கன் அவையிலிருந்த புலவர் அனைவரையும் கம்பர் தம் புலமையால் வென்று விளங்கினர். சோழன் அவரைப் புலவர் தலைவராக்கி, **கவிச் சக்கரவர்த்தி** என்ற பட்டமும் வழங்கினன்.

கம்பர் கவித்திறத்தில் மிகுந்த ஈடுபாடுடையவரான சடையப்ப வள்ளல், அவரைக்கொண்டு இராமாயண காவியத்தைத் தமிழில் இயற்றச் செய்ய வேண்டும் என எண்ணம் கொண்டார். அவர் கம்பரிடம் தம் கருத்தைத் தெரிவிக்க, அவர், "இராமாயணத்தின் பெருமையையும் எனது கல்வியின் சிறுமையையும் நோக்கின், இப்பணி என் ஆற்றலுக்கு மிகவும் அரியதே," என்று கூறிக் காலந் தாழ்த்து வந்தார். அதன்மேல் வள்ளல் ஒரு சமயம் சோழ வேந்தனைக் காணச் சென்ற போது, தமது விருப்பத்தை விண்ணப்பித்துக் கம்பரை அப்பணியில் தூண்டுமாறு வேண்டி வந்தார். அதற்கிணங்க, கம்பரை அம்மன்னன் இராமாயணத்தைத் தமிழில் இயற்றும்படி பணித்தான். கம்பர் ஒருவாறு துணிந்து, திருவெண்ணெய் நல்லூரை அடைந்து, வடமொழி வல்லுநர் பலரிடம் வான்மீகத்தையும் அதன் உரைகளையும், இராம கதையைக் கூறும் பிற நூல்களையும் கேட்டறிந்தார். சில மாதங்களில் அவர் அக்காவியத்தை நன்கு பாடி முடித்து **இராமாவதாரம்** என்று அதற்குப் பெயர் சூட்டினர்.

குலோத்துங்கனும், சடையப்ப வள்ளலும் ஏனைய புலவர்களும் நிறைந்த அவையில் அக்காவியம் முதற்கண் அந்தரங்கமாக அரங்கேற்றப் பெற்றது. பின்னர், அது ஸ்ரீரங்கத்திலிருந்த வைணவப் பெரியார்கள் முன்னிலையில், தமிழகத்தில் அந்நாளில் விளங்கியிருந்த புலவர் யாவரும் கூடியிருக்க, பகிரங்கமாகக் கம்பரால் அரங்

கேற்றம் செய்யப் பெற்று, ஒவ்வொரு தமிழ்வாணர் உள்ளத்திலும் நிலைகொள்ளலாயிற்று. இங்ஙனம் அவ ரால் இராமாயணம் அரங்கேற்றப்பட்ட மண்டபத்திற் குக் 'கம்பர் மண்டபம்' என்று இன்றும் பெயர் வழங்கு கிறது. அதில் அவரது உருவச்சிலை அமைந்திருப்பதை நாம் இன்றும் காணலாம்.

அனாதையாக வந்த நிலையில் தம்மை ஆதரித்து முன்னணிக்குக் கொண்டுவந்து, கவிச் சக்கரவர்த்தி யாக்கி, உலகம் உள்ளளவும் நிலைபெற்ற புகழைத் தாம் பெறும்படி செய்வித்த சடையப்ப வள்ளலுக்குத் தாம் எவ்வாறு நன்றி செலுத்துவதென்ற எண்ணம் கம்பரை இடையறாது அலைத்துக்கொண்டிருந்தது. இராமா யணம் இயற்றத் தொடங்கியதும், அவர் அதற்குத் தக்க சந்தர்ப்பம் வாய்த்ததெனக்கொண்டு, மிக உருக்கமான இடங்களில் எல்லாம் அவ்வள்ளலின் கொடைத்திறம் முத லிய குணநலங்களைப் போற்றிப் பத்துக் கவிகள் அமைத்தார். கம்பர் அவ்வள்ளலுக்குக் கூறும் நன்றி யுரை உள்ள பாடல்களில் சில, அடுத்த பாடத்தில் தரப் பெற்றுள்ளன. அவற்றை நீங்கள் படித்து இன்புறு தல் அவசியம்.

கேள்விகள்

1. கம்பர் பிறந்த குலம் யாது?
2. அவர் எவ்வாறு சடையப்ப வள்ளலின் ஆதரவைப் பெற்றார்?
3. கம்பர் எவ்வாறு இராமாயணம் பாடலாயினர்?
4. வள்ளல் மீது தமக்கிருந்த அன்பைக் கம்பர் எவ்வாறு வெளி யிட்டனர்?
5. இராமாயணம் எவ்வாறு அரங்கேற்றப் பெற்றது?

கம்பர் நன்றியுரை

1. விண்ணவர் போய பின்றை
விரிந்தபூ மழையி ளுலே
தண்ணெனுங் கான நீங்கித்
தாங்கருந் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு
மருந்தன சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே அன்ன
படைக்கலம் அருளி ஞனே.

2. அந்தணர் வணிகர் வேளாண்
மரபினர் ஆலி நாட்டுச்
சந்தணி புயத்து வள்ளற்
சடையனே யனைய சான்ருேர்
உயர்ந்தன மடிய மென்னும்
உவகையர் உவரி நாண
வந்தனர் இராமன் கோயில்
மங்கலத் துரிமை மாக்கள்.

3. அரியணை யனுமன் ருங்க,
அங்கதன் உடைவாள் வாங்கப்
பரதன்வெண் கவிகை ஏந்த,
இருவரும் கவரி பற்ற,
விரைசெறி குழலி ஓங்க,
வெண்ணெய்மன் சடையன் வண்மை
மரபுளோர் கொடுப்ப வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி.

4. மறையவர் வாழி; வேத
மனுநெறி வாழி; நன்னூல்
முறைசெயு மரசர் திங்கள்
மும்முறை வாழி; மெய்ம்மை

இறையவ னிராமன் வாழி ;
இக்கதை கேட்போர் வாழி ;
அறைபுகழ்ச் சடையன் வாழி ;
அரும்புகழ் அனுமன் வாழி.

பயிற்சி

1. வைகறை, செலவு (செல்லுதல்), வாடை, இறைமை, கணக்காயர்—தனித்தனி வாக்கியத்தில் அமைத்துக் கூறு.

2. இப்பாடத்தின் ஒவ்வொரு பாராவிற்கும் தலைப்புக் கொடு.

3. ஈஸ்வரானுக்கிரகம், இடையருது, நுண்ணறிவு, ஆகவாக, ஒருவாறு—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

4. இப்பாடச் செய்தியை 20 வரிகளில் சுருக்கி எழுது.

5. இவ்வரலாற்றை நீ கம்பராக இருந்து கூறு.

6. இப்பாடத்தின் 6-ம் பாராவில் உள்ள செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்று.

7. அதே பாராவில் உள்ள வினைமுற்றுகட்கு உறுப்பிலக்கணம் கூறுக.

8. கம்பர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டார்—சொல் இலக்கணம் கூறுக.

இலக்கணம்

வந்தான், வந்து, வந்த—இம்மூன்றனுள் 'வந்தான்' என்பதே கருத்து முடிந்து நிற்கும் வினைச்சொல். ஆதலின் இது **வினைமுற்று** எனப்படும். '**வந்து**' என்பது 'போனுன்' என்ருற்போன்ற வேறு ஒரு வினைச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சமாக (குறைச் சொல்லாக) இருக்கிறது. அதனல் இது **வினையெச்சம்** எனப்படும். '**வந்த**' என்பது 'பையன்' என்ருற்போன்ற ஒரு பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் எச்சமாக (குறைச் சொல்லாக) இருக்கிறது. அதனல் இது **பெயரெச்சம்** எனப்படும். இம்மூன்றும் வினைச்சொற்களே ஆகும்.

வந்தான்—வினைமுற்று.
வந்து (போ)—வினையெச்சம்.
வந்த (பையன்)—பெயரெச்சம்.

7. கிராமக் கைத்தொழில்கள்

பணத்தில் நிற்கிறது உலகம். விவரம் தெரிந்தது முதல் மூச்சுப் போகிற வரையில் 'பணம்', 'பணம்' என்று பாடுபடுகிருன் மனிதன். அஃது இல்லாதவனுக்கு உலகில் ஒன்றும் இல்லை. 'பணம் பந்தியிலே; குலம் குப்பையிலே.' பொருள் உள்ளவனைக் கல்வியும், தருமமும், இன்பமும், புகழும், உறவும், வெற்றியும் தாமே அடைகின்றன. ஏழையை ஏனென்று கேட்பாரில்லை; மண்ணில் அவன் மண்ணுக்கே சமானமானவன். தலை நிமிர்ந்து நிற்பதும், தலை வணங்கித் தாழ்வதும் பணத்தின் பலத்தாலேயே அன்ருே? நாம் இதற்கு என்ன செய்யலாம்? உலக இயல்பு இவ்வாறே இருக்கிறது. திருவள்ளுவரே, 'இல்லாரை **எல்லாரும்** எள்ளுவர்; செல்வரை **யாவரும்** செய்வர் சிறப்பு,' என்று சித்தாந்தம் செய்து விட்டார். ஆகவே, செல்வம் தேடுவது ஒவ்வொருவருடைய முதல் முயற்சியாக இருக்கிறது.

செல்வம் தேடுவதற்கு உரிய துறைக்ள் பலவாயினும், அவை யாவும் விவசாயம், கைத்தொழில், வாணிகம், உத்தியோகம் என்னும் நான்கினுள் அடங்கும். 'உழுவார் உலகத்திற்கு ஆணி.' ஆதலால், உழவே இவற்றுள் முதன்மையான தொழிலாகும். கைத்தொழிலை இரண்டாவதாகச் சொல்லலாம். இவை இரண்டின் நிலைக்கும் ஏற்றபடியே நடைபெறுவதாதலால், வாணிபம் மூன்ருவதே ஆகும். நாம் நான்காவதைப்பற்றிச் சொல்ல வேண்டுவதே இல்லை.

செல்வ நிலையில் ஒரு தேசம் சிறப்புற்று விளங்க விவசாயமும் கைத்தொழிலும் பெருகுதல் வேண்டும். இவை இரண்டையும் ஒரு தேசத்தின் இரண்டு கண்கள் என்று சொல்லத் தடையில்லை. இவற்றுள் விவசாயம் கிராமங்களிலேயே நடைபெறுவது; கைத்தொழில் சிறு

பான்மை கிராமங்களிலும், பெரும்பான்மை நகரங்களிலும் நிகழ்வது. இவற்றின் நிலையைப் பாதுகாத்துக் கண்காணிப்பது ஒவ்வொரு நாட்டினருக்கும் உரிய முக்கிய கடமையேயாகும்.

விவசாயம், கைத்தொழில் என்னும் இரண்டும் எல்லாராலும் செய்யக்கூடியவைகளே. கிராம வாசிகள் பயிர்த் தொழிலையே செய்பவராயிருந்த போதிலும், அஃது ஆண்டில் ஆறு மாத காலமே நடைபெறுகின்றமையால், மற்ற ஆறு மாத காலத்தில் அவர்கள் கைத்தொழில் செய்யலாம். அவர்கள் உழவுத்தொழில் செய்யும் காலம் போக, மற்றக் காலத்தைத் திண்ணைத் தூங்கிகளாய்ப் போக்குகின்றனர்; சிலர் ஊர் வம்பு பேசுவதும், வீண் சண்டை போடுவதுமாகப் பொழுது போக்குகிறார்கள். அவர்கள் நிலத்தில் பாடு இல்லாத காலத்தில், பணத்தட்டு ஏற்படக் கடன் வாங்கிச் செலவு செய்தல் நேருகிறது. இக்காலத்தில் எளிதாகச் செய்யக்கூடிய கைத்தொழில்களை அவர்கள் செய்வார்களானல், அது ஒரு தக்க வருவாய் ஆகுமல்லவா?

'கைத்தொழில்' என்பதற்குக் 'கையினல் செய்யப்படும் தொழில்' என்பது பொருளானலும், இயந்திரங்களால் செய்யப்படும் தொழில்களும் அதனுள் அடங்கும். இராட்டையில் நூல் நூற்றல், தறியில் நெய்தல், சாயம் போடுதல், கற்றாழை தென்னை சணல் முதலியவற்றின் நார்களைக் கொண்டு சாக்குப் பை, கம்பளம் போன்ற பொருள்களைச் செய்தல், உலோகங்களைக் கொண்டு மக்களுக்கு உபயோகமான பாத்திரங்களும் ஆபரணங்களும் செய்தல், தென்னை மட்டைகளைக் கீற்றாக முடைதல், கோரைப் பாய் பின்னுதல், மூங்கில் பிரம்பு இவற்றால் கூடை முடைதல் முதலான பல கைத்தொழில்கள் கிராம வாசிகள் செய்யக் கூடுபவைகளே.

இவை போன்ற கைத்தொழில்கள் இன்னும் அநேகம் உண்டு. ஒரு நாட்டில் இயற்கை வளப்பம் எவ்வளவுக்கு எவ்வளவு மிகுந்துள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு அது தனது கைத்தொழிலில் பெருகி வாழலாம். கைத்தொழில் ஓங்கினால்தான் செல்வம் பெருகும். செல்வப் பெருக்கைப் பொறுத்தே உள்ளது ஒரு தேசத்தின் உயர் நிலையும் தாழ்வும்.

முப்பத்தைந்து கோடி மக்கள் வாழும் நம் பாரத தேசம் இயற்கை வளத்தில் இணையற்றது. விவசாயம் பிறந்த இடமே இந்தியாதான். கைத்தொழிலுக்குவேண்டிய எந்தப் பொருளையும் விளைவிக்கக்கூடிய சீதோஷ்ண நிலை, இந்தியாவைப் போல வேறு எந்தத் தேசத்திற்கும் பொருந்தி இருக்கக் காணோம். நமது பூமி இத்துணை வளப்பம் உடையதாய் இருப்பதாலேதான் நாம் அதைப் 'பூதேவி' என்று தெய்வமாகக் கொண்டாடுகிறோம். பருத்தி, சணல், பட்டு, கற்றாழை, தென்னை முதலிய கைத்தொழிலுக்கு ஏற்ற தாவரங்கள் நம் நாட்டில் அபரிமிதமாகப் பயிராகின்றன. உலோகங்களும் போதிய அளவு கிடைக்கின்றன. கைத்தொழிலுக்குச் சாதனமான இவ்வளவு வசதிகள் இருந்தும், நாம் அவற்றைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்கின்றோமா? அதுதான் இல்லை. இந்தியாவின் குக்கிராமத்திலே விளைகிற பருத்தி இங்கிலாந்திலுள்ள 'லங்காஷயர்' இயந்திரச் சாலைக்குப் போய், ஆடையாகி, நமது இடையிலே ஏறுகிறது. இவ்வாறே நாம் பயன்படுத்தும் பொருள்கள் பலவும் நம் தேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களாயும், வெளி நாடுகளில் கைத்தொழில் செய்யப்பட்டவைகளாயும் இருக்கக் காணலாம். இதனால், நாம் நமது கைத்தொழிலைக் கைவிட்டிருக்கிறோம் என்பது விளங்கவில்லையா?

இவ்வாறு கைத்தொழில்களைக் கைவிட்ட நாம் வறியர்களாயும், அடிமைகளாயும் இருப்பதில் என்ன அதிசயம் இருக்கிறது? நேற்றுச் சுண்டைக் காயாய் இருந்த ஜப்பான் தேசம் இன்று பறங்கிக் காயாகிவிட்டது, கைத்தொழில் செய்து அள்ளிக் குவிக்கும் பணத்தால் அன்றோ? எல்லாத் தேசங்களும் கைத்தொழிலின் சிறப்பைக் கண்டு விழித்துக்கொண்டு விட்டன. நமது தூக்கம் இன்னும் சரிவரத் தெளிந்தபாடில்லை; கும்பகர்ணன் கதை வழங்கும் தேசமாகவே இருக்கிறது நமது தேசம்.

படித்தவன் பதவியை நாடுகிறான். பட்டிக்காட்டான் பயிர்த் தொழிலைக் கட்டிக்கொண்டு போராடுகிறான். இவை இரண்டுக்கும் இடையில் சிலர், கைத்தொழிலை அவர்கள் முப்பாட்டன் முறையில் செய்து வருகின்றனர். அதையும் ஆதரிப்பவர் இல்லை. ஆகையால், அவர்களும் அதைக் கைந்நழுவ விடுகிறார்கள்.

கைத்தொழில் நமது தேசத்தார்க்குப் பழகிப் பழகிக் கைவந்த ஒரு தொழிலே. கைத்தொழிலின் உன்னதச் சிகரத்தைக் கண்டவர் நம் முன்னோர்களே. எலி மயிரைக் கொண்டு நம் முன்னோர் எழில் மிக்க கம்பளங்கள் நெய்தார்கள் என்றும், பட்டாலும் பருத்தியாலும் நமது தேசத்தில் நெசவு நெய்யப்பெற்ற ஆடைகள் வெளி நாட்டவரால் மிகவும் மதிக்கப் பெற்றன என்றும் நமது சரித்திர நூல்கள் கூறுகின்றன. சிற்பம், சித்திரம் முதலான பல கைத்தொழில்கள் நமது நாட்டில் தலையோங்கி நின்றன. மஹாபலிபுரம் முதலான இடங்களிலுள்ள சிற்ப வேலைப்பாடு காண்பவரைத் திகைக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை. கைத்தொழிலில் 'பழம் தின்று கொட்டையும் போட்ட'வரின் சந்ததியார்களாகிய நாம், இப்போது குண்டூசிக்கும் அயல் நாட்டார்

கையை எதிர்பார்த்து நிற்கிறோம். கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் குறைவில்லாமல் உற்பத்தி யாகியும், அவற்றைப் பயன்படுத்தாமல் தொழிலற்றவ ராய் இருப்பதாலும்,வேறு உழைப்பால் வருந்தித் தேடும் பொருளைக்கொண்டு, அயல் நாடுகளிலிருந்து வரும் பண் டங்களை ஒன்றுக்குப் பத்தாக விலை கொடுத்து வாங்க நேர்வதாலும், இதனால் நமது பணம் நம்மிடையே தங் காமல் பிற நாடுகளுக்குச் சென்று விடுவதாலும், ஏழ் மையே நமது தலையெழுத்தாகிவிட்டது. இத்தலை யெழுத்தைத் திருத்தி எழுத வேண்டுமானால், நமது நாட் டிலுள்ள கிராமங்களில் எல்லாம் கைத்தொழில் பெருக வேண்டும்.

நம் பாரத தேசத்தில் ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொருகிராமத்திலும் சிறிய அளவில் எளிய முறையிலே ஆங்காங்கே கிடைக்கும் மூலப்பொ ருள்களுக்கு ஏற்றபடி கைத்தொழில்கள் நடைபெறுமா னால், பஞ்சம் பஞ்சாய்ப் பறந்துவிடும். நமது தேச மக் களுக்கு அத்தியாவசியமான பொருள்களில், பல பொருள்களை வேண்டிய அளவில் உற்பத்தி செய்து விட லாம். வேலையில்லாமல் திண்டாடுபவர் வயிறார உண்டு வாழ வழி பிறக்கும். இது ஏற்பட்டால் கல்வியும், கண் ணியமும், முயற்சியில் வெற்றியும் உண்டாவதில் தடை இல்லை.

கிராமக் கைத்தொழில் பெருகச் செல்வர்கள் உதவி புரிய முதலில் முன்வர வேண்டும்; கிராமங்களிலெல்லாம் கைத்தொழிற்சாலைகளை ஸ்தாபித்தும், தக்க தொழில் நிபுணர்களைக் கொண்டு தொழில்பயில விரும்புகிறவர்கட் குப் பயிற்சி அளித்தும், பொருள் முட்டுப்பாடு ஏற்படா மல் கொடுத்தும் உதவி புரிதல் வேண்டும். இவ் வாறு ஸ்தாபிக்கப்படும் தொழிற்சாலைகளில் உற்பத்தி

செய்யப்படும் பொருள்களைத் தாம் வாங்கியும், மற்றோரை வாங்கத் தூண்டியும், மக்களிடையே பரவச் செய்தல் அவசியம். இவையாவும் நிறைவேறுமானால், நாம் எல்லோரும் இன்புற்று வாழலாம்.

கேள்விகள்

1. உலக இயல்பைத் திருவள்ளுவர் எப்படிச் சித்தாந்தம் செய்துள்ளார்?

2. செல்வம் தேடுவதற்குரிய வழிகள் எவை?

3. எவை தேசத்தின் இரண்டு கண்களாம்?

4. எளிதில் செய்யக்கூடும் சில கைத்தொழில்களைக் கூறுக.

5. நம் தேசத்தில் கைத்தொழில் பெருகுவதற்கு அமைந்துள்ள சாதனங்கள் யாவை?

பயிற்சி

1. முட்டுப்பாடு, கண்காணிப்பு, இத்துணை, அபரிமிதம்—இவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுது.

2. கற்றாழை=கல்+தாழை, நான்காவது=நான்கு+ஆவது.—இவை போன்ற சொற்களைப் பிரித்துக் காட்டு.

3. உயர்நிலை × இழிநிலை.—இது போன்ற எதிர்ப் பதங்களை எடுத்து எழுது.

4. இப்பாடத்தில் வந்துள்ள பழமொழிகளைப் பொறுக்கி எழுது.

5. இந்தப் பாடத்தின் முதல் பாராவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் இவற்றைப் பொறுக்கி எழுது.

6. வந்தான், போன, நடந்து—இவற்றுக்கு ஏனைய இரண்டும் கூறு.

இலக்கணம்

1. வந்தான்—இறந்தகால வினைமுற்று.
   வருகிறான்—நிகழ்கால வினைமுற்று.
   வருவான்—எதிர்கால வினைமுற்று.

2. போய் (வந்தான்)—இறந்தகால வினையெச்சம்.
   போக (வருகிறான்)—நிகழ்கால வினையெச்சம்.
   போக (வருவான்)—எதிர்கால வினையெச்சம்.

3. வந்த (பையன்)—இறந்தகாலப் பெயரெச்சம்.
   வருகின்ற (பையன்)—நிகழ்காலப் பெயரெச்சம்.
   வரும் (பையன்)—எதிர்காலப் பெயரெச்சம்.

8. பத்திரிகை வாசித்தல்

பத்திரிகைகள் மிகுதியாக வாசிக்கப்படுகின்ற நாடே நாகரிகம் மிக்க நாடு—அறிவு மிகுந்த நாடு என்று சொல்லப்படும். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, இட்டாலி, ஜப்பான் முதலிய நாடுகளில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் வெளியாகின்றன. அவற்றைப் படிக்க லக்ஷக்கணக்கான மக்கள் ஆவலோடு காத்திருக்கின்றனர்.

பத்திரிகைகள் உலக நடப்புகளை அன்ருடம் வெளியிடுவன ஆகும். அவற்றில் அரசியல், சமூகம், கைத்தொழில், வியாபாரம், விஞ்ஞானம், இலக்கணம், இலக்கியம் முதலிய பல பொருள்கள் சம்பந்தமான செய்திகள் வெளியாகின்றன. முன்னேற்ற நாடுகளில் நடைபெறும் பல அரிய செயல்களைப் பத்திரிகை வாயிலாகக் காணும் பிறநாட்டார், தாமும் அவ்வத் துறையில் பயின்று முன்னேறுதற்குப் பத்திரிகைகள் பேருதவி புரிகின்றன.

நாம் நம் ஆயுட்காலத்தில் காண இயலாத தூர தேசங்களில் உள்ள மக்களைப் பற்றியும், அவர்தம் நடைமுறைகளைப் பற்றியும் அறிந்துகொள்ள அருந்துணை புரிவன பத்திரிகைகளே. ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் நடைபெறும் கொடிய போர்ச் செயல்களை அன்ருடம் நமக்கு அறிவிப்பனவும் பத்திரிகைகளேயாம். இந்தியப் பெருமக்களாகிய விவேகானந்தர், காந்தியடிகள், சர் சி. வி. இராமன், சர் ஜே. சி. போஸ், சர். எம். விஸ்வேஸ்வரையா போன்ருரை அவர்தம் குணாதிசயங்களோடும் ஆராய்ச்சிகளோடும் அறிமுகப் படுத்தினவை பத்திரிகைகளே அல்லவா? அம்மம்ம! பத்திரிகைகள் மக்கட்கு உலக அறிவை ஊட்டி வளர்க்

கும் செயற்கைத் தாய் என்னல் மிகையாகாது. அவற்றின் தொண்டைப் பாராட்டச் சொற்கள் போதா!

நமது தமிழ் நாட்டில் பத்திரிகை வாசிக்கும் பழக்கம் (இன்று ஓரளவு) மக்களிடையே விருத்தி அடைந்துள்ளது என்னலாம். இதற்குக் கல்வி வளர்ச்சியும் உலக நிகழ்ச்சிகளில் ஊக்கமும், இந்தியச் சுதந்தர வேட்கையுமே காரணங்கள் ஆகும். நமது தமிழகத்தில் தினசரிப் பத்திரிகைகள் உண்டு; வாரப் பத்திரிகைகள் உண்டு; மாதப் பத்திரிகைகள் உண்டு; சமயம், சாதி, விகடம், சினிமா, வியாபாரம், கைத்தொழில், கல்வி முதலிய தனித்தனிப் பொருள் பற்றிய பத்திரிகைகளும் உண்டு. இவை அனைத்தும் நமது தாய்மொழியிலேயே வெளியாகின்றன.

இன்றுள்ள **தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள்:** சுதேசமித்திரன், தினமணி, ஜெயபாரதி, விடுதலை, வீரகேசரி, தினகரன், தமிழ் முரசு என்பன.

வாரப் பத்திரிகைகள்: தாருல் இஸ்லாம், சைபுல் இஸ்லாம், திரு இருதய தூதன், நவசக்தி, சுதேசமித்திரன், தமிழ் மணி, ஹனுமான், ஹிந்துஸ்தான், குமரன், ஊழியன், நகர தூதன், குடி அரசு, சினிமா உலகம் முதலியன.

மாதப் பத்திரிகைகள்: ஜாதிச் சம்பந்தமான கருணீக மித்திரன், யாதவ மித்திரன், தனவைசிய மித்திரன், செங்குந்த மித்திரன் முதலியனவும்; பொதுப் பத்திரிகைகளான விநோதன், ஆனந்த போதினி, திருவிளக்கு முதலியனவும், இலக்கியப் பத்திரிகைகளாகிய கலைமகள், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில் முதலியனவும் ஆகும்.

வியாபார சம்பந்தமாகத் 'தன வணிகன்' முதலிய தாள்களும், விகடம் சம்பந்தமாக 'ஆனந்த விகடன்'

போன்ற தாள்களும், மத சம்பந்தமாகச் 'சித்தாந்தம்', 'திரு இருதய தூதன்', 'தாருல் இஸ்லாம்', முதலியனவும் உண்டு.

இப் பத்திரிகைகள் இன்று தமிழ்நாட்டில் வளர்ச்சி பெற்று வருகின்றன. எனினும் இவ்வளர்ச்சி நாட்டு ஜனத்தொகை நோக்க, மிக்க குறைவானதே ஆகும். மாணவர்கள் பத்திரிகைப் படிப்பை மேற்கொள்ளும் நாளே நமது நாடு முன்னுக்கு வரும் நன்னுள் ஆகும். மாணவர் தினசரிப் பத்திரிகைகளை அன்ருடம் படித்தல் வேண்டும்; புரியாத செய்திகளைப் பெற்ருேரை அல்லது ஆசிரியரைக் கொண்டு தெரிதல் வேண்டும்; பத்திரிகைகளில் பல அரிய பெரிய மஹாநாடுகளைப் பற்றியும், கல்வி சம்பந்தமான பிரசங்கங்களைப் பற்றியும் வெளிவரும் செய்திகளை நுணுக்கமாகப் படித்தல் வேண்டும். அச்செய்திகளில் உள்ள நுட்ப விஷயங்களை மாணவர், தம் குறிப்புப் புத்தகத்தில் தேதியிட்டுப் பேசியவர் பெயர் முதலியவற்ருேடு குறித்துக் கொள்ள வேண்டும்.

மாகாணக் கவர்னர் முதல் ஏழைத் தொழிலாளி வரை தகுந்தவர் பேசும் பிரசங்கங்கள் பல பத்திரிகைகளில் வெளிவரும். மதுவிலக்கு, தீண்டாமை, கோவில் நுழைவு முதலிய சமூகப் பொருள் பற்றிப் பலர் ஆங்காங்குப் பிரசங்கம் செய்வதுண்டு. விவசாயம், சீர்திருத்தம், நாட்டு நிலைமை முதலியவை பற்றிப் பல மஹாநாடுகளில் அறிஞர் பலர் பேசுதல் வழக்கம். இவை அனைத்தும் பத்திரிகைகளில் வெளிவரும். மாணவர் இவற்றைப் படித்துச் சிந்திப்பதால் பல பொருள் பற்றிய அறிவு அவர்கட்கு உண்டாகிறது; நாளடைவில் அவ்வறிவு விருத்தி அடைகிறது. தனித்தனித் தலைப்பிட்டுக் குறிப்புப் புத்தகத்தில் இச்செய்திகள் குறிக்கப்படல் வேண்டும். இக் குறிப்புகள் எக்காலத்தும் பயன்படுவன;

கட்டுரை எழுதவும், பிரசங்கம் புரியவும் பேருதவி செய்வன.

பத்திரிகைகளை வாங்கிப் படிக்கச் சக்தி இல்லாதவர் பொருட்டு, நகராண்மைக் கழகங்களின் பொருள் உதவியால் ஒவ்வொரு நகரத்திலும் பல இலவச வாசக சாலைகள் நடைபெறுகின்றன. அங்குப் பலவகைப் பத்திரிகைகள் வரும். மாணவர் அவற்றைப் பயன்படுத்தவேண்டும். அவ் வாசகசாலைகள் சிலவற்றில் சிறிய நூல் நிலையம் இருத்தலும் உண்டு. இருப்பின், அதனையும் மாணவர் பயன்படுத்தல் சிறந்ததே.

கேள்விகள்

1. பத்திரிகைகளின் பயன் யாது?
2. பத்திரிகைகள் எவ்வாறு அறிவை வளர்க்கும்?
3. இன்றுள்ள தமிழ்ப் பத்திரிகைகள் எவை?
4. குறிப்புப் புத்தகத்தில் குறிக்கவேண்டும் செய்திகள் எவை?

பயிற்சி

1. வந்த கந்தன் நிற்கின்ற பையனைப் பார்க்கிறான், நீ வரும் வேளையை நான் எதிர்பார்ப்பேன், அவன் நடந்துவருவான்.—இவற்றுள் உள்ள முக்கால வினைமுற்றுகள், வினையெச்சங்கள், பெயரெச்சங்களைக் குறி.

2. பத்திரிகை, விநோதன்; பெண்கள், சீதை; பறவை, மரம்—பொதுப் பெயர், சிறப்புப் பெயர், காரணப் பெயர், இடுகுறிப் பெயர் இவற்றைக் குறி.

3. தாடினவன் ஆடுகின்றவனைத் தேடி அலைந்தான்—வினைமுற்று, வினையால் அணையும் பெயர்கள், வினையெச்சம் இவற்றைக் குறி.

இலக்கணம்

1. இராமன் **எழுந்தான்**—இது இராமனே செய்யும் வினை—**தன் வினை**.

இராமன் **எழுப்பினான்**—இது இராமன் பிறனைச் செய்விக்கும் வினை—**பிற வினை.**

தன்வினை	**பிறவினை**
செய்	செய்வி
படி	படிப்பி
ஆடு	ஆட்டு
ஓடு	ஓட்டு
தூங்கு	தூங்குவி
கட்டு	கட்டுவி
வா	வருவி
பேசு	பேசுவி

2. இராமன் இராவணனைக் கொன்றான்.—இதில் 'கொன்றான்' என்பது இராமன் செய்த வினை. அதனால் இது **செய்வினை** எனப்படும்.

இராவணன் இராமனால் கொல்லப்பட்டான்.—இதில் 'கொல்லப் பட்டான்' என்பது இராமனால். செய்யப்பட்ட வினை. அதனால் இது **செயப்பாட்டு வினை** எனப்படும்.

9. செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரை

சேரன்—செங்குட்டுவன் சேர அரசருள் சிறப்பு வாய்ந்தவன். சேர அரசர் சேர நாட்டை ஆண்டு வந்தவர். சேர நாடென்பது சேலம், கோயமுத்தூர், மலையாளம் ஜில்லாக்களும் கொச்சி, திருவாங்கூர் என்னும் சமஸ்தானங்களும் சேர்ந்த நிலப்பரப்பு ஆகும். அந்நாடு சோழபாண்டிய நாடுகளைப் போலக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழ்மொழி பேசப்பட்ட நாடாக இருந்தது.

செங்குட்டுவன் தம்பியார் இளங்கோ அடிகள். அவர் துறவி ஆதலின் 'அடிகள்' எனப்பட்டார். ஒரு நாள் செங்குட்டுவன், இளங்கோ அடிகள், செங்குட்டுவன் மனைவியான இளங்கோ வேண்மாள், மதுரைத் தமிழ்ச்

சங்கப் புலவரான கூலவாணிகன் சாத்தனர் ஆகியவரு டன் மலைவளம் காணச் சென்றனன். அங்குக் குன்றக் குறவர் வந்து அரசனைப் பணிந்து, கண்ணகி வேங்கை மரத்தடியிலிருந்து கணவனேடு விண்ணுடு சென்ற விந் தையை விரித்துரைத்தனர்.

அப்போது அரசன் அவள் இன்னவள் என்று அறியாமையால் விழித்தான். அதுபோது அண்மை யில் இருந்த சாத்தனர் கண்ணகி வரலாற்றைக் கவி னுறக் கழறினர். அரசன் கேட்டு மகிழ்ந்து, தன் அரச மாதேவியை விளித்து, "பாண்டியன் இறந்தவுடன் அக் கணமே கணவனுடன் உயிர்விட்ட பாண்டிமாதேவி சிறந்தவளா? கணவனை இழந்த கடுந்துயர் உழந்த கண் ணகி சிறந்தவளா? எவள் பூசிக்கத் தக்கவள்?" என்ருன்.

அறிவிற் சிறந்த சேரமாதேவி, "காதலர் இறந்த கடுந்துயரத்தால் உலகவாழ்வை நீத்த இருமாதரும் நல்ல வர்களே ஆயினும், நம் நாடு நோக்கி வந்து, இங்கிருந்து வானுலகம் சென்ற பத்தினியே நாம் போற்றத் தக்க வள்" என்று விடை அளித்தாள். உடனே அரசன் தன் அமைச்சரை நோக்க, அவருள் ஒருவன், "அரசே, பத்தினிக் கடவுளுக்கு உரிய சிலை பொதிய மலையிலிருந் தும் எடுக்கலாம்; இமய மலையிலிருந்தும் எடுக்கலாம். முன்னதிலிருந்து எடுத்தால் காவிரியிலும், பின்னதி னின்று எடுத்தால் கங்கையிலும் சிலையை நீராட்டித் தூய்மை செய்தல் வேண்டும்," என்ருன். அரசன், "எம்போன்ற தமிழ்வேந்தர் தமிழ் நாட்டில் உள்ள பொதிய மலையிலேயே சிலை எடுத்தல் சிறப்பன்று. வட நாடு சென்று, எதிர்ப்போரை வென்று, இமயத்திலிரு ந்து சிலை கொண்டு மீளலே செவ்விது" என்ருன். உடனே நாளறி புலவன் வணங்கி, வடநாட்டு யாத்திரை க்கு உரிய நன்னளைக் குறிப்பிட்டான்.

இதற்கு இடையில் இமயத்திலிருந்து தெற்கே வந்த முனிவர் சிலர் சேரனைக் கண்டு, பேசிச் சென்றனர். அவர்கள், "ஆரிய அரசராகிய கனகனும் விசயனும் வட நாட்டு அரசர் பலர் கூடிய விருந்து ஒன்றில், 'தமிழ் அரசன் எவனோ இமயம் வரை வந்தானாம். அப்பொழுது நாம் இல்லை. இப்பொழுது எவனேனும் வருவானாயின், அவன் நமக்குத் தப்பி மீளல் அரிது' எனப் பேசிக் கொண்டனர்'' என்று அரசனிடம் கூறி அகன்றனர்.

அவ்வுரை கேட்ட சேரன் கண்கள் சிவந்தன; மீசை துடித்தது. அவன் அன்றே வடநாட்டு யாத்திரை செய்யப் புறப்பட்டான். அப்பொழுது அரண்மனை முரசம் முழங்கியது; வீரர்கள் ஆரவாரம் செய்தனர். அரசன் வீரர்க்கெல்லாம் 'பெருஞ் சோறு' அளித்தான்; படைத் தலைவர்கட்கு வேண்டிய சிறப்புச் செய்தான்; தன் மணி முடியில் வஞ்சி (போர்) மாலை சூடினான்; தன் வழிபடு கடவுளாகிய சிவபெருமான் திருவடி தொழுது பட்டத்து யானை மீது ஏறினான். அப்பொழுது திருமால் பிரசாதம் வர, அதனைத் தன் அழகிய தோளில் ஏற்றினான்.

இங்ஙனம் தலைநகரான வஞ்சிமா நகரினின்றும் அரசன் புறப்பட்ட பொழுது அவனை நாடக மகளிர் நன்முறையில் வாழ்த்தினார்கள். கரி வீரர், பரி வீரர், தேர் வீரர், கால் வீரர், அரசனது ஆற்றலைப் போற்றி வாழ்த்தினார்கள். நகரமாந்தர் நாவார வாழ்த்துக் கூறினர்; குன்றக் குறவரும் குறத்தியரும் குரவையாடி வாழ்த்தினர்; அவரவர் தம் தம் இல்லுறை தெய்வங்கட்குப் பூசையிட்டு அரசனது வெற்றியை வேண்டி நின்றார்கள்.

இவ்வாறு மக்கள் மனங்குளிர்ந்த வாழ்த்துப் பெற்ற சேரன் வஞ்சி மாநகரினின்றும் புறப்பட்டான்; வட

நாடு செல்லும் வழியில் நீலகிரி மலையில் தண்டுடன் தங்கினன். அப்போது அவனைக் காணக் கொங்கரும் குடகரும் வந்து ஆடல் பாடல்கள் நிகழ்த்தினர். அரசன் அவர்கட்குப் பரிசளித்து அனுப்பினன். அவர்கள் சென்ற பின் நூற்றுவர் கன்னர் என்னும் அரசனது தூதன் தக்க அரச மரியாதைகளுடன் வந்து சேரனைப் பணிந்தான். அவன், "அரசே, தங்கள் வடநாட்டு யாத்திரை அறிந்த எம் இறைவர், தாமே இமயத்திலிருந்து சிலை கொணர்வதாகக் கூறுகிறார்; தங்கட்கு அச்சிரமம் வேண்டுவதில்லை என்றார்; தங்கள் கருத்து யாதோ?" என்று கூறினன்.

செங்குட்டுவன், "ஐய, ஆரிய அரசர் தமிழ் அரசர் ஆற்றலை அறியாது இகழ்ந்து பேசினராம். அவர்களை அடக்கவே யான் வடநாடு படர்கிறேன்; அதே காலத்தில் பத்தினிக் கடவுளுக்கு உரிய சிலையும் இமயத்தினின்றும் பெறுவேன். உம் அரசர் யாம் கங்கையாறு கடக்க உதவி செய்தாற் போதும்" என்றான். தூதன் அடி பணிந்து அகன்றான். அவன் போன பின் பாண்டியன் அனுப்பிய உத்தியோகஸ்தர்கள் திரை கொண்டு வந்து பணிந்தனர். சேரர் பெருமான் அவற்றை ஏற்றான்.

பின்னர்ச்செங்குட்டுவன் பிரயாணப்பட்டுக்கங்கைக் கரையை அடைந்தான்; கன்னரின் படகுகள் உதவியால் கங்கையின் வடகரை அடைந்தான். அப்போது ஆரிய அரசரான கனகனும் விசயனும் வேறு பலரும் தத்தம் சேனைகளோடு வந்து சேரனைத் தாக்கினர். சேரன், புலிக் கூட்டத்துள் சிங்கம் பாய்ந்தாற் போலப் பகைவர் சேனையுட் பாய்ந்தான்; தமிழ்ப் படை ஆரியப் படையைத் தமிழ் வீரத்தோடு எதிர்த்தது. போர் பதினெட்டு நாழிகை நடந்தது. முடிவு யாது? சேரர் பெரு

மான் வெற்றிக் கொடி நாட்டினன். ஆரிய அரசர் போருக்கு அஞ்சி ஆளுக்கொரு திசை ஓடினர். கனக விசயர் சிறைப்பட்டனர்.

இமயத்தினின்றும் சிலை கொண்டுவரப்பட்டது. அது கங்கை நீரில் தூய்மை செய்யப்பெற்றது. சேரன், தமிழரசர் ஆற்றல் அறியாது எதிர்த்துத் தோற்ற கனக விசயரைச் சோழ பாண்டியர்க்குக் காட்டி, வஞ்சிமாநக ருக்கு அழைத்து வரும்படி ஆட்களை நியமித்து, வஞ்சி நோக்கிப் புறப்பட்டான்; புறப்பட்டு, அரசமாதேவியின் மனம் களிக்கவும், சேரநாட்டுக் குடிகள் உள்ளம் குளிர வும் வஞ்சிப் பேரூரை அடைந்தான்.

சேரன் ஆணைப்படி சிற்பநூல் வல்லார் பத்தினிச் சிலையைப் பாங்குறச் செய்து முடித்தனர்; அத்தெய்வத் திற்கு அழகிய கோவிலும் கட்டி முடித்தனர். குறித்த நன்னாளில் பத்தினிக் கடவுள் பிரதிஷ்டிக்கப் பெற்றது. விழாச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவினைக் காணச் சேரன் ஓலைப்படி இலங்கைக் கயவாகு மன்ன னும் நூற்றுவர் கன்னரும் பிற அரசரும் வந்திருந்தனர். அப்பொழுது கண்ணகி தெய்வ வடிவத்தோடு விண் ணில் தோன்றினள். அவள் கால்களில் பொற்சிலம்பு கள் பொலிவுற்றன; இடையில் மேகலை மின்னியது; கையில் வளையல்கள் கவினுற விளங்கின. காதில் வைரத் தோடு வளம்பெற இருந்தது. அரசன் பத்தி னிக் கடவுளைக் கண்டு அதிசயித்து நின்றான்.

அப்பொழுது கண்ணகித் தெய்வம், "என் கண வனைக் கொன்ற பாண்டியன் தீதிலன்; அவன் இந்திர லோகத்தில் இன்புற்று இருக்கின்றான். நான் அவன் மகள். நான் இக்குன்றத்தில் கோவில் கொண்டேன். எனக்குச் சிறப்புச் செய்த செங்குட்டுவன் நீடு வாழ்க!" என்று வாழ்த்தியது. அது கேட்ட அனைவரும் அத்

தெய்வத்தைப் பணிந்து, பக்திப் பரவசராய் நின்றனர். கயவாகு முதலிய அரசர்கள், "தாயே, சேரவேந்தரைப் போலவே நாங்களும் நினக்குக் கோவில் அமைத்துச் செய்யும் விழாவில் நீ எழுந்தருளல் வேண்டும்" என்று வேண்டினர். தெய்வம், "தந்தேன் வரம்" எனக் கூறி மறைந்தது.

அவ்வரசர்கள் அங்ஙனமே கோவில் கட்டி வழிபட்டனர். இலங்கையில் கயவாகு மன்னனால் எடுக்கப்பட்ட கண்ணகியின் உருவச் சிலையே இன்று பிரிட்டிஷ் கண்காட்சிச் சாலையில் இருப்பது. மாளுவ நாட்டில் பத்தினிக் கோவிலை இன்று 'பைதனி கோவில்' என்று வழங்குகின்றனர். தமிழ் நாட்டில் தோன்றிய இப் பெரும் புகழ்க் கற்பரசியைப் போன்றாள் ஒருத்தியை உலகம் காணல் அரிது ! அரிது !! தமிழர் வீரம் விளக்கிய செங்குட்டுவனைப் போன்ற அரசரைக் காணலும் அரிதே !

கேள்விகள்

1. சேர நாடு என்பது எது ?
2. அடிகள் என்பது யாரைக் குறிப்பது ?
3. செங்குட்டுவன் வடநாடு செல்லக் காரணம் என்ன ?
4. சேர மாதேவி விருப்பம் யாது ?
5. செங்குட்டுவன் இராஜாதி ராஜன் என்பது எவற்றால் விளங்குகிறது ?
6. பத்தினிக் கடவுள் தோற்றம் யாது ? அது தோன்றி யாது கூறியது ?
7. செங்குட்டுவன் குணாதிசயங்கள் எவை ?
8. நீ, இப்பாடத்தால் அறியும் நீதிகள் யாவை ?

பயிற்சி

1. பாண்டிமாதேவி, சேரமாதேவி—குறிப்புகள் வரைக.
2. கடுந்துயர், செவ்விது, பெருஞ்சோறு, பரிசளித்து, கவினுற—இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. அரிது × எளிது, விரித்து × சுருக்கி, அண்மை × சேய்மை, மண்ணுடு × விண்ணுடு—எதிர்ப்பதங்கள். இவை போன்றவற்றை இப்பாடத்திலிருந்தும் பிற பாடங்களிலிருந்தும் எடுத்து எழுதுக.

4. ஓடு, நில், எடு, விழு, பாடு—பிற வினைகள் எவை ?

5. நீட்டுவி, கட்டுவி, எழுப்பு, நிறுத்து—தன் வினைகள் எவை ?

6. பூனை எலியைப் பிடித்தது, மாடு பழத்தைத் தின்கிறது, குழந்தை பால் குடிக்கும்—செயப்பாட்டு வினைகளாக மாற்று.

7. பையனுல் பாடம் படிக்கப்படுகிறது, நாயால் அவள் கடிக்கப்பட்டாள், தோசை கிழவியால் சுடப்படும்—செய்வினைகளாக மாற்று.

இலக்கணம்

1. வா, வாழ், போ, நில், கெடு, அழி, படி, தூங்கு, எழு—இவை ஏவல் (கட்டளைப்) பொருளில் வரும் வினைச்சொற்கள். ஆதலால் இவை **ஏவல் வினை** எனப்படும்.

2. வருக, வாழ்க, அழிக, கெடுக—இவை மரியாதைப் பொருளில் வரும் ஏவல் வினைச்சொற்கள். ஆதலால் இவை **வியங்கோள் வினை** எனப்படும்.

இவை இரண்டையும் நன்கு கவனித்து, உனக்கு வந்துள்ள பாடங்களில் இருந்து இவற்றைப் பொறுக்கி எழுது.

10. கைத்தொழில் படங்கள்—

1. படங்களைப் பார்த்து, நடைபெறும் தொழில்களைக் குறிப்பிடு:

2. இப்படங்களைக் கொண்டு 'தென்னையும் அதன் பயன்களும்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

பயிற்சி

1. உங்கள் கிராமத்தில் நடைபெறும் கைத்தொழில்கள் எவை? ஒவ்வொன்றாக விளக்கிக் கூறு.

2. உழவன் செய்யும் வேலைகளைத் தொகுத்து வியாசமாக வரை.

3. தச்சன் தொழிலை ஒரு கட்டுரையில் விளக்கு.

4. 'கிராம அரசாட்சி'யைப் பற்றி ஒரு கட்டுரை, குறிப்புகளோடு எழுது.

5. வா, வருக, வாழ், வாழ்க, நில், நிற்க—ஏவல் எவை? வியங்கோள் எவை?

6. பெண்கள் இளநீர் விற்கிறார்கள், அவர்கள் ஓலையைப் பின்னினார்கள், இவர்கள் நாரினால் கயிறு பின்னுவார்கள்—செயப்பாட்டு வினைகளாக மாற்று.

7. எழுந்தான், கட்டுவித்தாள், ஊற்றினான், உற்றான், உறுவித்தது—தன்வினை, பிறவினைகளைக் குறி.

8. குடியானவர்கள் தென்னைமரப் பொருள்களால் நல்ல பயனை அடைகிறார்கள்.—சொற்கட்குச் 'சொல் இலக்கணம்' கூறு.

இலக்கணம்

1.	கண்ணன் வந்தான்	—	கண்ணன்
2.	கண்ணனைக் கண்டேன்	—	கண்ணன் + ஐ
3.	கண்ணனால் தரப்பட்டது	—	,, + ஆல்
	கண்ணனோடு வந்தேன்	—	,, + ஓடு
	கண்ணனுடன் வந்தேன்	—	,, + உடன்
4.	கண்ணனுக்குக் கொடு	—	,, + கு
5.	கண்ணனில் பெரியன் கந்தன்		,, + இல்
6.	கண்ணனது பை	—	,, + அது
7.	கண்ணனிடம் தா	—	,, + இடம்
8.	கண்ணா, வா.	—	கண்ணன் என்பதன் ஈறு கெட்டு, ஈற்றயல் நீண்டது.

இங்ஙனம் 'கண்ணன்' என்னும் இயற்பெயர் 7 வித வேற்றுமைகளை அடைகிறது. இவற்றை நோக்க, அதன் இயற்பெயர் வேறுபட்டதன்றோ? ஆகவே, வேற்றுமை 8 ஆகும்.

'கண்ணன்' என்னும் பெயரைச் சார்ந்து வந்து பொருளை வேறுபடுத்தியவை **'வேற்றுமை உருபுகள்'** எனப்படும். 8 எண்ணிக்கைகளையும் 8 வேற்றுமைகள் எனவும், அந்தந்த எண்ணில் வந்துள்ளது அந்தந்த வேற்றுமை உருபெனவும் அறிக.

11. எக்ஸ் ரே

பொது ஜன நன்மையின் பொருட்டுப் பாடுபடும் உண்மை வைத்தியர்களைப் போன்ற உபகாரிகள் வேறு எவரும் இல்லை என்றே சொல்லலாம். ஏனையோரைக் காட்டிலும் அவர்களுக்கு நாம் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவராவோம்; காய்ச்சல், குடல் சம்பந்தமான நோய்கள், சுவாசாசயத்தைப் பற்றிய வியாதிகள் ஆகிய பலவித உள் நோய்களாலும், பிளவை, வெட்டுக் காயம், எலும்பு முறிதல் முதலான வெளி நோய்களாலும் நலியும் மக்களுக்கு அவர்கள் ஆற்றி வரும் உதவி, கைம்மாறு செய்யத்தக்கது அன்று. கைக்கும் மருந்துகளை உண்ணத் தந்தும், கடும்பத்தியம் விதித்தும், இரணமானல் கத்தியால் அறுத்தும், நமது நோயைக் குணப்படுத்தும் இம் மருத்துவரை, தவறு செய்யுங்கால் அடித்தும் வைதும் நம்மைத் திருத்தி நல்வழியிற் செலுத்தும் தாய்க்கும் ஓரளவு நிகராகக் கூறலாம்.

இவ்வைத்தியர்கள் தமது அனுபவத்தாலும், ஆராய்ச்சியாலும் நவீன காலத்தில் பலவித மருந்துகளையும், கருவிகளையும், சிகிச்சை முறைகளையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். உறுப்புக்களின் கோளாறுகளைக் கண்கூடாகக் கண்டறியும் பொருட்டு மிகச் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள முறைகளில் '**எக்ஸ் ரே**' என்னும் நூதன ஒளியும் ஒன்று. இம்முறை புகைப்படம் பிடிப்பதைப் போன்றதேயாகும்.

சாதாரணமாக ஒரு பொருளைப் புகைப் படம் பிடித்தால், அப்படத்தில் அப்பொருளின் உருவமும் சாயலும் தெளிவாகத் தெரிகின்றன. ஒரு பெட்டியைப் படம் பிடிப்பதாக வைத்துக்கொள்வோம். அதன் வெளி வடிவம் அப்படத்தில் விளக்கமாகக் காணப்படுகிறது.

ஆனால், அப்பெட்டியின் உள்ளே இருக்கும் பொருள்களின் உருவமும் சாயலும் விழும்படி படம் பிடிக்க முடியுமென்றால், அது மிகவும் ஆச்சரியமாகத் தானே இருக்கிறது! அவ்வாறு செய்வதற்கு உதவும் ஒளிக்கே 'எக்ஸ் ரே' என்பது பெயர்.

இவ்வொளியைக் கண்டு பிடித்தவர் ஜரீச் என்னும் நகரில் 1845-ஆம் வருடத்தில் தோன்றிய **டாக்டர் கான்ராட் வில்லியம் ராண்ட்ஜன்** என்னும் நிபுணரே ஆவார். இவர் **உட்ரெக்கு** என்னும் பட்டணத்தில் வாசித்துத் தேறி, **உட்ஸ்பேர்க்கு** என்னும் நகரில் உள்ள சர்வகலா சாலையில் இரசாயன சாஸ்திர ஆசிரியராய் இருந்தார். அப்பால், 1889-ஆம் ஆண்டில் **மியூனிச்** சர்வகலா



சாலையில் இவருக்கு ஆசிரியர் பதவி கிடைத்தது. இவர் ஆராய்ச்சித் துறையில் தமக்கிருந்த பேருக்கத்தாலும் தமது நுண்ணறிவாலும் திறமையாலும் இரசாயன சாஸ்திர சம்பந்தமாகவும் மின்சார சம்பந்தமாகவும் பல உண்மைகளைக் கண்டு பிடித்தார். சுருக்கமாகவும், தெளிவாகவும், விரைவாகவும், கம்பீரமாகவும் பேசுவதிலும் இவர் வல்லவராய் விளங்கினார்.

இவர் ஒரு நாள் மின்சாரத்தின் தன்மைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். அச்சமயம் இவர் இருந்த அறையின் கதவுகளும், சாளரங்களும்

நன்கு மூடித் தாளிடப்பட்டிருந்தன. செறிந்த இருளில் **குரூக்ஸ் குழாய்** என்னும் கருவியின் உதவியால், இவர் தாம் கருதிய ஒரு விஷயத்தை ஆராய்ந்துகொண்டிருக்கும்போது, இவருக்கு எதிரிலேயிருந்த புகைப்படக் காகிதம் ஒன்றின்மீது மாத்திரம் மின்னலைப் போன்ற ஒரு வித ஒளி உண்டாயிற்று. அவ்வாறு உண்டானதன் காரணம் என்ன என்பதை இவர் ஆலோசியாமல், தமது ஆராய்ச்சியில் ஏதோ தவறு நேர்ந்துவிட்டது என்று கருதி, அன்று தமது பரீட்சையை அதோடு நிறுத்திவிட்டார்.

மறுநாள், இவர் முந்திய தினத்தில் செய்தது போலவே, அறையின் கதவுகளையும் சாளரங்களையும் அடைத்துத் தாளிட்டுக்கொண்டு, செறிந்த இருளில் இருந்த வண்ணம் தமது பரிசோதனையை ஆரம்பித்துச் செய்துகொண்டிருக்கும் போது, அன்றும் முதல் நாள் போலவே, அப் புகைப்படக் காகிதத்தில் அந்த மின்னலொளி தோன்றுவதைக் கண்டார்; கண்டதும், "இங்ஙனம் ஒளி தோன்றுவதற்கு இந்தக் குரூக்ஸ் குழாயின் தன்மையே காரணமாக இருத்தல் வேண்டும்" என்று கருதினர். இவருடைய நுண்ணறிவு அதோடு நிற்கவில்லை. 'குரூக்ஸ் குழாயிலிருந்து ஏதோ ஒரு புது விதமான அற்புத ஒளி வருகிறது. இவ்வொளி பொருள்களை ஊடுருவிச் செல்லும் சக்தி வாய்ந்தது. ஆகையால், பொருள்களின் வெளி உருவத்தோடு உட்பாகத்தையும் படம் பிடிக்க இது உதவக் கூடும்,' என்று எண்ணியபடியே இவர் தலை அசைத்துக்கொண்டார்.

உடனே இவர் அவ்விஷயத்தைப் பரிசோதிக்க விரும்பித் தம் பக்கத்திலிருந்த ஒரு பெட்டியை எடுத்து, அதற்குள் அங்கிருந்த சில பொருள்களைப் போட்டு மூடி, குரூக்ஸ் குழாயின் உதவியால் புகைப்படம் பிடித்தார்.

அப்போது அப்பெட்டியினுள் இருந்த பொருள்களின் உருவங்கள் யாவும் மிகத் தெளிவாக அப்படத்தில் விழுந்திருந்தன. அதைக் கண்டு இவர் அடைந்த ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் அளவிட்டுரைக்க எவரால் இயலும்!

இதன்பின் இவரது நுண்மதி அவ்வாராய்ச்சியின் மற்றொரு படியையும் காண முயன்றது. அதாவது 'இப்பெட்டியில் ஊடுருவிப் பாய்ந்து, அங்கிருக்கும் பொருள்களைத் தெளிவாகக் காட்டிய இந்தக் குருக்ஸ் குழாயின் ஒளி, மனிதன் உடம்பிலும் ஊடுருவி, எலும்பு நரம்பு முதலியவற்றையும் காண்பியாதோ?' என்பதே. இவ்வினு உள்ளத்தில் எழுந்ததும், இவர் தமது கரத்தின் மேல் குருக்ஸ் குழாயின் ஒளி படும்படி வைத்துப் படம் பிடித்தார். அந்தப் படத்தில் இவருடைய கையிலுள்ள தசை நிழல் போன்றும், எலும்புகள் கறுப்பாகவும் தெளிவாகவும் விழுந்திருந்தன. இது இவருக்கு மிக்க ஆச்சரியம் விளைத்தது. பின்னர் இவர் ஒரு மனிதனை அவ்வொளியின் உதவியால் படம் பிடித்துப் பார்த்துப் பார்த்துத் தமது ஆராய்ச்சியைத் திடப்படுத்திக் கொண்டு, பிறகு அதைப் பற்றிப் பத்திரிகைகளில் பிரசுரித்தார்.

அக்கட்டுரையை வாசித்தவர் தம் மூக்கின் மேல் கை வைத்தனர்; தாமும் பரிசோதித்துப் பார்த்துத் தெளிந்து, பெருவியப்புற்றுத் தத்தம் ஆராய்ச்சிக்கு ஏற்றவாறு இவ்வொளியினைப் பயன்படுத்திக் கொள்ளலாயினர். இவ்வொளிக்கு இவர் பெயரைக் கொண்டே **இராண்ட்ஜன் ஒளி** என்று பெயர் வழங்கலாயிற்று. 'அப்படியானல், 'எக்ஸ் ரே' என்று இதற்குப் பெயர் ஏற்படுவானேன்?' என்று நீங்கள் கேட்கலாம். இவ்வொளி கண்டு பிடிக்கப்பட்டதே தவிர, இஃது உண்டாவதற்கு

மூலகாரணம் என்ன என்பதை இதுகாறும் எவரும் கண்டறிய முடியவில்லை. ஆகையால், மூலகாரணம் இன்னதென விளங்காத ஒளி என்னும் பொருள்பட, இவ்வொளிக்கு 'எக்ஸ் ரே' (X-Ray) என்னும் பெயர் வழங்கிவருகிறது. கணிதத்தில் நீங்கள் 'எக்ஸ்' என்னும் எழுத்தை உபயோகிக்க இல்லையா? அது போலவே இதற்கும் 'எக்ஸ்' என்னும் எழுத்து வழங்குகிறது.

வைத்தியத்தில், அதிலும் விசேஷமாக இரணச் சிகிச்சையில் 'எக்ஸ் ரே' மிகவும் உபயோகமாயுளது. இவ்வொளியின் உதவியால் உட்புண் இருக்கும் இடம், எலும்பு முறிந்துள்ள இடம் முதலியவற்றைப் புகைப் படம் பிடித்துத் தெரிந்துகொள்ளலாம். ஐரோப்பிய மஹா யுத்தத்தில், போர் வீரர் உடம்பில் குண்டுகள் பாய்ந்திருந்த இடத்தைக் கண்டுபிடித்து இரணச் சிகிச்சை செய்ய, இவ்வொளி மிகவும் பயன்பட்டது. 'எக்ஸ் ரே'யின் உதவியால் வைத்திய முறைகளில் ஏற்பட்டுள்ள நன்மைகள் அளவிறந்தனவாகும். நோயாளியின் உடம்பினுள் உள்ள கோளாறுகள் அனைத்தையும் 'எக்ஸ் ரே'யால் படம் பிடித்துப் பார்த்துக்கொண்டு, ஏற்ற சிகிச்சை முறைகளை வைத்தியர் கையாண்டு வருகின்றனர்.

கேள்விகள்

1. வைத்தியர் எதனால் சிறந்த உபகாரிகளாகின்றனர்?
2. எக்ஸ் ரே என்பது என்ன?
3. எக்ஸ் ரே ஒளியைக் கண்டுபிடித்தவர் யார்?
4. எக்ஸ் ரே எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது?
5. எக்ஸ் ரேயின் உபயோகம் என்ன?

பயிற்சி

1. இரசாயன சாத்திரம், கட்டுரை, கைம்மாறு, நுண்ணறிவு—ஒவ்வொன்றையும் ஒரு வாக்கியத்தில் அமைத்தெழுது.

2. நுண்ணறிவு = நுண்மை + அறிவு, ஊடுருவி = ஊடு + உருவி, நுண்மதி = நுண்மை + மதி.—இவை போலப் பிற சொற்களையும் பிரிக்கப் பழகு.

3. விளங்கினர், இருக்கிறது, வருகின்றது—காலங்காட்டும் இடைநிலைகள் எவை ?

4. இரண்டாம் பாராவில் உள்ள வாக்கியங்களில் வந்துள்ள வே. உருபுகளைக் கட்டத்தில் அமைத்துக் காட்டு.

5. மூன்றும் பாராவில் உள்ள வினை முற்றுகள், வினையெச்சங்கள், பெயரெச்சங்கள் கூறு.

இலக்கணம்

பால் குடி, பாலைக்குடி—இவ்விரண்டில் முன்னதில் 'ஐ'—உருபு தொக்கி (மறைந்து) நிற்கிறது ; பின்னதில் வெளிப்படையாக இருக்கிறது. தொக்கி நிற்பது **தொகை** எனப்படும். பின்னது **விரி** எனப்படும்.

வேற்றுமை

எண்	**வேற்றுமைத் தொகை**	**வேற்றுமை விரி**
2	பால் குடி	பாலைக் குடி
3	தலை வணங்கு	தலையால் வணங்கு
4	வீடு செல்	வீட்டுக்குச் செல்
5	மலைவீழ் அருவி	மலையின்வீழ் அருவி
6	முருகன் வீடு	முருகனது வீடு
7	பெட்டிப்பணம்	பெட்டியில் (உள்ள பணம்)

இங்ஙனம் தொகை, விரி என்பன இரண்டாம் வே. முதல் 7-ஆம் வே. முடிய வரும். இவை உங்கள் பாடங்களில் அடிக்கடி வரும். இப்பாடத்திலிருந்து இவ்விரண்டையும் எடுத்து எழுது.

12. எனது உல்லாசப் பிரயாணம்

நான் ஏழாம் வகுப்பு மாணவன். என் பெயர் **நாராயணன்.** யான் எங்கள் ஆசிரியருடனும் ஏனையவகுப்பு மாணவருடனும் சரித்திரப் புகழ் பெற்ற **மஹாபலிபுரம்** சென்றிருந்தேன். அங்கு நான் அறிந்த அரிய விஷயங்கள் பலவாகும். நான் அவற்றை என் குறிப்புப் புத்தகத்

தில் குறித்துள்ளேன். நான் அறிந்த விஷயங்கள் அனைத்தும் இங்கு என் ஆசிரியர் கூறியவையே ஆகும். நான் உங்கட்கு இவ் விஷயங்களைக் கூறுகின்றேன். நீங்கள் காணும் இடங்களைப் பற்றிய செய்திகளை என்னைப் போலவே பலருக்கும் சொல்லி, அவர்கள் அறிவைப் பெருக்க வேண்டுகிறேன்.

மஹாபலிபுரம் என்பது, சென்னப்பட்டினத்திற்குத் தெற்கே சுமார் முப்பது மைல் தூரத்தில் கடற்கரையிலுள்ள ஓர் அழகிய சிற்றூர். இதற்கு முன்னாளில் **மாமல்ல புரம்** என்ற பெயர் வழங்கி வந்தது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட பல்லவனும், **மாமல்லன்** என்னும் மறு பெயருடையவனுமான முதல் நரசிம்ம வர்மனால் இங்குள்ள அரிய சிற்பங்கள் அமைக்கப்பெற்றமையால், அவன் பெயரையொட்டி **மாமல்ல புரம்** என்ற பெயர் இதற்கு ஏற்பட்டது. தொண்டை நாட்டு வைணவ ஸ்தலங்களுள் ஒன்றான **திருக்கடன்மல்லை** என்பதும் இந்த மஹாபலிபுரந்தான். 'கண்டவருக்கு விருப்பத்தை ஊட்டும் நிதிக்குவியலுடன், பெரிய கைகளையுடைய ஆண் யானைகளையும் நவமணிக் குவியல்களையும் சுமந்து, அசைந்தாடி வரும் மரக்கலங்கள் இடையறாத துறைமுகத்தையுடைய மல்லை,' என்று திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றுள்ள இவ்வூர், இப்பொழுது பெரும் பாகம் கடலாற் கொள்ளப்பட்டும், மற்றப் பாகங்கள் மணலால் மூடப்பட்டும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றது.

நம் முன்னோரது சிற்பம் அமைக்கும் திறமையைக் கண்டறிய வேண்டுமானால், இந்த மஹாபலிபுரத்திலுள்ள 'சப்த ஆலயங்கள்' என்னும் கற்கோவில்களைக் காண்பதே போதும். அவற்றில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் நமது உள்ளத்தைக் கொள்ளை கொள்

ளும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வூரிலுள்ள மஹா விஷ்ணு ஆலயத்தின் பின் புறத்திலும், ஒழுக்கெண்ணேசுவரர் கோவிலின் பக்கலிலும் உள்ள சிற்பங்கள் மிக வியக்கத் தக்கவை.

இங்குப் 'பஞ்ச பாண்டவர் ரதங்கள்' என வழங்கும் கற்கோவில்கள் ஐந்து உள்ளன. இவை தனித்தனியே



கற்பாறைகளில் குடைந்து சீரிய சிற்பங்களுடன் அமைக்கப்பட்டுள்ள ஒற்றைக்கல் கோவில்களாகும்.

மேற்கூறிய ஐந்தில் மிகப் பெரியது தர்மபுத்திர ரதம். இது மூன்று வாயில் நிலைகளையுடைய மூன்று அடுக்குக் கோவிலாய்ச் சித்திர வேலைப் பாடுகளுடன் மிளிர்கின்றது. இரண்டாவது அடுக்கின் நடுவில் கர்ப்பக் கிருகம் மாடப் புரையைப் போலச் சிறியதாக வெட்டி அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடியில் சோமாஸ்கந்த விக்கிரகம் செதுக்கப்பட்டுள்ளது. இத்தரும புத்திர ரதத்தை அடுத்துள்ள பீமசேன ரதத்தின் முன்னும்

பின்னுமாக, மண்டபங்கள் குடைந்து நிருமிக்கப்பட்டுள் ளன. பீமசேன ரதத்தை அடுத்திருக்கும் அர்ச்சுன ரதத்திற்கும் திரௌபதி ரதத்திற்குமாகச் சேர்த்து ஒரு முன்மண்டபமும், யானை விக்கிரகமும், சிங்கச் சிலையும் மாறிமாறி இருக்கின்றன. திரௌபதி ரதம் என்று சொல்லப்படுவது ஒரு துர்க்கையின் கோவிலே ஆகும். இது கூரை வீட்டைப் போலக் கல்லில் செதுக்கப்பட்டுள் ளது. இதன் பக்கத்திலுள்ள நகுல சகாதேவ ரதம் வேலை தொடங்கி அரையாக விடப்பட்ட நிலையில் காணப் படுகிறது. இந்த ரதக் கோவில்களின் சிற்ப வேலைப் பாட்டைக் காண்பவர் வியப்பது ஒரு புறமிருக்க, திகைப் பது திண்ணம்.

திரௌபதி இரதத்தின் முன்புறம் ஒரே கல்லிற் செதுக்கப்பட்ட யானையின் உருவச்சிலை ஒன்றுண்டு. இதனை அடுத்தே 'பகீரதன் தவம்' என்ற சிற்பம் இருக் கிறது. அச்சிற்பம் சுமார் 29 கெஜ நீளமும், 10 கெஜ உயரமும் உடையது. அதில் மனிதர், தேவர், மிருகங்கள் உருவமாக 150க்கு அதிகமான உருவங்கள் காணப்படு கின்றன. இருபுறமும் பெரிய பாறைகளால் அடைக்கப் பட்டு, அவைகளின் நடுவே தோன்றும் ஒரு பெரும் பிள வும், அப்பிளவில் நாகர், நாக கன்னியர்களின் சிலைகள் காணப்படுதலுமே அதன் முக்கிய பாகமாகும். இரண்டு பெரும்பாறைகளுக்கு நடுவில் தோன்றும் அகன்ற பிள வானது இயற்கையாகவே மழை நீர் பாயும் ஓர் அருவி யின் வழியாகும். கங்கை தேவ லோகத்தினின்று இறங்குவதை அது குறிக்கின்றது. மழைக் காலத்தில் அதன் வழியாகப் பாயும் நீரும், அப்பாறையின்மீது தங்கும் மேகமும், படும் மின்னல் ஒளியும், கங்கை வந்த வேகத்தால் ஏற்பட்டன போல, இயற்கையாகவே அந்த வரலாற்றைச் சிறப்பித்துக் காட்டுகின்றன. அதிலுள்ள

பிளவுக்கு வடபுறத்தில், ஒரு யானை அப்பிளவுக்கு நேராகத் தன் துதிக்கையை நீட்டிக்கொண்டிருப்பது போலவும், அதன் பின்புறம் மற்றொரு களிறு நிற்பது போலவும் அமைத்துள்ள சிற்பியின் கற்பனா சக்தியைக் கண்டு பரவசமாகாதவர் எவருமிலர்.

அச்சிற்பத்திற்குத் தென்பாலுள்ள மற்றோர் இடத்தில் கிருஷ்ண பகவான் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து, நந்தகோபனுக்கும், ஆயருக்கும், அவர்களது அருஞ் செல்வமாகிய ஆக்களுக்கும் அடைக்கலம் அளித்தது சித்திரிக்கப் பெற்றுளது. திரௌபதி இரதத்தில் பலவித ஆயுதங்களை ஏந்திய எட்டுக் கரங்களுடன் துர்க்கா தேவி, பாயும் சிங்கத்தின்மீது ஏறி, மகிஷாசுரனை வதம் செய்வது போல ஆக்கப்பட்டுள்ள அரிய சிற்பத்தின் அழகை நீங்கள் பார்த்தால், ஆச்சரியப்படுவீர்கள். அதற்கு எதிரில் இருக்கும் திருமாலின் 'சேஷ சயனம்' மிக நுட்பமான சிற்ப வேலைப்பாடுடையது. பூதேவியை அணைத்துக்கொண்டு, ஆதிசேடனுடைய தலையில் தமது ஒரு பாதத்தை ஊன்றித் தேவர்கள் துதியைக் கேட்ட வண்ணம் நிற்கும் திருமாலின் ஆதிவராக அவதாரச் சிற்பமும், மாவலியிடம் வாமனனாய் வந்து மூன்றடி மண் வேண்டி மூவுலகு அளந்த திரிவிக்கிரமாவதாரச் சிற்பமும், அவற்றை அமைத்த சிற்பியின் புகழை நிலை நிறுத்துவனவாம்.

இங்குள்ள ஒழுக்கெண்ணேசுவரர் கோவிலில் காணப்படும் இலிங்கம் பன்னிரு பட்டைகள் உடையதாயும், பாதிக்குமேல் உடைத்தெடுக்கப்பட்டதாயும் இருக்கிறது. இக்கோவில் விமானத்தின்மீது முற்காலத்தில் கரையை நோக்கி வரும் கப்பல்களுக்கு வழியைப் புலப்படுத்தும் பொருட்டுப் பெரிய விளக்குகளை ஏற்றி வைப்பது வழக்கமாம். இப்பொழுது இவ்வூரில் ஒரு

பெரிய கலங்கரை விளக்கம் (Light House) இருக்கிறது. இவ்வாலயத்தின் முன்னரிருந்து அலை வீசும் கடற் காட்சியை நேரிற் கண்டே இன்புற வேண்டும்.

மஹாபலி புரத்திலுள்ள 'ஏனத்தின் உருவாகி நிலமங்கை எழில் கொண்ட ஞானத்தில் ஒளி உருவின' ரான ஆதி வராகமூர்த்தி கோவில் மிகப் பழமை யானது. இத்தலம் வலவெந்தை எனப்படும். ஆழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வார் அவதரித்தது இத்திருப்பதியிலேயே. கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முன்னிருந்தவரான இவர், இதனை ஒரு பெரிய துறைமுகப் பட்டினமாகக் கூறுவதிலிருந்து, இதன் பழமை விளங்கும்.

மஹாபலி புரத்திற்குச் செல்பவர், அங்குள்ள சிற்பங்களின் உயர்வையும், முற்காலச் சிற்பிகளின் அரிய திறமையையும், அரசர்கள் அக்காலத்தில் சிற்பக் கலைக்குக் காண்பித்து வந்த செல்வாக்கையும் எண்ணி உள்ளம் பூரிப்பதுடன், அங்குள்ள ஆலயங்களின் பழுதுபட்ட நிலையைப் பார்க்கப் பார்க்க மனம் புழுங்காமல் இரார். மேல் நாடுகளிலிருந்து வரும் எந்த யாத்திரிகரும் மஹாபலிபுரத்திற்குப் போகாமல் திரும்புவதில்லை. அவர்கள் அங்குள்ள சிற்பங்களைக் கண்டு வியந்து, நம் நாட்டுச் சிற்பக் கலைக்கும், அச்சிற்பங்களை நிருமித்த சிற்பிகளுக்கும் மரியாதை செலுத்துகின்றனர்.

அச்சிற்பங்களைப் பார்க்கச் செல்வதற்கு நல்ல பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வழியிலுள்ள கால்வாயைக் கடக்கப் படகு வசதியுண்டு. அரசாங்கத்தார் அவ்விரதங்களை மிக்க கவனத்துடன் பாதுகாத்து வருகிறார்கள். நீங்கள் கட்டாயம் ஒரு முறை மஹாபலி புரத்திற்குச் சென்று அக்காட்சிகளைக் காண்பது அவசியம்.

கேள்விகள்

1. மஹாபலிபுரம் என்று பெயர் வரக் காரணம் என்ன?

2. மஹாபலிபுரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை?

3. திருமங்கையாழ்வார் வாக்கால் மஹாபலிபுரத்தைப்பற்றி நீங்கள் அறிவதென்ன?

4. பஞ்ச பாண்டவ ரதங்கள் எவ்வாறு இயன்றுள்ளன?

5. 'பகீரதன் தவம்' என்னும் சிற்பத்தின் விசேஷம் யாது?

6. மஹாபலிபுரத்தில் முக்கியமாகக் காணப்படும் சிற்பங்கள் எவை?

பயிற்சி

1. இடையனுக, நிலமங்கை, வராகம், கற்கோவில், இன்புற— வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. கற்கோவில்=கல்+கோவில், சிற்றூர்=சிறுமை+ஊர், இன்புற=இன்பு+உற, காட்சி=காண்+சி. இவை போன்றவற்றை இப் பாடத்திலிருந்து எடுத்துப் பிரித்துக் காட்டு.

3. மூன்றடி, அசைந்தாடி, கடற்கரை—பிரித்துக் காட்டு.

4. ஏனம், வராகம், பன்றி—ஒரு பொருட் சொற்கள்.
ஏர், எழில், அழகு—ஒரு பொருட் சொற்கள்.

இத்தகைய வேறு சொற்கள் இரண்டைக் கூறு.

5. களிறு—ஆண் யானை, பிடி—பெண் யானை.—இப்பாடத்தில் இத்தகைய எதிர்ப்பதங்கள் வேறு உளவா என்பதைக் கண்டு பிடி.

6. இப்பாடத்தின் 4-ஆம் பாராவில் உள்ள வினை முற்றுகள் எவ்வெக்காலத்தன? அவற்றைப் பகுதி, விகுதி, இடை நிலைகளாகப் பிரி.

7. அதே பாராவில் உள்ள வாக்கியங்கட்கு எ. ப. செ. கூறு.

8. அதே பாராவில் உள்ள செய்வினைகள் எவை? செயப்பாட்டு வினைகள் எவை?

9. அதே பாராவில் உள்ள வே. தொகை எவை? வே. விரி எவை?

இலக்கணம்

சிறுமை, பெருமை, அருமை, நன்மை, வெம்மை—என்பன மையீற்றுப் **பண்புப் பெயர்கள்**. இவை பிற சொற்களோடு புணர்கையில் ஈற்று 'மை' கெடும்; மற்ற எழுத்துக்கள் சில மாறுதல்களைப் பெறும்; சில இடங்களில் பெருமலும் வரும்.

1. சிறு குடி = சிறுமை + குடி
= சிறு + குடி—ஈறுகெட்டது.
= சிறு குடி.

2. வெந்நீர் = வெம்மை + நீர்
= வெம் + நீர்—ஈறு கெட்டது.
= வெந் + நீர்—'ம்'—'ந்' ஆகத்திரிந்தது.
= வெந்நீர்.

3. பெரியன் = பெருமை + அன்
= பெரு + அன்—ஈறு கெட்டது,
= பெ + (ர் + உ) + அன்
= பெ + (ர் + இ) + அன்—இடை 'உ'கரம் 'இ' ஆதல்.
= பெரி + அன்
= பெரி + (ய்) + அன்—யகரவுடம்படுமெய் தோன்றியது.
= பெரியன்.

இங்ஙனமே சிறியன், கரியன் என்னும் சொற்கள் புணர்ந்தன.

13. என் வரலாறு

(நிலக்கரி)

ஐயா, **நிலக்கரி** என்பவன் நானே. நிலத்திலிருந்து வெட்டி எடுக்கிறபடியால், எனக்கு இப்பெயர் வாய்ந்தது. கரிய நிறமுடையேனாதலால், நான் **கரி** என்று வழங்கப் படுகிறேன். என்னைப்பற்றி நீங்கள் அநேகரிடம் கேட்டிருக்கலாம். ஆயினும், அவர்கள் என் சரிதையைக் கூட்டியும் குறைத்தும் திரித்தும் விவரித்தும் சொல்லி யிருக்கக்கூடும். என் சரிதையை யானே கூறக்கேட்பது விசேஷமல்லவா ?

உலகில் மக்களே தோன்றாத மிகப் பழைய காலத்தில் எங்கும் பருத்து உயர்ந்து காழ்கொண்ட மரங்களும், பல வகைச் செடிகளும் கொடிகளும் நிறைந்திருந்தன.

அக்காலத்தில் அநேக இடங்களில் **பன்னே** (Fens) என்னும் ஒரு வகைச் செடிகளைச் செழித்த காடுகள் செழித்து வளர்த்தன. இவைகளைப் பகலவன் தனது ஒளியாலும் வெப்பத்தாலும் போர்த்தான்; வருணன் மழையால் நீராட்டினன்; தாயான நிலமகள் தான் கலந்து வைத்திருந்த உணவை அன்புடன் ஊட்டினள்; வாயு தாலாட்டினன். இவ்வித நலங்களால் இத்தாவரங்கள் வளர்ந்து வரலாயின.

எதுவும் அளவில் விஞ்சினல் வருவது ஆபத்தே அன்றோ? நெருப்பு அடுப்பின் அளவாக எரிந்தால் ஆகாரத்தை ஆக்கும்; கூரையில் புகுந்தால் குடியிருக்கும் வீட்டைக் கொளுத்திவிடும். அதுபோல, அளவில் விஞ்சிய புயற்காற்ருல் இத்தாவரங்கள் முறிந்தும் சாய்ந்தும் தரை மகளைத் தழுவலாயின. அவள் இவற்றைக்கண்டு இரங்கித் திடுக்கிட்டு நடுங்கினள். அதனல் பூகம்பங்கள் உண்டாயின. இவ்வாறு ஏற்பட்ட பூகம்பங்களாலும் பெருங் காற்ருலும் சாய்ந்த தாவரங்கள் நாளா வட்டத்தில் மண்ணல் மூடப்பட்டுப் புதையுண்டன. காலம் செல்லச் செல்ல இவற்றின் மேல் ஏறிய மண் மேடு இறுகிப் பெருகி உயர்ந்துகொண்டே வந்தது. இதனல், மேன்மேலும் இத்தாவரங்கள் அழுத்தப்பட்டு, உருண்டு திரண்டு கெட்டியாகிக் கரிய நிறம் கொண்டன. இவற்றின்மேல் ஏற்பட்ட மண்மேட்டில், அடர்ந்த காடுகள் தோன்றி வளர்ந்து அழிந்து, அக்கதியையே அடைந்தன. பல காலம் இப்படி நடந்துவர, நிலத்திற் புதையுண்ட அத்தாவரங்களும் இறுகிக் கரிய நிறமுடையனவாய் மாறலாயின. இவ்வகை மாறுபாட்டுடன் காணப்படும் என்னைத்தான் மக்கள் **நிலக்கரி** என்கிருர்கள்.

மண்ணில் புதைந்து கிடந்த யான் மனிதரால் கண்டுபிடிக்கப்பட்டு, என் உபயோகத்தால் கீர்த்தி

அடைந்து, மாந்தர் எங்கும் என்னைத் தேடிய வண்ண மாகவே இருக்கும் என் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளைக் கேட்டால், நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். காரிருளினும் கரிய நிறமுடையவனுய் இருப்பினும், ஜனங்கள் என்மீது அளவற்ற நேசம் கொண்டுள்ளார்கள். இந்த நேசத் திற்குக் காரணம் எனது உபயோகமேயன்றி, வேறன்று. பூமியின் ஆழமான இடங்களில் அழுந்திக் கிடக்கும் என்னை வெளியேற்ற அவர்கள் படும் பாடு சிறிதன்று.

ஒரு சமயம் என்மீது வாஞ்சையுள்ள சிலர் நியுகாசில் என்னும் நகருக்கு அண்மையிலுள்ள நிலத்தில் என்னைக் கண்டெடுக்கக் கூடுமோ என்ற கருத்துடன் ஆராயலாயி னர். அவர்கள் கனமான இரும்புக் கம்பி ஒன்றை எடுத்து, அதன் நுனியில் தமரிட்டு மறையாணியைத் திரு குவது போல அதைப் பூமியில் செலுத்தினுர்கள். இப்ப டிச் செலுத்தப்பட்ட கம்பி, பூமியில் வெகு ஆழமான இடம்வரையிற் செலுத்தப்பட்டு வெளியே எடுக்கப்பட்ட போது, கல் மண் முதலான பொருள்களுடன் என்னை யும் கொண்டுவந்தது. வருந்துமோர் மிடியன் சேமவைப்பு எதிர் கண்டாற் போல, அவர்கள் என்னை அடைந்து ஆனந்தம் கொண்டார்கள்.

அதன்பின் யானுள்ள இடத்தின் ஆழத்தையும், எனது அளவையும் கண்டுபிடிக்கும் காரியத்தில் அவர் கள் அறிவு விரைந்தது. என்னை எடுத்துக்கொள்ளும் பொருட்டு அன்னுர் அரும்பாடுபட்டுக் கனிகள் (Mines) தோண்டலானுர்கள். கனிகள் தோண்டுவது ஒரு சனி பிடித்த வேலை. ஒரு கனியை உண்டாக்க ஐந்தாறு வருட காலமும், இலட்சக் கணக்கான பணச் செலவும் ஆகும். கனிகள் என்பவை சுமார் இருபதடி குறுக்கள வுள்ள மிக்க ஆழமுடைய வட்டமான பெருங்கிணறுகளே.

இவற்றின் ஆழம் ஐந்நூறு அடி முதல் ஆயிரம் அடி வரையில் இருக்கும். இக்கிணறுகளைத் தோண்டும் போதே கரை அடிக்கடி சரிந்தும் இடிந்தும் விழுந்து இடர் விளைக்கும். ஆழமாகப் பறிக்கப் பறிக்க ஊற்றுக் கண்கள் ஜலத்தைப் பீறிட்டுக் கிணறுகளை நிரப்ப ஆரம்பிக்கும்.

இத்தகைய இடையூறுகளைத் தடை செய்வதற்காக அந்த உழைப்பாளிகள் கிணறுகளுக்கு இரும்பினால் இயன்ற உறைகளை அமைத்தும், இயந்திரங்களால் ஊறும் நீரை ஒட்ட இறைத்தும் கனிகளைப் பாதுகாத்து வரலானார்கள். வேலையாட்களைக் கனிகளில் இறக்கிக் கரையேற்றவும், அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் ஆயுதங்களையும் அனுப்பவும் தரையில் பல பெரிய இயந்திரங்கள் வேலை செய்கின்றன. கனிகளில் வெட்டப்படும் மண்ணைச் சில பொறிகள் கரையில் எடுத்துக் குவிக்கின்றன. கரியனைக் கண்டெடுப்பது கஷ்டந்தானே!

கிணறுகள் வெட்டப்பட்ட பின்னர், என்னைத் தேடிப்பிடிக்கும் முயற்சி ஆரம்பமாகும். யான் புதைந்து கிடக்கிற இடங்களில் நீளமான சுரங்கங்கள் அமைக்கப்படும். என்னைப் பெயர்த்து எடுக்கும் போது பக்கத்தில் மண் இடிந்து விழாதபடி மர விட்டங்களையும், பலகைகளையும் கொண்டு பாதுகாப்புச் செய்யப்படும். சுரங்க வேலைக்காரர் பலவகையான ஆயுதங்களைக் கையிற் கொண்டு, சுரங்க வாயிலில் தொங்கும் தொட்டிகளின் வழியாக இறங்கி, என் அருகே வந்து, எனக்குத் 'தீப ஹாரத்தி' செய்து, என்னை வெட்டி எடுப்பார்கள். அவர்கள் என்னைத் தேடிப்பிடித்து வெட்டி எடுத்து வேலை செய்ய **'டேவிஸ் லேட்'** என்ற ஒருவகை விளக்கை முன்னாளில் உபயோகித்து வந்தார்கள்.

நிலக்கரிச் சுரங்கங்கள் மிகவும் ஆழமான இடத்தில் இருப்பதால், அங்கு உஷ்ணம் மிகுந்து ஒருவித விஷக் காற்று உண்டாகிறது. அது விரைவில் தீப்பற்றக் கூடுந் தன்மையுடையதாதலால், சாதாரண விளக்கை அதனருகில் கொண்டு போவதால் தீப்பிடிக்க நேர்ந்து, பேராபத்து விளையும். இதைத் தடுக்க **ஸர் ஹம்ப்ரி டேவி** என்ற சாஸ்திர அறிஞர் நூதனமான விளக்கு ஒன்று செய்தார். விளக்கின் உள்ளே யிருக்கும் சுடரும், வெளி யேயுள்ள விஷ வாயுவும் ஒன்றையொன்று பற்ருதவாறு செய்யப்பட்டுள்ள இவ்விளக்கிற்குச் செய்தவர் பெயரைச் சார்த்தி, 'டேவிஸ் லைட்' என்ற பெயர் வழங்கப் பட்டது.

தொட்டதற்கெல்லாம் மின்சாரத்தின் உபயோகம் பெருத்துவிட்ட இந்நாளில், 'டேவிஸ்' விளக்கினை உப யோகிப்பது அருகிவிட்டது. இப்போது சுரங்க வேலை யாள் சிறு மின்சார விளக்குகளை உடன் கொண்டு செல் கிருன். சுரங்கப் பாதைகளிலும் ஆங்காங்கே மின்சார விளக்குகள் பிரகாசிக்கின்றன. சுரங்கங்களில் ஓய்வு எடுத்துக்கொள்ளவும் பற்பல வசதிகள் இந்நாளில் செய் யப்பட்டிருக்கின்றன. சுரங்க வேலைக்காரர்கள் என்னை வெட்டி எடுத்து, 'டிராலி' என்னும் சிறிய கை வண்டி களில் ஏற்றி, தண்டவாளத்தின் மேல் ஓடும் அக் கை வண்டிகளைச் சுரங்க வாயிலுக்குக் கொண்டு வருவார்கள். இப்படிக் கொண்டு வரப்பட்ட யான், சுரங்க வாயிலுக்கு நேராகக் கீழே தொங்கிக்கொண்டிருக்கும் தொட்டி களில் கொட்டப்பட்டு, மின்சார விசையால் மேலே தாவிக் குதித்துத் தரையை அடைகிறேன். என்னைக் கரை ஏற்றுவதற்காக எத்தனை இயந்திரங்கள் வேலை செய்கின்றன, தெரியுமா! எவ்வளவு மக்கள் அரும்பாடு படுகிருர்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா? இவர்கள்

இவ்வளவு கஷ்டப்படுவதெல்லாம் என்மேலுள்ள தயையால் என எண்ண வேண்டா; தங்கள் சுய நலத்தாலேயே.

என்னுடன் இரட்டைப் பிள்ளையாகப் பிறந்த இன்னொருவன் இருக்கிறான். நிறத்திலும், குணத்திலும், உபயோகத்திலும் அவனும் என்னைப் போன்றவனே. நானும் அவனுமாகச் சேர்ந்து உலகின் பல்வேறு இடங்களில் எத்தனையோ மாளிகைகளைக் கட்டித் தந்திருக்கிறோம். எங்களைத் துணையாகக் கொண்டவர்கள் கோடீச்சுவரர்களாகி விட்டார்கள். எனக்குப் பக்கத்தில் ஊறும் 'மண்ணெண்ணெய்' என்னும் மகா புருஷன் மக்களுக்குச் செய்து வரும் சேவை மாண்புடையதாம்.

இனி எனது பிரதாபத்தைச் சுருக்கமாகக் கூறிவிடுகிறேன்: பொதுவாக, பெரும்படியான காரியங்களுக்கு உபயோகப்படும் இயந்திரங்களை இயக்குபவன் யானே. அலை கடலில் மிதந்து செல்லும் சிறு நகரங்கள் எனத் தகும் கப்பல்களைச் செலுத்துவதற்கு இன்றியமையாத நீராவியை உற்பத்தி செய்து தருகிறவனும் நான் தான். புகை வண்டித் தொடர்களை இழுத்துச் செல்லும் 'இஞ்சின்'களை ஓடச் செய்கிறவன் யானேயாதலால், அவற்றில் எனக்கென்று இடப்பெற்ற சிம்மாசனம் ஒன்றுண்டு. நான் நவாச்சார வெடி யுப்பு, நவாச்சாரத் திராவகம், கீல், லைசால், பினைல், அனிலைன், பென்சால், பெட்ரோல் முதலியபொருள்களாயும் மாறிப் பெரும் பயன் அளித்து வருகிறேன். இவற்றால் நான் எவ்வளவு பரோபகார குணம் உடையவனாய் இருக்கிறேன் என்பது உங்களுக்கு விளங்கும். நான் ஏதோ தற்புகழ்ச்சி செய்துகொள்கிறேன் என்று நீங்கள் எண்ண வேண்டா. என்னைப் போல நீங்களும் பரோபகாரிகளாக வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

கேள்விகள்

1. காடுகள் எவ்வாறு நிலக்கரி உண்டாவதற்குக் காரணமாயின?
2. நிலக்கரிக் கனிகள் தோண்டப்படுவது எங்ஙனம்?
3. நிலக்கரியின் உபயோகங்கள் என்ன?

பயிற்சி

1. சேமவைப்பு, மிடியன், இடையூறு, பீறிட்டு, பூகம்பம்—இவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டு.

2. பீறிட்டு=பீறு+இட்டு, இடையூறு இடை+ஊறு, வேறன்று=வேறு+அன்று. இவை போன்றவற்றை இப்பாடத்திலிருந்து எடுத்துப் பிரி.

3. சிறியன், வறியன், சிறுதோட்டம்—பிரித்து இலக்கணம் கூறு.

4. 6-ம் வகுப்பிற் படித்த புணர்ச்சி இலக்கணத்தை நினைவிற் கொண்டு—வேலாயுதம், தீயவி, சேவடி, கோவில், கண்ணடி—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் சொல்.

இலக்கணம்

1. பெருந் தோப்பு=பெருமை+தோப்பு
=பெரு +தோப்பு—ஈறுகெட்டது,
=பெரு (ந்)+தோப்பு—'த்'—க்கு இனமான 'ந்' [மிகுந்தது
=பெருந் தோப்பு.

இவ்வாறனவையே 'பெருங்குணம், அருந்தொண்டு' முதலியன.

2. மூதூர் =முதுமை +ஊர்
=முது +ஊர்—ஈறுகெட்டது.
=மூது +ஊர்—ஆதி நீண்டது (மு-மூ)
=மூ(+த்+உ) +ஊர்
=மூத் +ஊர்—'உ' கெட்டது,
=மூதூர்.

இதுபோன்றனவே 'ஆருயிர், பாசிலை' முதலியன.

3. பைங்கிளி =பசுமை +கிளி
=பசு +கிளி—ஈறுகெட்டது,
=ப +கிளி—'சு'கெட்டது,
=பை +கிளி—அடி'அ', 'ஐ' ஆனது.
=பை (ங்) +கிளி—'க்'க்கு இனமான 'ங்' [தோன்றியது.
=பைங்கிளி.

இதுபோன்றனவே 'பைஞ்சோலை, பைந்தார், பைம்பொன்' முதலியன.

14. எங்கள் பாண்டி மன்னன்

(சேனாதிபதி கூறுவது)

பிள்ளைகளே, நான் பாண்டியனது சேனைத்தலைவன். எங்கள் அரசன் 'பொற்கைப் பாண்டியன்' எனப் புகழப்பெற்றவன். ஒருவனுக்குக் கை போயின், போனது தானே? ஆனால் எங்கள் அரசனது கை வெட்டுண்ட இடத்தில் பொன் கை தோன்றியது. இஃது ஓர் அற்புதம் அன்றோ? 'ஏன் அவன் கை வெட்டுண்டது? அஃது எப்படிப் பொன் கையாக மாறியது?' என்று நீங்கள் கேட்பீர்கள் அல்லவா? நான் அந்த அற்புத வரலாற்றை ஒரு கதை போல உங்கட்குக் கூறுகிறேன். நீங்கள் அவசரப்படாமல் பொறுமையாக இருந்து கேளுங்கள்.

ஒரு நாள் நள்ளிரவில் 'நம் குலத்தில் உதித்தவன் தண்ணளி செய்யும் பொழுது, நாம் தண்ணொளி வீசுதல் அவசியமில்லை,' என்று கருதியவன் போலச் சந்திரன் வான வீதியில் காணப்படாமல் இருந்தான். நிர்மலமான ஆகாயத்தில் புள்ளிக்கோலம் இட்டதுபோல விண் மீன்கள் விளங்கின. பிராணிகள் யாவும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தன. அச்சமயம் மதுரையின் தெரு ஒன்றின் வழியே ஒரு மனிதன் மெல்ல நடந்துகொண்டிருந்தான். ஒரு வீட்டின் வாயிலுக்கு நேரே அவன் செல்லும் பொழுது, அவ்வீட்டினுள் ஏதோ சிறிது பேச்சரவம் கேட்க, அவனுடைய கால்கள் நின்றுவிட்டன. 'இவ்வீட்டினுள் பேசிக்கொண்டிருப்பவர் யாவர்? பேசப்படும் விஷயம் என்ன?' என்று அறிய அவன் ஆவல் கொண்டான்; கதவின் அண்டையில் சென்று உற்றுக் கேட்கலானான். உள்ளே இருந்தவர்களின் பேச்சு முறையிலிருந்து, அவர்கள் கணவன் மனைவியாகிய இருவரே

என்பது தெளிவாயிற்று. அவர்கள் சம்பாஷணை சற்று முன்பேதான் ஆரம்பமாகி இருக்க வேண்டும் என்று அம்மனிதன் ஊகித்துக்கொண்டான். அச்சம்பாஷணை பின் வருமாறு நிகழ்ந்தது.

மனைவி:—நாதரே, காசியாத்திரை செய்ய வேண்டுவது முக்கியமாக ஒவ்வொரு பிராமணருக்கும் உரிய கடமை என்பது உண்மையே. அதற்குத் தடை கூற நான் முன் வரவில்லை. யானும் உடன் வர விடை தர வேண்டுகிறேன்; கருணைகூர வேண்டும்.

கணவன்:—பெண்ணே, உன்னைப் பிரிந்து செல்ல எனக்கும் மனமில்லை. ஆனால், உன்னை அழைத்துச் செல்வது இயலாத காரியம். கல்லிலும் முள்ளிலும் வழி நடந்து சென்று காசி யாத்திரை செய்வது கிள்ளுகீரையன்று. காசி யாத்திரையில் உள்ள ஆசையாலும் என் மீதுள்ள அன்பாலும் நீ இங்ஙனம் கூறுகின்றாய். வழியின் இயல்பையும், நடந்துபோவதிலுள்ள சிரமத்தையும் திருடர், வழிப்பறி செய்வோர்களின் பயத்தையும், வன விலங்குகளால் விளையும் அச்சத்தையும் ஓராது, நீ இவ்வாறு மன்றாடுவது நியாயமன்று. என்ன! ஆறு மாத காலந்தானே! அந்தப் புண்ணியத்தில் ஒரு கூறு உனக்கும் உண்டு. 'போய் வாருங்கள்' என்று மனமாரச் சொல். நான் கடையாமத்தில் புறப்பட வேண்டும் அல்லவா?

மனைவி:—யாத்திரை செய்வதிலுள்ள சிரமம் இன்னதென்பது எனக்குத் தெரியாமல் இல்லை. ஆனால், நீங்களும் அத்துன்பங்களை அடைவீர்கள் அன்றோ? அவ்வாறாயின், உங்களோடு வந்து நானும் ஏன் அவற்றை அடையலாகாது? தங்கள் பிரிவினும் யான் பெறவிருக்கும் புண்ணியம் பெரிதாக எனக்குத் தோன்றவில்லை. என் செய்வேன்!

கணவன்:—மாதே, பிரயாணத்தின் சிரமத்தை நான்

பொறுத்துக்கொள்ள முடியும். பெண்பாலாகிய உனக்கு அஃது இயல்வதன்று. சிறிது காலம் பொறுத்திருந்தால், நான் சீக்கிரம் வந்து விடுவேன்.

மனைவி:—தலைவரே, நீங்கள் ஏகியபின் யான் எவ்வாறு தனித்திருந்து காலம் கழிப்பேன்? என்னை நீங்கள் வருமளவும் எவ்வித அச்சமுமின்றிக் காப்பவர் யார்? நீங்கள் ஊரில் இல்லாததை அறிந்து, தீயர்கள் தீமை இழைப்பார்களானால், என்ன செய்வது? அநாதையாய் அன்றோ நான் இருக்க வேண்டும்?

கணவன்:—நங்காய், பாண்டிய மன்னன் ஆட்சிக் காலம் அல்லவா இது? அவன் செங்கோலன்; மன்னுயிரைத் தன்னுயிராக மதித்துக் காப்பவன்; ஆதலின், அவன் நிழலில் தங்கியிருக்கும் நம்மை எவ்வித இடையூறும் அணுகாது. நீ உன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு இரு. ஆறு மாதங்களும் ஆறு நாட்களாகக் கழிந்து விடும். நேரமாகிவிட்டபடியால், நாம் சற்று நித்திரை செய்வோம்.

அந்தணன் கூறிய சொற்களைக் கேட்ட அம்மனிதன் திடுக்கிட்டுப் போனான். 'பாண்டியன் நிழலில் தங்கியிருக்கும் நம்மை எவ்வித இடையூறும் அணுகாது,' என்ற சொற்கள் செவிப்பட்டதும், அவன் மெய் சிலிர்த்து, 'இன்று முதல் வேதியன் மீண்டு வரும் வரையில் இக்கற்புடையாளைக் காப்பது நமது கடமை,' என்று முடிவு செய்துகொண்டு, அவ்விடத்தை விட்டு அகன்றான். அவன், மாறு வேடம் பூண்டு நகர சோதனைக்காக வந்த எங்கள் அரசனாகிய **பாண்டியனே** ஆவன். அன்றிரவு முழுவதும் அம்மன்னவன் துயின்றானல்லன். செங்கோலனான அரசனுடைய பொறுப்பு இத்தகையது என்பதை உணர உணர அவன் மனம் உருகிவிட்டது.

அரண்மனைக்கேகிய மன்னன், மறுநாள் முதல்,

அப்பார்ப்பனி வயிரார உண்பதற்கு வேண்டிய பண்டங்களை அனுப்பக் கருதினன். ஆனால், எந்நாளுமில்லாமல், திடீரென அவள் ஒருத்திக்கு மட்டும் அரண்மனையிலிருந்து படியரிசி கொடுக்கப்பட்டால், அவளுடைய கணவன் ஊரிலில்லாத சமயத்தில், அவள்மீது ஊரார் ஐயங்கொள்ள இடமேற்படும் எனக் கருதிய காவலன், அத்தெருவிலுள்ளார் அனைவருக்குமே அரண்மனையிலிருந்து படியரிசி அனுப்ப உறுதி பூண்டான்; மறு நாள் பொழுது புலர்ந்ததும் அவ்வாறு செய்ய அரண்மனைச் சேவகர்க்கு ஆணையிட்டான். 'நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை,' என்பது முதுமொழி அன்றோ?

பாண்டியன் தினந்தோறும் நகர சோதனை செய்ய ஏகுங்கால், அப்பார்ப்பனி வசிக்கும் வீட்டு வாயிலில் நின்று, அவளுக்கு இன்னல் நேரா வண்ணம் காவல் புரிந்து வரலானான். கற்பின் கொழுந்தான அவளும் இடையூறு ஏதுமின்றித் தன் கொழுநன் மீண்டு வருவதற்குரிய நன்னாளையே நாடியவளாய்க் காலங்கழித்து வந்தனள். இங்ஙனம் ஐந்தாறு மாதங்கள் கழிந்தன.

ஒரு நாள் இரவில் பாண்டியன் நகர சோதனைக்காக வருகையில் வழக்கம் போல அப்பார்ப்பனியின் வீட்டு வாயிலண்டை வந்து நின்றான். வேதியன் ஏகிய நாள் முதல் அமைதி குடி கொண்டிருந்த அவ்வீட்டில், அன்றிரவு மட்டும் பேச்சுக் குரல் கேட்க, 'சோரர் எவரேனும் உள் நுழைந்தனரோ!' என்று கருதிய காவலன், பொறுப்பு உணர்ச்சியால், பொருக்கெனச் சென்று வாயிற் கதவைத் தட்டினான். தட்டியதும், "யார் அது?" என்ற குரல் உரமாகக் கேட்க, அது, தான் முன்பு கேட்டறிந்த அவ்வீட்டுப் பார்ப்பனன் குரலென்பதை அறிந்த அரசன் திடுக்கிட்டுத் தான்

செய்தது தவறு என்றுணர்ந்து, சமயோசித புத்தியால், விரைந்து அத்தெருவிலுள்ள வீடுகளின் கதவுகளை யெல்லாம் தட்டிக்கொண்டே சென்று, அரண்மனை எய்தினன்.

கதவைப் புடைத்த ஓசை கேட்டு, 'யார் அது?' என்று வினவியவாறே அந்தணன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து பார்த்தான். எவரும் காணப் படவில்லை. அதே சமயத்தில் அத்தெருவிலிருந்தோர் ஒவ்வொருவராக வெளியே வந்து, தத்தம் வீட்டுத் தெருக்கதவை எவனே ஒருவன் தட்டிச் சென்றான் என்று பேசிக்கொண்டனர். இந்நிகழ்ச்சியைப் பொழுது விடிந்ததும் அரசனுக்கு அறிவிப்பதென்று அவர்கள் முடிவு செய்தார்கள். பின்னர், அவர்கள் தங்கள் வாயில் கதவுகளைப் பத்திரமாகத் தாளிட்டுவிட்டு நித்திரை செய்யலானார்கள்.

மறு நாள் காலையில் மறையவர் யாவரும் திரண்டனர்; அரண்மனை வாயிலை அடைந்து, பாண்டியனுக்குத் தமது வருகையை அறிவித்தனர். அவர்கள் வருகையை யும், வந்து தெரிவிக்கப்போகும் விஷயத்தையும் எதிர் பார்த்திருந்த வழுதி, அவர்களை வரவழைத்து, ஒன்றும் அறியாதவன் போல நடித்துச் சிங்காதனத்திருந்து, அவர்கள் கூறியதைக் கேட்கலானான். ஏதோ முறை ஈடு செய்ய அந்தணர் பலர் திரளாக அரண்மனைக்கு வந்துள்ளனர் என்பதைக் கேட்ட அமைச்சர் பிரதானி யர் முதலியோர், 'என்ன குறை நேர்ந்ததோ!' எனக் கவலை கொண்டவராய், உடனே அரசவையில் வந்து சேர்ந்தனர். முன்னாளிரவில் நிகழ்ந்ததைக் கேட்ட அரசன், அவ்வாறு செய்த துட்டனைத் தான் கண்டு பிடித்துக் கடுந்தண்டம் விதிப்பதாக வாக்களித்தான்; அளித்ததும் அமைச்சர்களை நோக்கி, "இக்குற்றம்

செய்தவனுக்கு விதித்தற்குரிய தண்டனை யாது?" என்று வினவினன். அப்பொழுது அமைச்சர் தலைவர் எழுந்து நின்று, தலை வணங்கி, "காவலரே, தன் செயலால் பலருடைய தூக்கத்தைக் கெடுத்து, அவர்கள் மனம் கலங்கும்படி செய்தவனுடைய எந்தக் கரம் அச்செயலுக்குக் காரணமாயிருந்ததோ, அதனைச் சேதித்து விடுதல் முறை," என்றனர். அது கேட்ட அரசன் சினக்குறிப்புடன், "இதோ ஒறுத்தேன் அப்பாதகனை!" என்று சொல்லியவாறே, தன் உடைவாளை உருவித் தன் வலக்கரத்தைத் தானே துணித்துக்கொண்டான்.

பாண்டியன் இங்ஙனம் தன் கையைத் துணித்து எறிந்ததைக் கண்டார் அனைவரும் திடுக்கிட்டுப் பிரமித்துப் போயினர். என் மனத்திலும் கலக்கம் மிகுந்தது. "ஆ! அரசரே, தாமோ இவ்வாறு கதவைப் புடைத்தவர்? காரணம் இன்றி இப்படிச் செய்திருக்க மாட்டீரே! நிகழ்ந்ததை உரையாமல் பொருக்கெனத் தமது கரத்தைத் தாமே துணித்துக்கொள்ளல் தகுமோ?" என்று கூறி, அந்தணர் யாவரும் மனம் கலங்கி நின்றனர். காவலன் நிகழ்ந்ததை அவையோர்க்கு ஆதியோடந்தமாக உரைத்தான். அச்சமயம் பளிச்சென்று ஒரு மின்னொளி தோன்றி மறைய, அவ்வொளி கண்ட யாவரும் தம் கண்களை மூடித் திறக்கு முன், பாண்டியன் துணித்துவிட்ட கரத்திற்கு மாறாகப் பொற்கை ஒன்று புதுமையாய் வந்து பொருந்தியது.

அத்தறுவாயில், "செங்கோல் வேந்தனே, நின் செயல் குற்றமற்றது. ஆனபோதிலும், நின் குடிமக்களாகிய இவர்கள் கலவரம் அடைவதற்குக் காரணமாயிருந்ததையே நீ தவறாகக் கருதி, கை குறைத்துக் கொண்ட நீதி முறை இவ்வுலகம் உள்ளளவும் நிலை பெறுவதாக! நீ இழந்த கரத்திற்கு மாறாகப் பொற்

கரம் அளித்துள்ளோம். இன்று முதல் உனக்குப் '**பொற்கைப் பாண்டியன்**' என்னும் பெயர் நிலவுவதாக," என ஓர் அசரீரி எழுந்தது. அவ்வேந்தன் நெறி முறையையும், ஈசனது பேரருளையும் கண்டு வியந்த வேதியரும் மற்றோரும் மனம் பூரித்து, பாண்டியனை வாழ்த்தித் தம் இல்லமேகினர். பொற்கைப் பாண்டியன் ஆட்சி பொலிவுற்றது.

கேள்விகள்

1. அந்தணன் மனையாளைப் பாதுகாக்க அரசன் செய்த ஏற்பாடு என்ன ?

2 பாண்டியன், பலர் இல்லங்களின் கதவுகளையும் புடைத்துச் சென்றது ஏன் ?

3. அவன் முறை செய்தது எப்படி ?

பயிற்சி

1. தண்ணளி, தண்ணொளி, நிர்மலம், பொருக்கென, கிள்ளுகீரை —இவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுது.

2. தண்ணளி = தண்மை + அளி, தண்ணொளி = தண்மை + ஒளி— இவற்றுக்குப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

3. பைந்தார், ஆருயிர், கண்ணடி, சூலாயுதம், கோவில், தேவாரம் —பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

4. மலம்–குற்றம் × நிர்மலம்–குற்றம் இல்லாமை.—இத்தகைய எதிர்ப்பதங்களை இப்பாடத்திலிருந்து கூறு.

இலக்கணம்

நீங்கள் எழுதும் பொழுது இலக்கிய ஆட்சிபெற்ற பிழையற்ற சொற்களைப் பயன்படுத்த வேண்டும். 'முன்னரே' என்பதற்குப் பதிலாக **ஏற்கனவே**' என்பதையும், 'மிக்க' என்பதற்குப் பதிலாக '**வெகு**' என்பதையும், 'மற்ற' அல்லது 'பிற' என்பதற்குப் பதிலாக '**இதர**' என்பதையும், 'அவனும்' என்பதற்குப் பதிலாக 'அவன் **கூட**' என்பதையும், 'அதன்மீது' என்பதற்குப் பதிலாக 'அதன் **பேரில்**' என்பதையும் எழுதுதல் பொருத்தமற்றது. இப்பிழைகளும் இவை போன்ற பிறவும் வராமற் பாதுகாக்க வேண்டும். **தமிழ்மொழி இலக்கண வரம்பை உடையது ;** கிள்ளுகீரை அன்று.

15. கைத்தொழில் படங்கள்—II

1. படத்தில் காட்டப்படும் கைத்தொழில்களைக் குறி :

2. இப்படங்களைக் கொண்டு, "பனையும் அதன் பயன்களும்" என்னும் பொருள் கொண்ட கட்டுரை எழுது.



பயிற்சி

1. வாழை மரம்—இதன் பயன்களை ஒரு கட்டுரையாக எழுது.
2. பசு—இதனால் நடைபெறும் தொழிலைப்பற்றி விளக்கு.
3. மாமரம்—இதன் பயன்களை ஒரு கட்டுரையில் தொகுத்தெழுது.
4. ஏரி—குளங்களின் பயனை ஒரு கட்டுரையில் குறி.

5. வரதனை அண்ணனோடு கண்டேன், கந்தனுக்கு அவனது புத்தகம் கொடு, இராமனில் முருகன் பெரியன், பெட்டியில் பணம் இருக்கிறது, கண்ணே! வா. —இவற்றுள் உள்ள வேற்றுமை உருபுகள் எவை? அவை ஏற்ற பெயர்கள் எவை?

6. நான் இங்கிலாந்து செல்வேன்—சொற்கட்குச் 'சொல் இலக்கணம்' கூறு.

16. எனக்கு வந்த யோகம்

பிள்ளைகளே, நான் சில ஆண்டுகளுக்கு முன் ஓர் ஏழைப்பிராம்மணனாக இருந்தேன். இன்றோ, யான் பெரிய பணக்காரப் பிராம்மணனாக இருக்கிறேன். யான் கஷ்டப்பட்டுப் பொருள் சேர்க்கவில்லை. எனக்கு யோகம் அடித்தது. நான் திடீரெனச் செல்வனானேன். அஃது எதிர்பாராத யோகம். நீங்கள் அவசரப்பட வேண்டா; அமைதியாக இருங்கள். எனக்கு யோகம் வந்த வரலாற்றை ஒரு கதையாகச் சொல்கிறேன், கேளுங்கள். கதையில் வரும் ஆட்களுள் நான் யார் என்பதை நீங்களே முடிவில் கண்டுபிடித்துக் கூறுங்கள், பார்ப்போம்.

சான்றோர் பலர் தோன்றிய தொண்டை நாட்டிலே, காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள மெய்ப்பேடு என்னும் சிற்றூரின் புறத்திலிருந்த வெளி நிலத்தில், ஒரு நாள் மாலைக் காலத்தில், இளைஞர் பலர் சேர்ந்து சிலம்பம் விளையாடிக்கொண்டிருந்தனர். அச்சமயம் அவ்வழியே வந்த அந்தணர் ஒருவர், அவர்கள் பயிற்சித் திறம் கண்டு ஆச்சரியமுற்றுச் சற்று நேரம் நின்று பார்த்தனர். அப்பால் அவர் அவ்வாலிபர் குழாத்தை நெருங்கி, ஒருவரை நோக்கி, "அப்பா, இங்கே வா. உன் பெயர் என்ன?" என்றார். உடனே அவ்விளைஞர் அவரிடம் வந்து மரியாதையுடன், "சுவாமி, என் பெயர் அரிய

நாதன்,'' என்ருர். அந்தணர், "அரியநாதஞ? சரி. எங்கே, உனது கையைச் சிறிது காட்டு, பார்க்கலாம்,'' என, அரியநாதரும் தம் கையை நீட்டினர்.

வேதியர் அரியநாதருடைய கை இரேகைகளே உற்றுப் பார்த்துவிட்டு, "தம்பீ, நீ நல்ல அதிர்ஷ்டசாலி! உனக்குக் கணித சாஸ்திரம் நன்ருய் வரும்; படைக்கலப் பயிற்சியில் வல்லவஞவாய். உனக்கு ராஜாமிசம் இருக்கிறது. உன் கையில் அதிர்ஷ்ட ரேகைகள் உள்ளன. ஒன்று சொல்லுகிறேன்; கேள். இவ்வூரை விட்டு நீங்கி விஜய நகர சமஸ்தானத்திற்குப் போ; அங்கு நல்ல பதவி பெற வழியுண்டு. ஆனல் தம்பீ, இந்த ஏழையை மட்டும் மறந்துவிடாதே,'' என்ருர்.

இங்ஙனம் வேதியர் கூறிய அனைத்தையும் அங்கிருந்த மற்ற இளைஞர்களும் சுற்றி நின்று கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் கூறிய வார்த்தைகளால் அக்கணமே அரியநாதருக்கு ஒருவித உற்சாகமும் ஊக்கமும் உண்டாயின. அவர் மறையவரைப் பார்த்து, "சுவாமி, தாங்கள் உரைத்தபடி நடக்குமாஞல், ஏழையேன் தங்களே மறத்தல் எப்படி இயலும்?'' என்ருர். எனலும், பார்ப்பனர், "சரி, நான் கூறியபடியே நடந்தால் உனது வரும்படியில் நான்கில் ஒரு பங்காவது எனக்குக் கொடுப்பாயா? அப்பொழுது நான் வந்து கேட்டால், விசுவாசம் இருக்குமா?'' என்று வினவினர். அரியநாதர், "சத்தியமாக அவ்வாறே செய்வேன்,'' என, பிராமணர், "அப்படியாஞல் இந்த ஏட்டில் எழுதிக்கொடு,'' என்று சொல்லி, ஓலேயும் எழுத்தாணியும் நீட்ட, அரியநாதர் தாம் கூறியவாறே எழுதிக் கைச்சாத்திட்டுக் கொடுத்தார். அந்தணர் அதைப் பெற்றுக்கொண்டு, "தம்பீ, சில ஆண்டுகளின் பின்னர் உனக்குச் சுக்கிரதசை வருகின்றது. அப்பொழுது ராஜ பதவி கிடைப்பது நிச்

சயம். ஆகையால், நீ தவருமல் புறப்பட்டு ராயர் சமஸ்தானத்திற்குச் செல். நான் போய் வருகிறேன்,'' என்று கூறித் தம் வழி ஏகினர்.

அந்தணர் அகன்றபின் அங்கிருந்த இளைஞர் அரியநாதரைப் பரிகாசம் செய்யலாயினர். ஒருவன், "மகாராஜா, எனக்கு ஒரு கணக்கப்பிள்ளை வேலை தரவேண்டும்,'' என்ருன். மற்றெருவன், "மண்டலாதிபதி, எனக்கொரு மந்திரி உத்தியோகம்,'' என்ருன். இருட்டும் சமயமாகியதால், அவர்கள் விளையாட்டை நிறுத்தி, அரியநாதரைப் பரிகாசம் செய்தவாறே மெல்ல நடந்து தத்தம் இல்லமடைந்தனர்.

அரியநாதர் வீட்டிற்குச் சென்றதும் மாலையில் நடந்தவற்றைத் தம் பெற்ரேர்க்குக் கூறினர். அது கேட்ட அவருடைய பெற்ரேர் வியப்புற்றனர். அரியநாதர் சிறு குழந்தையாய் இருக்கும்போது, ஒரு சமயம் அவரது தாய் அவரைத் தனியே ஒரு பாயில் கிடத்தி வெளியேக, அத்தருணம் கருநாகமொன்று அங்குற்று, அவர் தலைக்கு அருகில் மண்டலமிட்டுத் தன் படத்தை முகத்திற்குமேல் உயர்த்தியிருக்க, திரும்பி வந்த அவருடைய அன்னை, அதனைக் கண்டு வெருண்டு கூவலும், அயலில் இருந்த பலர் ஓடி வந்தனர். இதற்குள் நாகமும் மறைந்தது. இதனை அறிந்தார் பலரும், 'இவன் ராஜ பதவி அடைவான்' என்று கூறினர். அரியநாதர் இந்நிகழ்ச்சியைத் தம் தாயார் கூறப் பன்முறை கேட்டிருந்தமையாலும், அந்தணர் குறிப்பித்ததாலும், விஜய நகரத்திற்குச் செல்லவேண்டுமென்ற எண்ணம் அவர் மனத்தில் அது முதல் வேரூன்றலாயிற்று.

அரியநாதர் அன்று முதல் கணித சாஸ்திரத்தை ஊன்றிக் கற்கலானர்; தமது படைக்கலப் பயிற்சியையும் பெருக்கி வந்தார்; இவற்றுடன் தெலுங்கு மொழியையும்

கற்கத் தொடங்கினர். சிறிது காலமான பின் தம்மை விஜய நகரத்திற்கு அனுப்பி வைக்கும்படி அரியநாதர் தம் தந்தையாரை வேண்ட, அவரும் மைந்தரைப் பிரிந்திருக்க மனமற்றவராயிருந்தும், 'நற்காலம் வருவதாயிருந்தால் நாம் அதைத் தடுப்பானேன்!' என்று கருதியவராய், நன்னுள் தேர்ந்து, அவரை அனுப்பிவைத்தார்.

அரியநாதர் பல நாட்கள் வழி நடந்து விஜய நகரத்தை அடைந்தார். சில நாட்களுக்குப் பின் விஜய நகர சமஸ்தானத்தில் தலைமைத் தளகர்த்தராயிருந்த **நாகம நாயகர்** வீட்டில் கணக்கு எழுதும் உத்தியோகம் அவருக்குக் கிடைத்தது. நாகம நாயகருக்கு **விசுவநாதர்** என்னும் ஒரு குமாரர் இருந்தார். அவரும் அரியநாதரும் ஏறக்குறையச் சம வயதினராயிருந்தமையால், இருவரும் நெருங்கிப் பழகிவந்தனர். விசுவநாதர் தேர்ந்த கல்விப் பயிற்சியும், நல்லறிவும், இணையற்ற படைக்கலப் பயிற்சியும் உடையவராய், கம்பீரம், அழகு, ஆள்வினையுடைமை ஆகிய தன்மைகளிலும் நிரம்பி விளங்கினர். அரியநாதரும் ஏறத்தாழ இவற்றில் நிரம்பியவராய் இருந்தமையால், விசுவநாதருக்கு அவரிடம் உள்ளன்பும் மதிப்பும் உண்டாயின. அக்காலத்தில் விஜய நகர சாம்ராஜ்யாதிபதியாக விளங்கிய ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் மகா புத்திமான் ஆனதால், நாகம நாயகருடனும், விசுவநாதரோடும் அடிக்கடி அரியநாதர் வரக்கண்டு அவரைப் பற்றி விசாரித்துத் தெரிந்துகொண்டார். இதனுல் அரியநாதருக்கு அரசரின் அறிமுகம் ஏற்பட்டது. பிறகு ராயர் பரீக்ஷார்த்தமாக இட்ட சில பணிகளை அரியநாதர் நிறைவேற்றித் தமது திறமையை வெளிப்படுத்தியமையால், ராயருக்கு அவரிடம் பிரியம் உண்டாயிற்று. ராயர் அவருக்குத் தமது அரண்மனையிலேயே உத்தியோகம் அளித்தார்.

நாளாவட்டத்தில் மகாராயருக்கு அரியநாதரிடம் நம்பிக்கையும் அபிமானமும் வளர்ந்தன. அச்சமயம் கலிங்கத்திலும் இராய்ச்சூரிலும் சிற்றரசர்களாலும் மகம் மதியர்களாலும் கலகங்கள் விளைந்தன. அவற்றை அடக்கச் சென்ற மகாராயர் அரியநாதரையும் உடன்வரப் பணித்தார். அவை சம்பந்தமாக நடந்த போர்களில் தமது விசேஷ சாமர்த்தியத்தையும் சூழ்ச்சி வன்மையையும் காட்ட அரியநாதருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ராயர் அவரை மெச்சி, ஆலோசனை சபையின் அங்கத்தினர் பதவியும், முதலி என்ற பட்டமும், சிவிகையேறும் தகுதியும் வழங்கினர். இதன் பின் அரிய நாதருக்கு விஜய நகரத்தில் விவாகம் நடைபெற்றது.

அக்காலத்தில் பாண்டி நாட்டை ஆண்டு வந்த **சந்திர சேகர பாண்டியன்** இறக்க, அவனுக்குப் பின் அந் நாட்டுரிமையை ஏற்ற **சுந்தர குமார பாண்டியனும்** மரித் தனன். திறமையான ஆட்சி இல்லாததால், இவர்கள் காலத்தில் முளைத்த கலகங்கள் வேரூன்றித் தழைக்கலாயின. அப்பொழுது கிருஷ்ண தேவராயர் விசுவநாதரைப் பாண்டி நாட்டிற்கு அரசராக்கி, அவருக்குத் துணையாய் இருக்கும்படி அரியநாதரையும் அனுப்பி வைத்தார். அச்சமயத்தில் **தளவாய்** என்ற பட்டம் அரிய நாதருக்கு ராயரால் வழங்கப்பெற்றது. அது முதல் அவர் **தளவாய் அரியநாத முதலியார்** என்று வழங்கப் பெற்றார்.

அரியநாத முதலியார் மதுரைக்குச் சென்றதும் படைத்தலைமை பூண்டு, விரைவில் கலகங்களை ஒடுக்கினர்; அரசியல் நிலையை ஆராய்ந்து, குடிகளின் குறைகளைப் போக்கி, கொள்ளைக் கூட்டத்தாரைச் சிறை செய்து அடக்கினர்; காடுகளை அழித்து ஊர்களை உண்டாக்கினர்; தாமிரவருணி யாற்றின் கரைகளைச் செப்பனிட்

டார். பாண்டி நாட்டை எழுபத்திரண்டு பாளையப்பட்டுக் களாக வகுத்து, நாடாட்சியை ஒழுங்குபடுத்தினர். இவர் செய்த ஏற்பாடுகளால் குடி மக்கள் இன்புற்று வாழலானுர்கள்.

பலவாண்டுகள் கழிந்தன. ஒரு நாள் விசுவநாதரும் அரியநாதரும் பாளையக்காரர் சூழ மதுரை அரண்மனையில் கொலுவீற்றிருந்தனர். அச் சமயம் நடுத்தர வயதுள்ள வேதியர் ஒருவர், வாயில் காவலர் தடையையும் மீறி, மிக விரைவாய் அவைக்குட் புகுந்து, அரியநாதரை நோக்கிவந்தார். இதைக் கவனித்துக்கொண்டிருந்த அரியநாதர், அவரை நோக்கி, "ஐயா, காவலாளரையும் மீறி நீர் இங்கு வந்ததன் காரணம் என்ன?" என்று வினவினர். அந்தணர் அதற்கு மறு மொழி ஒன்றும் கூருமல் "மகாராஜா, தளவாய் அரியநாத முதலியார் என்பவர் தாங்கள் தாமே?" என்று கேட்க, அரியநாதர், "ஆம்; என் பெயர் அரியநாதன் என்பதே," என்ருர்.

அப்பால் அந்தப் பிராமணர், "அரசரே, யான் காண வந்தது தங்களையே. நான் இருப்பது காஞ்சிபுரம்; தொழில் வைதீகம்; காசிக்குச் சென்று சாஸ்திர விசாரம் செய்து மீண்டவன்; என் பிதாவுக்குச் சோதிடத்தில் நல்ல தேர்ச்சியுண்டு. கடந்த சரஸ்வதி பூஜையன்று, யான் பழைய சுவடிகளை எல்லாம் எடுத்துப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கையில் என் தந்தையார் கைப்பட எழுதிய ஓலைச் சீட்டொன்றும், அதோடு 'அரியநாதன்' என்னும் கையொப்பமுள்ள மற்ருேர் ஓலை நறுக்கும் கிடைத்தன. இதோ பாரும்! இதில் உள்ளது தங்கள் கையொப்பந்தானே?" என்று சொல்லியவாறே, ஓர் ஓலை நறுக்கைத் தம் இடுப்பிலிருந்து எடுத்து நீட்டினர். அதனை வாங்கிப் பார்த்ததும், நாற்பதாண்டுகளுக்கு முன்னர்த் தாம் மெய்ப்பேடு என்னும் கிராமத்

தில், இளைஞர் பலரோடு கூடிச் சிலம்பம் பழகிக்கொண் டிருந்த சமயத்தில் சோதிடம் கூறிய வேதியர்க்கு எழுதித் தந்தது அது என்பது அவர் ஞாபகத்தில் வந்தது. உடனே அவர் பொருக்கென எழுந்து, அவ்வேதியரை வணங்கி, தமக்குப் பக்கலில் இருந்த ஓர் உயரிய ஆச னத்தில் அமரச்செய்து, விசுவநாதரையும் மற்றும் அங்கே இருந்தவர்களையும் நோக்கி, மெய்ப்பேட்டு வர லாறு மெய்யானதை எடுத்துரைத்தார்.

பின்னர், அரியநாதர் அந்த அந்தணரை நோக்கி, "சுவாமி, இஃது எனது கையொப்பமே. இவ்வுறுதி மொழியை நிறைவேற்ற யான் சித்தமாய் இருக்கி றேன்," என்றார். இம்மறு மொழி அந்தணர்க்கு அடங் காத மகிழ்ச்சியைத் தந்தது. அவர், "அரசரே, தங் களைப்போன்ற சத்திய சந்தர் யார்? என் தந்தையார் வாக்குப் பலித்ததே எனக்குச் சிறந்த வெகுமதியாகும். எனக்கு ஏதும் அதிகம் வேண்டா. எங்கள் ஊரில் ஒரு வீடும், வயிறார உண்பதற்கு ஏற்ற அளவில் கொஞ்சம் நிலமும், மாடு கன்றுகளும் அளித்தால் போதும்," என் றார். அந்தணரது அவாவின்மையைக் கண்ட அரிய நாதர், அவர் கேட்டதினும் பன்மடங்கு அதிகமான வெகுமதிகள் அளித்து, அவரை வழியனுப்பியதுடன், அதுமுதல் அவரைத் தம் குல குருவாகவும் கொண் டொழுகிவந்தார்.

மாணவர்களே, அரியநாதருடைய நன்றியைப் பாருங்கள்! நாற்பது ஆண்டுகளின் பின், தாம் பெரிய அரச பதவியில் இருக்கும்போதும், எப்பொழுதோ ஓர் ஏழை வேதியர்க்குத் தாம் எழுதிக் கொடுத்த வெகுமதிச் சீட்டாயிருந்தும், அரியநாதர் அதனை நிறைந்த மனத் துடன் நிறைவேற்றியது மிகவும் போற்றத்தக்கது அன்றோ?

பிள்ளைகளே, நான் யார்? சோதிடரா? அரிய நாதரா? சோதிடர் மகனா? விசுவநாத நாயக்கரா? யார்?

கேள்விகள்

1. அரியநாதர்க்கு அந்தணர் கூறிய சோதிடக் குறிப்பு யாது?

2. ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் அன்பிற்கு அரியநாதர் எவ்வாறு உரியவரானார்?

3. அரியநாதர் மதுரைக்கு வந்தது எப்படி?

4. பாண்டியநாட்டில் அவர் செய்த நன்மைகள் எவை?

5. அரியநாதர் நன்றியறிவுடையவர் என்பது எதனால் விளங்கும்?

பயிற்சி

1. குழாம், மறையவர், அரண்மனை, மண்டலம், சாம்ராஜ்யம்—பொருள் கூறு.

2. பொருக்கென, கைச்சாத்து, அவா இன்மை—வாக்கியங்களில் அமைத்தெழுது.

3. இராஜாமிசம் = இராஜ + அமிசம், அந்தணர் = அம் + தண் + அர், மண்டலாதிபதி = மண்டல + அதிபதி. இவைபோன்றவற்றை இப் பாட்டிலிருந்தெடுத்துப் பிரித்துக்காட்டு.

4. சரியான தமிழ்ப்பதங்கள் கூறு:—

வெகு, அதன்பேரில், இதர, கொஞ்சம், சீக்கிரம், அவள் கூட,

5. ஆரனூர், அருங்குணம், சிற்றுயிர், கண்ணிமை, மேலாடை—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

6. கொண்டார், வழங்கினர், ஒடுக்கினர், வாழலாயினர்—

பகுதி, விகுதி, இடைநிலை கூறு.

இலக்கணம்

நாம் சாதாரணமாகப் பேசும்பொழுது பல சொற்களைச் சிதைத்து வழங்குகிறோம். உதாரணமாகச் 'சீனிவாசன்' என்பதைச் **'சீனு'** என்றும், 'உபாத்தியாயர்' என்பதை **'வாத்தியார்'** என்றும், 'அகத்துக்கு' என்பதை **'ஆத்துக்கு'** என்றும், 'சீதாராமன்' என்பதைச் **'சீந்து'** என்றும், 'பார்த்தசாரதி' என்பதைப் **'பாச்சு'** என்றும் வழங்குகிறோம். இங்ஙனம் பேசும் பழக்கம் எழுத்திலும் வந்துவிடுகிறது. இங்ஙனம் வரவிடல் பெருந்தவறு. நாம் பேசுவதெல்லாம் கொச்சைத் தமிழ். அஃது எழுதத் தக்கதன்று. ஆதலின், பேசும்பொழுதே ஒழுங்காகப் பிழையின்றிப் பேசினால், எழுதும்பொழுது தவறு ஏற்படாது. எனவே, பேச்சுத் தமிழைச் சுத்தமாக்குதல் நமது முதற்கடமை. அதாவது, பிழையின்றிப் பேசுவது நமது நோக்கமாக இருத்தல் வேண்டும். **நீங்கள் இதை ஒரு போதும் மறத்தல் ஆகாது.**

17. சாரணச் சிறுவர்

‘பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது,’ என்று ஒரு பழமொழி நம்மிடை வழங்கி வருகின்றது. வாழ்வுடன் தொடர்பு அற்ற வெறும் படிப்பினல் பெரும் பயன் எதுவும் விளையாது என்பதே இதன் பொருள். கலாசாலையில் நற்பெயர் எடுத்த மாணவரில் பலர், வாழ்வில் அமர்ந்ததும், யாது செய்வதென்று தெரியாமல் மயங்குகின்றனர். எந்தச் சிறு காரியத்தையும் தாமே துணிந்து செய்து முடிக்கும் ஆற்றல் அவர்களுக்கு அமைவதில்லை. அவர்கள் எப்பொழுதும் பிறர் உதவியை நாடியே நிற்க நேருகிறது. மேலும், ‘தனக்கென வாழாமல், பிறர்க்கு என வாழ்தலே சிறப்புடையது,’ என்னும் உண்மையை அவர்கள் கேட்டும் எழுதியும் அறிவார்களே அன்றி, காரியத்தில் அதனை நடத்திக் காட்டும் வகை அறியார்கள். இவ்விதக் குறைபாடுகளை நீக்கவே ‘சாரணச் சிறுவர் இயக்கம்’ தோன்றியுளது.

சாரணர் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் **ஸர். ராபர்ட் பேடன் பவல்** என்ற ஆங்கிலேய இராணுவ வீரராவர். நீண்ட நாள் அனுபவத்தில், ஆப்பிரிக்கா அமெரிக்கா முதலிய தேச மக்களுடன் நெருங்கிப் பழகும் பேறு அவருக்குக் கிடைத்தது. காடுகளிலும் மலைப் பிரதேசங்களிலும் தம் இல்லங்களை அமைத்துக் கொண்டு, இயற்கையுடன் ஒன்றுபட்டு வாழ்ந்து வந்த அம்மக்களிடம் அவர் நுண்ணறிவும், இடர்களுக்கு அஞ்சாது நிற்கும் ஆண்மையும், தன்னம்பிக்கையும் இலங்கக் கண்டார். நாகரிகம் படைத்த நாடுகளில் வாழும் மாந்தரனைவரும், அவர்களது இயற்கைக் குணங்களைப் பின்பற்றினல் பெரிதும் இன்புற்று வாழலாம் என்ற உறுதி அவர் உள்ளத்தில் உதித்தது. சிறுவர்கள் இளமை

தொட்டே பழக்கப்பட்டால், அவர்கள் தங்கள் பிற்கால வாழ்வில் இவ்வழியில் மேம்பட்டு விளங்கலாம் என்பதை யும் அவர் உணர்ந்தார். அதன் பயனாக 1908-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் சாரணச் சிறுவர் இயக்கம் முதன் முதலாக அவரால் ஏற்படுத்தப் பெற்றது. இன்று அவ்வியக்கம் உலகம் முழுவதும் பரவி இருக்கிறது.

பதினொன்று முதல் பதினெட்டுப் பிராயத்திற்கு உட்பட்ட சிறுவர்களே சாரணராகப் பயிற்சி பெறலாம். பெற்றோரின் அனுமதி பெற்றவரே இவ்வியக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். சேருங்கால் சாரணர் உறுதி மொழிகள் மூன்றும், சட்டங்கள் பத்தும் அவர் களுக்கு விளக்கப்படும். மேலும், சாரணர் எனப்பெயர் பெறுமுன் தேறவேண்டிய சில சோதனைகளிலும் அவர் களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இச்சோதனைகளில் முக்கியமானவை சாரணர் அடையாளங்கள், சாரணர் வந்தனம் செய்யும் முறை, ஐக்கிய ஆங்கிலக் கொடியின் அமைப்பு, அதைப் பறக்கவிடும் விதம், பல வகை முடிச் சுக்கள் போடுதல் முதலியனவாம். இவைகளில் பயிற்சி பெற்றுத் தேறிச் சாரணன் படையில் சேர்த்துக்கொள் ளப்படுகின்றான். அப்பொழுது அவன் **இளம்பாதன்** எனப் பெயர் பெறுவான்.

சாரணச் சிறுவன் செய்யவேண்டிய வாக்கு உறுதி கள் மூன்று என்பது முன்பு கூறப்பட்டதல்லவா? அவை 'என்னால் இயன்றவளவு கடவுளுக்கும், அரசனுக் கும், தேசத்திற்கும் என் கடமையைச் செய்யவும், பிற ருக்கு எப்பொழுதும் உதவி புரியவும், சாரணச் சட்டங் களுக்கு அடங்கி நடக்கவும் எனது கௌரவமே சாக்ஷி யாக நான் பிரமாணம் செய்கிறேன்,' என்பனவாம்.

சாரணச் சட்டங்கள் பத்தும் மிகவும் போற்றத் தக் கவை. அவை மற்றச் சட்டங்களைப்போல விதிகளைக்



கூறி, அவைகளை மீறுவதால் இன்ன தண்டனையென விதிப்பவை அல்ல; சாரணனுக்குப் பொருந்தி இருக்க வேண்டிய குண நலங்களையே தெரிவிக்கின்றன. சாரணன், "நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்; தன் எஜமானர், பெரியார், ஆசிரியர் முதலியோரிடமும், தனக்குக் கீழ்ப்பட்ட ஏவலர் ஆகியோரிடமும் அன்பு செலுத்த வேண்டியவன். அவன் பிறருக்கு எப்பொழுதும் உதவி புரியும் இயல்பினன்; பெற்றோர், ஆசான், சாரணத் தலைவர் ஆகிய பெரியோர் உத்தரவுக்கு எதிர் மாற்றங் கூறாது பணியும் தன்மையன்; எவரிடமும் மரியாதையுடன் நடக்கும் மாண்பினன். கடல் பொங்கினும் கலங்காத மனநிலை அவனுக்கு உண்டு. சிக்கனமாகச் செலவு செய்யும் சீர்மை அவனிடம் திகழும். மற்றச் சாரணர்களைத் தன் உடன் பிறப்பாளர்களாக அவன் பாவிப்பான்; திரிகரண சுத்தி உள்ளவன்."

இளம்பாதனைச் சேர்த்துக்கொள்ளப்படும் சாரணன், வேறு பல துறைகளிலும் பயிற்சி பெறுகிறான். அவை, பன்னிரண்டு நிமிட நேரத்தில் ஒரு மைல் தூரம் நடந்து செல்லுதல், கொடிகளால் செய்திகளைத் தூரத்தில் உள்ள சாரணர்க்கு அறிவித்தல், அபாயங்களில் முதலுதவி புரிதல் முதலியன. அவைகளில் ஒருமாத காலமாயினும் பயிற்சி பெற்றுத் தேறும் சிறுவன், 'இரண்டாம் வகுப்புச் சாரணன்' ஆவான்.

ஒரு சாரணன் புதியனவாகக் கற்றுக்கொள்ள வேண்டிய பயிற்சிகள் இன்னும் பல உள. தனக்குக் கிடைக்கும் பணத்திலிருந்தோ, தான் சம்பாதிக்கும் பொருளிலிருந்தோ, ஒரு ரூபாயாவது சேமித்தல், ஐம்பது கெஜ தூரம் நீந்துதல், ஒரு செய்தியைக் கொடியை அசைத்தலின் வாயிலாகக் குறித்த நேரத்திற்குள் மற்றொரு சாரணர்க்குத் தெரிவித்தல் முதலிய பயிற்சிகளில்

தேர்ச்சி பெறுபவன், 'முதல் வகுப்புச் சாரணன்' ஆகின்ருன். ஆபத்தில் முதல் உதவி புரிதல், தீயணைக்கும் இயந்திரத்தை உபயோகித்தல், தீயில் அகப்பட்டவரைக் காப்பாற்றுதல் ஆகிய உபகார காரியங்களில் மிகுந்த திறமை உள்ளவனுக்கு 'அரசாங்கச் சாரணன்' என்னும் பட்டம் அளிக்கப்படும்.

இன்னும் சமையல் செய்தல், தச்சு வேலை, அச்சிடுதல்போன்ற தொழில்களிலும் சாரணன் பயிற்சி பெறுவான். இத்தொழில்களில் அவன் தேர்ச்சி அடைந்ததற்கு அறிகுறியாகப் பலவித விருதுகள் அவனுக்கு வழங்கப்படும்.

இந்நாளில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சாரணச் சிறுவர் படைகள் உள. இன்ன ஜில்லாவில் இன்ன எண்ணுடைய படை என அவை பெயர் பெறும். அவற்றிற்குச் சிறந்த வீரர்களின் பெயரை இட்டு வழங்குவதும் உண்டு. ஒவ்வொரு சாரணர் படையிலும் இரண்டு அல்லது மூன்று குழுக்கள் அடங்கியிருக்கும். மூன்றுக்கு மேற்பட்ட குழுக்கள் அடங்கிய சாரணர் படையும் சில இடங்களில் உண்டு. பயிற்சி பெற்ற ஓர் உபாத்தியாயரே படைத்தலைவரா யிருப்பார். குழுக்களுள் ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு மிருகம் அல்லது பறவையின் பெயரால் வழங்கப்படும். அக்குழுவைச் சேர்ந்த சாரணர் யாவரும் அப்பிராணியின் குரலை நன்கு கேட்டு, அவ்வாறே தாமும் சத்தமிடக் கற்றிருப்பவர். சாதாரணமாக ஒவ்வொரு குழுவிலும் ஆறு சாரணர் இருப்பர். அவர்களுள் சாரணர் நெறியில் முன்னணியில் நிற்பவன், குழுமுதல்வனுக நியமனம் பெறுவான். குழுமுதல்வன் தன் குழுவிற்கு வழிகாட்டியாய் நின்று, குழுவினரைச் சாரணத் துறையில் முன்னேறச் செய்வான்.

சாரணர் அணியும் உடை அவர்களுக்கு ஒப்பற்ற

அழகையும், கம்பீரமான தோற்றத்தையும் தருகின்றது. 'இவன் ஒரு சாரணன். நாம் இவனை நம்பலாம்,' என்ற உணர்ச்சியை மக்கள் மனத்தில் தோற்றுவிக்கும் தன்மையது அவ்வுடை. சாரணர் தம் கழுத்தைச் சுற்றிக் கட்டிக் கொள்ளும் துணியில் இரண்டு முடிச்சுக்கள் போடுவது வழக்கம். இவற்றில் இரண்டாவது முடிச்சுக்கு 'நலம் செய் முடி' என்பது பெயர். சாரணன், 'இன்று நாம் பிறர்க்கு ஒரு நன்மையேனும் செய்ய வேண்டும்,' என்ற உணர்ச்சியுடன் அதனை இடுகிறான். அதைக் களையும்போதும், 'இன்று நாம் யாருக்கு என்ன நன்மை செய்தோம்? என்று அவன் எண்ணிப் பார்க்கிறான்.

சாரணர் இயக்கத்தால் விளையும் நன்மைகள் பல. சிறுவர்களுக்குத் தேகப்பயிற்சியிலும், வெளியிடங்களில் வாழ்வதிலும் விருப்பம் ஏற்படுகிறது. எந்தக் காரியத்தையும் தாங்களே செய்து முடிக்க வேண்டுமென்ற ஆவலும், திறமையும் அவர்களுக்குஅமைகின்றன. 'பிறர்க்கு உதவி செய்வதே வாழ்வின் சீரிய நோக்கம்,' என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து, அதன்படி நடக்கின்றார்கள். சகோதரபாவமும், பிராணிகளிடத்து அன்பும் அவர்கள் உள்ளத்தில் ததும்பி நிற்கின்றன. சிக்கன வாழ்வை அவர்கள் கைக்கொள்கின்றார்கள். ஆபத்துக்கு இடமான எவ்வித அபாய நிலையிலும் உதவி புரிவதற்குச் சாரணர் மனம் சலிப்பின்றி உற்சாகத்துடன் முன் வருகின்றனர். இத்தகைய சாரணர் இயக்கத்தின் நன்னோக்கங்களைப் பற்றி இவ்வளவு அறிந்த பிறகும் சாரணர் படையிற் சேரும்படி உங்களை ஒருவர் தூண்டவும் வேண்டுமோ ?

கேள்விகள்

1. சாரணர் இயக்கம் யாரால் எப்பொழுது தோற்றுவிக்கப் பெற்றது ?

2. ஒருவன் இளம்பாதன் ஆதல் எவ்வாறு?

3. சாரணச் சிறுவன் செய்யவேண்டிய வாக்குறுதிகள் எவை?

4. சாரணர் கைக்கொள்ள வேண்டிய நற்பழக்க வழக்கங்கள் யாவை?

5. சாரணர் இயக்கத்தால் உலகிற்கு என்ன நன்மை உண்டாகும்?

பயிற்சி

1. தொடர்பு, ஐக்கியம், எதிர்மாற்றம், குழு, சேருங்கால்—வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. பன்னிரண்டு = பத்து + இரண்டு, முதல்வன் = முதல் + அவன், சலிப்பின்றி = சலிப்பு + இன்றி — இங்ஙனமே இப்பாடத்தில் வந்துள்ள பிறவற்றையும் பிரித்துக் காட்டு.

3. இராமு, கோபு. சீனு, சீனி, சீத்து, பாச்சு—இவற்றின் முழு உருவங்கள் கூறு.

4. விரைவில், மிக்க, பிற, மீது—இவற்றுக்குப் பதிலாக வழங்கும் பிழைபட்ட சொற்கள் எவை?

5. செங்குத்துக் கோடுள்ள இடங்களில் தக்க குறிகளை இடு:—

(i) இராமன் கோவிந்தனைப் பார்த்து || நீ ஏன் வரவில்லை || என்ருன்.

(ii) அவன் || ஐயா | நான் நேற்றுப் போனபோது | அவன் துன்பத்திற்கு அஞ்சி வராமல் இருந்துவிட்டேன் | என்ருன்.

இலக்கணம்

நாம் பேசும்போது பிற பாஷைச் சொற்களையும் இடையிடையே கலந்து பேசுகிருேம்; உதாரணமாக, "என்ன **பிரதர், பீச்சுக்குப்** போகலாமா?" என்கிருேம். இவ்வாக்கியத்தில், 'பிரதர், பீச்சு' என்னும் இரண்டும் ஆங்கிலச் சொற்கள். வாக்கியத்தில் உள்ள சொற்களோ நான்கு. அவற்றில் இரண்டு ஆங்கிலச் சொற்கள். இப்பழக்கமே எழுதும்பொழுதும் நம்மை அறியாமல் வந்து விடுகிறது. இதனுல், பிழைபட்ட தமிழே எங்கும் பரவுகிறது. இதனல், தமிழ் மொழி தன் அழகு கெட்டு விடுகிறது. "என்ன **அண்ணு, கடற்கரைக்குப்** போகலாமா?" என்னும் நல்ல தமிழ் வாக்கியம் இருக்க, அதனை விடுத்துக் கலப்புப் பாஷையில் பேசுதல் பெருந் தவறு. நீங்கள், இக்கொடிய பழக்கத்தையும் அறவே விட்டுவிடுதல் வேண்டும்.

18. நாடகக் காட்சிகள்

1. வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

(ஒரு சிறு நாடகம்)

[திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள்,

தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை.]

உறுப்பினர் :—ஆதன், ஒளவையார்.

இடம் :—தகடூர் நெடுவழி

பொழுது :—நடுப்பகல்

[ஆதன் துணையால் ஒளவையார் தகடூரை அறிந்து செல்லுதல்.]

ஆதன் :—(நெடுவழியின் ஒருபுறத்திலிருந்துகொண்டு) அடடா! என்ன அருள் !! கொடையாளிகள் என்று பெயர் தாங்கி இவ்வுலகில் எத்தனையோ செல்வர்கள் உள்ளார்கள். பாரதம் நடந்த நாளில்கூடக 'கன்னன்' என ஒரு வள் ளல் இருந்தானும். அவன் என்னென்னவோவெல்லாம் தாராளமாகத் தந்தானும். அவற்றை நாம் நேரிலா கண் டோம்? ஏதோ நூல்களில் எழுதி வைத்திருக்கிருர்கள். இன்றைக்கு நம் கண்களுக்கு முன்னே, என்ன அன்பு; என்ன மகிழ்ச்சியோடு கூறுகின்ற சொல்; அடடா! என்னைக் கண்டதும் எவ்வளவோ விருப்பத்தோடு என் பெயரைச் சொல்லி அழைத்து, எங்களூர்ச் செய்திகளை யெல்லாம் கேட்டுக் கொண்டார். என்னவோ இப்படிப் பட்ட இடத்தில் எனக்கும் ஒரு நட்பு ஏற்பட்டது; ஏழை களிடம் அவருக்கு என்ன கருணை தெரியுமா? சில நாள், நான் அவர் அடிகளில் தொண்டு புரிந்துகொண்டிருப் பதற்குள், காலையில் ஒருவன் வருவான். என்னென் னவோவெல்லாம் சொல்லி அழகாகப் பாடுவான். தூக்க முடியாதபடி காசும், பொருளும், ஆடையும் பெற்றுச் செல்வான். அதே ஆள் சில நாட்களுக்குள் இன்னும் எவனையோ அழைத்துவந்து எதெதையோ சொல்லி

இன்னும் ஏதாவது பெற்றுப்போவான் ஐயா! முன்னர் வந்தவன்தானே என்ற கேள்வி கேட்கலாமா? அவன் தான் வரக்கூடாது என்ற நியதிதான் உண்டா?

(ஔவையார் நெருங்க—உற்றுப் பார்த்தல்.)

ஔவையார் :—ஏன் அப்பா! நீ எந்தவூர்? தகடூர் உனக்குத் தெரியுமா?

ஆதன் :—என்ன கிழவி? நான் எந்த ஊராக இருந்தால்தான் உனக்கென்ன? தகடூரைப் பற்றிய கேள்வி உனக்கு எதற்கு? தகடூர் செல்லும் வழி தெரியாமலா இவ்வழியே வந்தாய்?

ஔவையார் .—இல்லையப்பா? நான் கேட்டவற்றில் என்ன பிழைகள் உள்ளன? தகடூர்க்குப் போகவேண்டும் என்று நெடுந்தொலைவில் இருந்து வருகிறேன். மிகவும் அலுத்துப் போயிருக்கிறேன். ஊர் அருகிலிருந்தால், தட்டித் தடவி எப்படியாவது போய்ச்சேர்ந்து அதியமானைக் காணுவேன். அதியமான்—கற்றவன்—பெரிய வீரன்—செல்வமுள்ளவன்—அண்டினவரைக் காப்பவன்—சிறந்த கொடைவள்ளல் என்றெல்லாம் கேள்விப்பட்டுள்ளேன். இதற்காகத்தான் உன்னைக் கேட்டேன்.

ஆதன் :—ஓஹோ! எனக்குத் தெரியுமே கிழவி நீ தகடூர் போகவேண்டும் என்ற போதே. எங்கள் மன்னர் அதியமான் பெருமானை அடைந்து ஏதாவது காசு பறிக்க நீ போகிறாய்.

ஔவையார் :—அடா மகனே, அப்படிச் சொல்லாதே. நீ நன்கு கல்லாதவனாகக் காணப்படுகிறாய். உனது வேந்தனின் சிறப்பை உள்ளவாறு நீ உணராதவன் ஆகிறாய். உன் மன்னன், சிறந்த வள்ளன்மை உடையவனாதலால், கற்றவர்கள் அவனைக் கருதி நாளும் வருவார்கள். அவ்வாறு அவர்கள் அவனையடைந்து

பொருள் முதலியன பெற்றுச் செல்வதால் அவன் செல்வம் குறைந்து வறுமையாளனுக ஒருநாளும் மாறமாட்டான். இன்னும், உனது அதியமான், புலவர்களிடம் மிகுந்த அன்புள்ளவன் ஆவன். அதற்குச் சான்ருக வேறு எதுவும் தேவையில்லை. 'நான் இங்கு இருக்கிறேன்' என்ற செய்தி அவன் காதுகளுக்கு எட்டினுலே போதும். என்னை முன்னே பார்த்தறியாதவனுக இருப்பினும், நேரே இடையீடின்றி இங்கு வருவான் என்பது திண்ணம்.

ஆதன் : அப்படியானுல், ஏன் கிழவி, உனக்கு அறிமுகமில்லாதவர்களையும் நேரே அழைக்கக் கூடிய திறமையுள்ள நீ, ஏன் இவ்வாறெல்லாம் கால் கடுக்க, கண் இருள, மெய் சோர நடந்து வரவேண்டும்?

ஔவையார் : உலகியல் உணராதவன் நீ. பொது வாழ்வின் நன்மைக்குப் பாடுபடுபவர்களை ஒருவர் தம் நலத்துக்காகத் தொந்தரவு தருதல் முறையாகாது. இன்னும் எம்போன்ற புலவர்கள் 'இன்று இங்கும், நாளை அங்கும்' என ஓரிடத்தும் நிலைத்திராது பல நாடுகட்குச் சென்று ஆங்காங்குள்ள மக்கள் அறிவும், நலனும் பெற்று மகிழப் பாடுபடுபவர்களாதலால், மன்னர்க்கு ஆட்போக்கி அவர்கள் வரும் வரையில் காத்துக் கொண்டு ஓரிடத்திலேயே தங்கி இருக்கவும் இயலாது.

ஆதன் : (சற்று அச்சம் கொண்டவனுய்) ஆமாம்! தாங்கள் 'எம்—போன்ற புலவர்கள்' என்றீர்களே, தாங்கள் யாராக இருக்கலாம்?

ஔவையார் :—உனக்கு என் பெயர் தெரியவேண்டுமா? என்னை 'ஔவை' என்பார்கள்.

ஆதன் :—அம்மையே, என்னைக் காப்பாற்றவேண்டும். (அடிகளில் வணங்குதல்) நான் யாரோ, வழிப்போக்குக் கிழவி என அறியாமல் பலவாறு கூறிவிட்டேனே! என்ன செய்வேன், என் தாயே! என்னைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

ஔவையார் :—அப்பா! அஞ்சாதே, எழுந்திரு. நீ யாவன்?

ஆதன் :—அருள்மிக்க தாயே! நான் அதியமான் வேந்தரின் அடிமை; அவர் தம் ஊழியன்; ஏழை. அம்மே! எமது இறைவர் தங்களது பெயரையும், புகழையும் அடிக்கடிச் சொல்லிக் கொண்டே இருப்பார். என் குற்றத்தை நீக்கி, என்னைக் காப்பாற்ற வேண்டும்.

ஔவையார் :—மகனே! அச்சம் தவிர்க. ஒருவர் அறியாமற் செய்த பிழையைச் சிறிதும் பொருட்படுத்தார் எம்போன்றவர். எத்தனையோ செல்வர்களும், கற்றவர்களும், தாம் செய்வன தீமையென்பதை நன்கு உணரினும் அவற்றைத் தவிராது செய்து தீப்பழியைத் தேடிக் கொள்ளுகின்றனரே, அவை தாம் பொறுத்தற்கு இயலாதனவே யன்றி, நீ கூறியன பிழையின்பாற் படாதனவாகும். இப்பொழுது விரைவில் எனக்குக் களைப்பு மேலிடும் போலிருக்கிறது. அதற்குள் தகடுரை நான் அடைந்தால் நலமெனக் கருதுகின்றேன். அஃது இன்னும் எவ்வளவு தொலைவில் உள்ளது?

ஆதன் :—தாயே! என்னை மன்னித்தருள்க. தாங்கள் இப்படி நிழலில் இருக்கவேண்டும். களைப்புடன் செல்லுதல் ஆகாது. தகடூர் சற்றுத்தொலைவில் இருக்கிறது. இன்னும் இரண்டு நாழிகை நடக்கவேண்டும். எளியன் அன்புடன் தருகின்ற இச்சிறியவுணவை மனமுவக்க ஏற்றுத் தங்களது களைப்பைச் சிறிது தணித்துக்கொள்ள இறைஞ்சுகின்றேன். இதோ நீரும் உள்ளது. இவற்றை ஏற்றுக்கொள்க. **(ஔவை அவலும் நீரும் ஆதனிடம் பெற்றுண்ணல்)**

ஔவையார் :—மகனே! நீ நெடிது வாழ்க! அதியனின் ஊழியன் என்பதை இச்சிறு செயலே எனக்கு

நன்கு உணர்த்திற்று. தலைவனைப் போலவே நீயும் உன் அளவுக்குத் தக்கவாறு கொடைத்திறன் கொண்டுள்ளமையை நான் மிகவும் போற்றுகிறேன். வாழ்க நீ பல்லாண்டு. தகடூர்ச் செல்லும் நெறியை உணர்த்தி, நீ சென்று வருக.

ஆதன் :—அன்னையே! இவ்வழியில் இன்னும் இரண்டு நாழிகைத் தொலைவுக்குப் பிறகு, வலது புறம் ஓர் இடைவழி பிரியும். அதில் திரும்பினால் தகடூர் மன்னர் கோவிலின் 'முதல் வளைவு' நன்கு தோன்றும்.

ஔவையார் :—நல்லது மகனே! சென்று வருகிறேன் நான். நீ நன்கு வாழ்க.

ஆதன் :—வணக்கம் தாயே, வணக்கம்! **(ஔவை பிரிதல்)**—அப்பா! நல்லவேளை! என் பெயரை அந்தக் கிழவிக்கு நான் சொல்லவில்லை. ஏதோ, இன்றைக்குக் கண் விழித்தபொழுது, நல்ல பொழுதாக இருக்கும் போலிருக்கிறது. என்னவோ தலைக்கு வந்தது தவறித் தலைப்பாகையோடு ஒழிந்தது. பொதுவாக எனக்குப் புலவர்கள் என்றாலே மிகுந்த நடுக்கம். அதிலும் ஔவையாம்! அடே அம்மா!! நல்ல கிழவி. அன்பாகத்தான் பேசினார்கள். என்னைப் போலவா? கல்வி என்றால் அதற்குத் தனித்தகுதிதான் இருக்கிறது. அடே! பொழுது போயிற்றே. விரைந்து வீட்டுக்குப் போகிறேன். **(பாடிக் கொண்டே போகிறான்)**

—**தமிழ்ப் பொழில்**

பயிற்சி

1. கொடையாளி, நியதி, இடையீடின்றி, ஆட்போக்கி, இறைஞ்சினான்—வாக்கியங்களில் அமைத்தெழுது.

2. மூன்றுகால இடைநிலைகள் 6-ம் வகுப்பில் படித்தீர்கள் அல்லவா? போயினான், கற்றான், வந்தான், உண்டான், பேசுகிறான், வருவான், பார்ப்பார்—இடைநிலைகளைக் காட்டு.

3. அன்வயப்படுத்திக் கூறு.

(i) போனான் வந்தவன் எழுந்து. (ii) வந்து நடந்த பையன் சிரித்தான் விழுந்து விழுந்து. (iii) தேடினேன் தெவிட்டாத தெள் ளமுதம்.

4. சிறு வாக்கியங்களாக மாற்று:—

அரசன் வேட்டையாடும்பொழுது சண்டையிட்டுக் கொண்டிருந்த இரண்டு யானைகள் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்த எருதுகளைத் துரத் தியதைக் கண்டான்.

5. சேர்த்து ஒரே வாக்கியமாக மாற்று:—

அரசன் காலையில் எழுந்தான். அவன் தன் கடன்களை முடித்துக் கொண்டான். அரசன் சபாமண்டபம் அடைந்தான்.

இலக்கணம்

நீங்கள் வாசிக்கும்பொழுது பொருள் விளங்கும்படி நிறுத்தவேண் டும் இடங்களில் நிறுத்தியும் அந்தந்த உணர்ச்சிகள் (கேள்வி, வருத்தம் முத லியன) தோன்றும்படியும் வாசித்தல் வேண்டும். அதற்கு உதவியாக இருப்பனவே **நிறுத்தக் குறிகள்.** அவை கால்புள்ளி (காமா), அரைப் புள்ளி (செமிகோலன்), முக்காற்புள்ளி (கோலன்), முற்றுப்புள்ளி (புல்ஸ்டாப்), கேள்விக்குறி, வியப்புக்குறி, **கூற்றுக்குறி** (இன்வெர்ட்டட் காமாஸ்) முதலியனவாம். உங்கள் பாடங்களில் இவை யாவும் பல இடங் களில் வந்துள்ளன. நீங்கள் அவற்றைக் கவனித்துப் படித்துப் பழக்கம் செய்யவேண்டும். அப்பழக்க முதிர்ச்சியால் அவற்றை எழுதுவதிலும் பயன்படுத்தவேண்டும். இது நீங்கள் அவசியம் கவனிக்கத் தக்கது.

பயிற்சி

(i) நான் | முருகா | நீ வீட்டிற்கு வருவதே | இல்லை | என்றேன்.

(ii) அவன் | ஆ | என்ன | அநியாயம் | என்று | அலறினான்

(iii) மகள் | தந்தையே | அவன் | என்னை அழைத்தான் | என் றாள்.—செங்குத்தாகக் கோடிட்ட இடங்களில் தக்க குறிகளை இடுக.

19. இரவீந்திர நாத தாகூர்

(மவுன வாசிப்பு)

இப்பாடத்தை மவுனமாக வாசி; வாசித்த பின் கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு இதன் கருத்தைச் சுருக்கி எழுது :

குறிப்புகள்

(i) தாகூரது இளமைப் பருவம்.
(ii) அவர் கண்ட இயற்கை இன்பம்.
(iii) அவரது கவித்துவம்
(iv) அவரது மேனாட்டு விஜயம்
(v) சாந்தி நிகேதனம்.
(vi) அவர் கொள்கைகள்.
(vii) முடிபு.

உலகப் புகழ்பெற்ற மஹா கவிகளுள் இரவீந்திர நாத தாகூர் ஒருவர் ஆவர். இவர் நமது தாய்நாட்டில் வங்க மாகாணத்தில் கல்கத்தாவில் பிறந்தவர். இவர் தந்தையார் மஹரிஷி தேவேந்திரநாத தாகூர் என்பவர். இரவீந்திரர், அறிவு முதிர்ந்த தம் சகோதர சகோதரிகளிடையே வளர்ந்து வந்தார்; ஆதலின் இயல்பாகவே இருந்த இவரது நுட்ப அறிவு, பக்க பலத்தால் பண்பட்டு வளரலாயிற்று. அதன் பயனாக இவர் ஆடல் பாடல்களில் பெருவிருப்பம் கொண்டார்; பள்ளிக்கூடப் படிப்பை வெறுத்தார்.

இயற்கை வனப்பைக் காண்பதில் இவருக்கு விருப்பம் அதிகம். வானம், சூரிய சந்திரர் தோற்றம், விண்மீன்களின் விளக்கம், மலர்கள் செறிந்த சோலைகளின் வனப்பு, மயில்கள் ஆடுதல், குயில்கள் கூவுதல், கிள்ளைகள் பேச்சு, ஆற்று ஓட்டம், கடற் காட்சி இன்ன பிறவும் இவர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன.

இரவீந்திரர் தம் வீட்டுத் தோட்டத்தில் பெரும் பொழுதைக் கழிப்பதுண்டு. அத்தோட்டத்துச் செடிகளும் கொடிகளும் மரங்களும் மலர்களுமே அவருடைய



தோழர்கள். இவர், அங்குள்ள பல்வேறுபட்ட நிறங்களும் நறுமணமும் கொண்ட மலர்களைப் பார்த்துப் புகழ்வார்; மரங்களைக் கொழுகொம்பாகத் தாவிப் பற்றிச் சுற்றிச் சுற்றி ஓடுங் கொடிகளின் சமர்த்தைக் கண்டு வியப்பார். ஒரே நிலத்தில் வளரும் செடிகள் பல, வெவ்வேறு வகை நிறமும் மணமும் கொண்டுள்ளதைக் கண்டு சிந்தனைக் கடலுள் ஆழ்வார்; மலர்களின் எழிலைக் கண்டு இன்புறு வார்; அவை தம்மைப் புன்முறுவலோடு நோக்குவதாக எண்ணிப் பெருமிதம் கொள்வார்.

இங்ஙனம் இயற்கை அழகில் தோய்ந்து தோய்ந்து, இயற்கைத் தாயின் இன்பப் புதல்வராக இருந்த இரவீந்திரர், மக்கள் நிலைமைகளையும் நன்கு அறிந்தார்; வாழ்க்கையின் உயர்வு தாழ்வுகள் அவர் உள்ளத்தை உறுத்தின. தம் மாளிகையைச் சுற்றி இருந்த குடிசை களைக் கண்டு உள்ளம் புழுங்குவார்; அவற்றில் வசித் திருந்த எளிய மக்களின் வாழ்க்கை எப்போது உயரும் என்பதை எண்ணி எண்ணி நைவார்; தம் வீட்டு வெளி வாயிற் கதவருகில் நின்று, ஆற்றில் குளிக்க வந்த மக்களின் மனப் போக்கை அறிந்தார். புறக்கண் கொண்டு இவர் கண்ட இயற்கைத் தோற்றங்கள் அனைத் தும் இவரது அகக்கண் முன் உருக்கொள்ளத் தலைப் பட்டன. இவர் அவற்றைக் கற்பனை செய்து, உயர் கருத்துகள் கொண்ட கவிகளாக்கி வெளியிட முயன்றார்.

இங்ஙனம் இவ்வறிஞர் இயற்கை அழகை நுகர்ந்து, கவி பாடும் ஆற்றல் பெற்றார்; நூற்றுக் கணக்கான கவிகள் புனைந்தார். அவை வங்க மொழியில் பாடப் பட்டவை. அவை பின் ஆங்கிலத்தில் மொழி பெயர்க் கப்பட்டன. அப்போதுதான் இவர் கவித்திறனை ஆங்கிலேயர் கண்டு வியப்புறச் சந்தர்ப்பம் கிடைத்தது. இவர் பாக்களையும் இவர் செய்துள்ள வேறு நூல்களையும்

மாக்மிலன் அண்டு கம்பெனியார் வெளியிடும் உரிமை பெற்றனர். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பே அல்லவா ?

தாகூர் மூன்று முறை இங்கிலாந்து சென்று மீண்டவர்; இரண்டு முறை படிக்கச் சென்றார்; ஆனால், மேனாட்டுப் படிப்பில் அவர் ஊக்கம் கொள்ளவில்லை. இரவீந்திரர் பெரும்புலவர் என்பதை அறிந்த மேனாட்டார் அவரை உற்சாகத்தோடு மூன்றும் முறை வரவேற்றனர். அவர் இங்கிலாந்து, ஜப்பான், பிரான்ஸ், இட்டலி முதலிய நாடுகட்குச் சென்றார்; அறிஞரால் வரவேற்கப்பட்டார்; ஆங்காங்கு அரிய சொற்பொழிவுகள் நடத்திப் பெரும்புகழுடன் தாய்நாடு மீண்டார்.

தாகூர் தாம் விரும்பியபடியே இயற்கை முறையில் கலாசாலை ஒன்றைக் கல்கத்தாவுக்கு அருகில் ஏற்படுத்தினர். அது போல்பூருக்கு இரண்டு மைல் தூரத்தில் இயற்கை அழகின் இடையே அமைந்துள்ளது. அது ‘சாந்தி நிகேதனம்’ எனப்படும். அதில் மேனாட்டு மாணவரும் வந்து வாசிக்கின்றனர். ஆண், பெண் என்னும் இரு பாலரும் படித்துப் பயன் பெறுகின்றனர். அங்குப் போதிக்கப்படும் கல்வி நீங்கள் கற்கும் பள்ளிக்கூடக் கல்வி அன்று. அழகு, சித்திரம், இசை, நடனம், விஞ்ஞானம், மொழி இவை பற்றிய கல்வி ஆகும். இவற்றுள் முதல் நான்குமே சிறப்பாகப் போதிக்கப்படுகின்றன. ஆசிரியர்களும் மாணவ-மாணவியரும் அங்கேயே வசித்து வருகின்றனர். அங்ஙனம் வாழ்தல் ‘குருகுல வாசம்’ எனப்படும்.

பிள்ளைகளே தங்கள் வேலைகள் அனைத்தையும் செய்யப் பழகுகின்றனர். அவர்கள் தங்கட்குள்ளேயே அடிக்கடி உண்டாகும் வழக்குகளைத் தீர்த்துக் கொள்வர்; தாமே நீர் இறைத்து நீராடுவர்; ஆடை துவைப்

பர்; சமையல் செய்வர்; கைத்தொழில் செய்வர்; கவிகள் புனைவர்; சித்திரம் தீட்டுவர்; ஆடுவர், ஓடுவர், பாடுவர், நடனம் பழகுவர், பிரார்த்தனை செய்வர். சுருங்கக் கூறின், சாந்தி நிகேதனம்-சாந்தி (அமைதி)க்கு நிலைக் களனாக இருக்கின்றது; ஆன்ம உணர்வை அதிகப்படுத்துகிறது; மன அடக்கம் உண்டாக்குகிறது; இறைவனை எண்ணத் தூண்டுகிறது; மூர்க்கனையும் கருவி கரணங்கள் ஓய்ந்த தொண்டனாக்குகிறது. ஆ! அதனை நேரிற் காண்பவர் பேறு பெற்றவரே ஆவர்.

தாகூர் தம் கலாசாலை மாணவரோடு ஆடுவார்; பாடுவார்; ஓடுவார்; விளையாடுவார்; நடனம் செய்வார்; சித்திரம் தீட்டுவார்; எல்லா வேலைகளும் செய்வார். அவருக்குப் பின் அவர் பெயரை உலகில் நிலை நாட்ட அவருடைய மாணவர் பலர் இன்று தயாராகின்றனர் என்பதை எண்ண, ஒவ்வோர் இந்தியரும் பெருமிதம் கொள்ளல் வேண்டும்.

இம்மஹா கவிஞர் கொள்கைகள் யாவை? இவர் கொள்கைகள் இன்னவை என்பதை இவர் செய்துள்ள மேனாட்டுப் பிரசங்கங்கள் வாயிலாக எளிதில் உணரலாம். "மனிதன் தூய வாழ்வு வாழவேண்டும்; பணத்திற்குப் பெருமதிப்புத் தரல்கூடாது; அறிவுக்கும் ஒழுக்கத்துக்குமே முதல் இடம் தரல் வேண்டும்; மக்களுள் பிறப்பால் உயர்வு தாழ்வுகள் இருத்தல் கூடாது; சாதிகளே இந்தியாவின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை; இன்ன குலத்தவன் இன்ன தொழிலே செய்தல் வேண்டும் என்னும் கட்டுப்பாடு தொழிலுக்குள்ள மதிப்பையே அழித்து வருகின்றது; எவனெவன் எவ்வெத் தொழிலில் திறமை உடையவனோ, அவனவன் அவ்வத் துறையில் வேலை செய்தலே தக்கதாகும். இம்முறையே சாதிகளை ஒழிக்க வல்லது; சாதிகள் உள்ளவரை—அவற்

றுள் உயர்வு தாழ்வுகள் உள்ளவரை இந்தியச் சமூகம் முன்னேற்றம் அடையாது; ஒரு நாடு மற்றொரு நாட்டை வென்று ஆளுதல் தவறு; ஒவ்வொரு நாடும் தன்னளவில் இன்பமாக வாழ வழியிருத்தல் வேண்டும்; அங்ஙனமாயின் உலகத்தில் பெரும் போர்கள் உண்டாக இடம் இராது. இறைவன் இருக்கிறான்; ஆதலால் அவனை எங்கும் எப்பொழுதும் தொழலாம்; இயற்கை இதயம் செலுத்துபவனே ஈறிலா இன்பம் அடைவான்."

கேள்விகள்

1. நீ, தாகூரது இளமைப் பருவம் பற்றி யாது அறிவாய்?
2. சாந்தி நிகேதனம்—இதுபற்றி உனக்கு என்ன தெரியும்?
3. தாகூர் உலகப் புகழ்பெறக் காரணம் யாது?
4. அவருடைய கொள்கைகள் எவை?
5. 'இயற்கைக் காட்சி'—என்பது யாது?

பயிற்சி

1. 'இயற்கைக் காட்சி' என்பதுபற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை வரை.

2. 'தாகூர் வரலாற்றுச் சுருக்கம்' என்னும் தலையங்கம் இட்டு, இப்பாடத்தை ஒரு கட்டுரையாக வரை.

3. இயற்கை இன்பம்—இயற்கைக் கல்வி—சாந்தி நிகேதனம்—தாகூர் எண்ணங்கள்—இவற்றைக் குறிப்புகளாகக் கொண்டு இப்பாடத்தை ஒரு கட்டுரையாக எழுது.

4. (i) முதல் பாராவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை?
   (ii) அவற்றில் உள்ள எ. ப. செ. கூறு.
   (iii) வினைமுற்றுகள் உணர்த்தும் காலம் என்ன?
   (iv) வினைமுற்றுகட்குப் பகுதி, விகுதி, இடைநிலை கூறு.
   (v) **தாகூர்** உலகப் புகழ்**பெற்ற** புலவர் **ஆவர்**—தடித்தவற்றுக்குச் சொல் இலக்கணம் கூறு.

5. முதுமை × இளமை, நன்மை × தீமை—இவைபோன்ற எதிர்ச் சொற்களை எடுத்தெழுது.

6. இப்பாடத்தின் 3-ஆம் பாராவில் உள்ள வாக்கியங்கள் எவை? அவற்றில் உள்ள எ. ப. செ. கூறு.

7. அப்பயனிலைகளை எடுத்து, பகுதி—விகுதி—இடைநிலை கூறு.

8. விளங்கினர், வந்தான், போவாள், ஆனது, செய்தன—விகுதிகளைக்கொண்டு பால் கூறு.

9. விளக்கம், விளங்கினன், விளங்கினவனை, விளங்க, விளங்குகின்ற—ஒவ்வொன்றுக்கும் இலக்கணம் கூறு.

10. நடந்த, நடக்கின்ற, நடக்கும் (பையன்), நடந்து, நடக்க, நடந்தான், நடக்கிறன், நடப்பான்—எவ்வெக்கால எச்சங்கள்? வினைமுற்றுகள்?

11. பார்ப்பான், வண்ணத்தி, குயவன், ஒட்டச்சி, அரசி, முனி பத்தினி, சீமான்—எதிர்ப்பால்கள் கூறு.

12. நான் ஸ்டேஷனுக்குப் போனபோது இரண்டு குடியர்கள் சண்டை யிட்டதைப் பார்த்துக்கொண்டிருந்த சிறுமி பயந்து அலறினள்.—தனித்தனி வாக்கியங்களாகப் பிரி.

13. ஆரருள், சேவடி, கண்ணருவி, சிறு விரல், பசும்பொன்——பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

14. **தாயார் வீசை** நெய் வாங்க ஒரு **மைல்** நடந்தார், **குறவன்** மலை மீது ஏறி **மாமி**யை அழைத்தான்—தடித்த சொற்கள் என்னென்ன பெயர்ச்சொற்கள்?

15. வா, செய், வாழ்க, வருக, கெடுக, கெடு, ஒழி, ஒழிக, நில், நிற்க.—ஏவல் வினைகள் எவை? வியங்கோள் வினைகள் எவை?

16. கண்ணன் கரடியைப் பிடித்தான், கந்தன் மாமனை மடக்கினன், யானை புலியை விரட்டியது—செயப்பாட்டு வினைகளாக மாற்று.

17. அண்ணனால் தரப்பட்ட புத்தகம், கமலத்தால் பாடப்பட்ட பாட்டு, எலியால் தின்னப்பட்ட வடை—செய்வினைகளாக மாற்று.

20. கிராமப் பிளான்



படத்தின் நடுவில் இருப்பது கிராமம். அதற்கு எந்தெந்தத் திசையில் கீழ்வருவன இருக்கின்றன என்பதைக் கூறு :

1. விளையாட்டு மைதானம் 2. வைத்திய சாலை 3. கிராமக் குளம் 4. கிராமக் கோவில்.

குறிப்பு :—இத்தகைய பிளான்களைப் போட்டுப் பழகு.

பயிற்சி

1. உனது தோட்டப் பிளானைப் போட்டு, அதன் எல்லைகளைக் குறி.
2. உனது வீட்டுப் பிளானைப் போட்டு, அதன் எல்லைகளில் உள்ளவற்றைக் குறி.
3. உனது பள்ளிக்கூடப் பிளானைப் போட்டு, அதன் எல்லைகளில் உள்ளவற்றைக் குறி.

செய்யுட் பகுதி

I. கலைமகள் துதி

1. வெண்டா மரைக்கன்றி நின்பதம்
   தாங்களன் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
   லோ! சக மேழுமளித்(து)
உண்டான் உறங்க, ஒழித்தான்பித்
   தாக,உண் டாக்குவண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
   சகல கலாவல்லியே!

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்;பங்க யாசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே! கனகக் குழையும்ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே! சகல கலாவல்லியே!

குறிப்புரை

1. வெண்மை+தாமரை=வெண்டாமரை. பதம்–திருவடிகள்; வெள்ளை உள்ளம்–கபடமற்ற மனம்; தண்+தாமரை=தண்டாமரை, சகம்–உலகம், அளித்து–காத்து, உண்டான்–விழுங்கிய திருமால், ஒழித்தான்–சிவபிரான், உண்டாக்கும் வண்ணம் கண்டான்–பிரமன்.

2. தோய்தர–பொருந்தியிருக்க, நான்கு+கவி=நாற்கவி (ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் என்பன), பங்கயம்–(வடசொல்–பங்கஜம்) தாமரை (சேற்றில் முளைப்பது), பொன்+கொடி=பொற்கொடி, கனகம்–பொன், குழை–காதணி, ஐம்பால்–கூந்தல் (ஐந்து விதமாக அலங்கரிக்கப்படுவது), காடு–கூந்தல் கருமையால் இருண்டு காடு போன்று இருத்தல்.

II. நீதிப் பகுதி

1. சதகத் திரட்டு

மூர்க்கர் முதலியோர் இயல்பு

1. மெய்யான புத்திபல சொல்லினும் தன்புத்தி
மேலாகி னேன்மூர்க் கனும் ;
மிக்கபெரி யோர்களைத் தாழ்வுசெய்(து) அற்பர்தமை
மேன்மைசெய் வோன்மூ டனும் ;
செய்யாத காரியம தெனினும் பிடித்தபிடி
செய்யுமவ னேதுஷ் டனும் ;
திரளான நன்றிபல செய்யினுஞ் செய்தவர்க்
கிடர்செய்ப வன்பா தகன் ;
ஐயாவெ னப்பணிந் தாலுமே கோபம(து)
அடங்கா தவன்குரூரன் ;
அனுதினம் தீமைபுரி வோனெந்த நாளிலும்
அடங்காத சண்டா ளனும் ;
பையார்த டஞ்சோலை திகழ்கின்ற களமூரின்
மணவாள ! நாரா யணன் !
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே !
வரதவேங் கடரா யனே !

பொருள் செயல் வகை

2. புண்ணிய வசத்தினால் செல்வமது வரவேண்டும் ;
பொருளைரட் சிக்க வேண்டும் ;
புத்தியுட னதுவொன்று நூறாக வேசெய்து
போதவும் வளர்க்க வேண்டும் ;
உண்ணவேண் டும்; பின்பு நல்லவஸ்த் ராபரணம்
உடலில் தரிக்க வேண்டும் ;
உற்றபெரி யோர்கவிஞர் தமராது லர்க்குதவி
ஓங்குபுகழ் தேட வேண்டும் ;
மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டும் ;உயர்மோக்ஷ
வழிதேட வேண்டும் ; அன்றி

வறிதிற்பு தைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கமறி யாக்குரு டராம் :
அண்ணலே! கங்காகு லத்தலைவன் மோழைதரும்
அழகனெம தருமை மதவேள் !
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீச் சுரதே வனே !

இப்படிப்பட்டவர் இவர்

3. ஞாயநெறி தவருமல் உலகபரி பாலனம்
நடத்துபவ னேஅர சனும் ;
நல்லயோ சனைதெரிந் துறுதியா கியசெய்தி
நவிலுமவ னேமந் திரி:
நேயமுட னேதன்ச ரீரத்தை எண்ணுத
நிர்வாகி யேசூ ரனும் ;
நிலைபெறும்இ லக்கணம்இ லக்கியம்அ றிந்துசொலும்
நிபுணகவி யேகவி ஞனும் ;
ஆயதொரு வாகடம் தாதுவின் நிதானமும்
அறியுமுதி யோன்வைத் தியன் ;
அகமின்றி மெய்யுணர்ந்(து) ஐம்புலன் ஒழித்திட்ட
அவனேமெய்ஞ் ஞானி எனலாம்;
மாயவர் சகோதரி மனோன்மணிக் கன்பான
வரபுத்ர வடிவே லவா !
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே!

குறிப்புரை

1. இடர் - துன்பம், குரூரன் - கொடியவன், மையார் - இருளடர்ந்த, அலர் மேல் - தாமரையின்மீது - அலர்+மேல்+உ=அலர் மேலு (மேல் - ஏழாம் வேற்றுமை. 'உ' சாரியை).

2. போதவும் - மிகவும், வஸ்திர+ஆபரணம்=வஸ்திராபரணம், வறிதில் - வீணாக, தரு - மரங்கள் அடர்ந்த, கிரி - மலை.

3. உறுதி - நிச்சயமாக நன்மை பயப்பது, நவிலும் - சொல்லும், எண்ணாத - பொருட்படுத்தாத, நிபுணன் - வல்லவன், வாகடம் - வைத்தியம், அகம் - அகங்காரம், ஐம்புலன் - மெய், வாய், கண், மூக்கு, செவிகளினால் படும் ஆசை; மாயவர் - கிருஷ்ணர்.

2. நன்னெறி

1. கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர் ;—அம்மா !
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியினதா மென்று.

2. பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் ;—நேரிழாய் !
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாங்கும் கடிது.

3. தக்கார்க்கே ஈவர் தகார்க்களிப்பார் இல்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர் ;—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளிப்
புல்லுக் கிறைப்பரோ போய் ?

4. காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே ;—ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தாய் ! நோக்குமால்
கண்ணிரண்டும் ஒன்றையே காண்.

5. உடலின் சிறுமைகண்(டு) ஒண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் ;—மடவரால் !
கண்ணளவாய் நின்றதோ ? காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றன்றோ ? விளம்பு.

அரும்பொருள்

1. கைம்மாறு—பதில் உதவி, உகவாமல்—விரும்பாமல், எயிறு—பல்.

2. நேர்இழாய்—ஒழுங்காண நகைகளை அணிந்தவனே, மெய்—உடல், வியன்—பெரிய.

3. மிக்கார்—வீணர்.

4. மாறு—விரோதம், ஓதுகலை ... முகத்தாய் —16 கலைகளையுடைய முழுமதி போன்ற முகத்தை உடையவளே !, நோக்குமால்—ஆராயின்.

5. ஒள் புலவர்—சிறந்த புலவர், மடவரால்—இளமை பொருந்திய வளே !, விள[ம்]பு—சொல்வாய்.

3. திரிகடுகம்

1. தன்குணங் குன்றுத் தகைமையுந் தாவில்சீர்
இன்குணத்தா ரேவின செய்தலும்—நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவு மிம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில்.

2. வாளைமீ னுள்ளல் தலைப்படலும் ஆளல்லான்
செல்வக் குடியுட் பிறத்தலும்—பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற அருநூலு மிம்மூன்றுந்
துஞ்சுமன் கண்ட கனா.

3. கணக்காய ரில்லாத ஊரும் பிணக்கறுக்கு
மூத்தோரை யில்லா அவைக்களனும்—பாத்துண்ணுந்
தன்மை யிலாள ரயலிருப்பு மிம்மூன்று
நன்மை பயத்தல் இல.

4. பொய்வழங்கி வாழும் பொறியறையுங் கைதிரிந்து
தாழ்விடத்து நேர்கருதுந் தட்டையும்—ஊழினல்
ஒட்டி வினைநலம் பார்ப்பானு மிம்மூவர்
நட்கப் படாஅ தவர்.

5. வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்றலிம் மூன்று
நலமாட்சி நல்லவர் கோள்.

6. தானங் கொடுக்குந் தகைமையு மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமுந்—தெற்றெனப்
பல்பொருள் நீக்கிய சிந்தையு மிம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு.

7. உண்பொழுது நீராடி யுண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலுந்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றுந்
தூஉய மென்பார் தொழில்.

8. தன்னச்சிச் சென்றாரை யெள்ளா ஒருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்றும் அழுக்கா றிகந்தானு மிம்மூவர்
நின்ற புகழுடை யார்.

9. கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலு மமைச்சனும்—வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்.

10. முந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையும்
நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்
மைந்நீர்மை யின்றி மயலறுப்பா னிம்மூவர்
மெய்ந்நீர்மை மேல்நிற் பவர்.

11. தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றுஞ்
செல்வ முடைக்கும் படை.

12. கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம் காமுற்ற
பெண்ணுக் கணிகல நாணுடைமை—நண்ணும்
மறுமைக் கணிகலங் கல்விஇம் மூன்றுங்
குறியுடையார் கண்ணே யுள.

13. பழமையை நோக்கி அளித்தல் கிழமையாற்
கேளீ ருவப்பத் தழுவுதல்—கேளீராய்த்
துன்னிய சொல்லா வினந்திரட்ட லிம்மூன்று
மன்னற் கிளையான் தொழில்.

14. கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்.

15. இல்லார்க்கொன் றீயு முடைமையு மிவ்வுலகில்
இல்லாமை யுள்ளு நெறிப்பாடும்—எவ்வுயிர்க்குந்

துன்புறுவ செய்யாத தூய்மையு மிம்மூன்று
நன்றறி மாந்தர்க் குள.

16. காவோ டறக்குளந் தொட்டானும் நாவினல்
வேதங் கரைகண்ட பார்ப்பானும்—தீதிகந்(து)
ஒல்வது பாத்துண்ணு மொருவனு மிம்மூவர்
செல்வ ரெனப்படு வார்.

17. நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்
அறனை நினைப்பானை யல்பொரு ளஞ்சும்
மறவனை யெவ்வுயிரு மஞ்சுமிம் மூன்றுந்
திறவதிற் றீர்ந்த பொருள்.

18. வாய்நன் கமையாக் குளனும் வயிறூரத்
தாய்முலை யுண்ணாக் குழவியுஞ்—சேய்மார்பிற்
கல்விமாண் பில்லாத மாந்தரு மிம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார்.

19. இருளாய்க் கழியு முலகமும் யாதுந்
தெரியா துரைக்கும் வெகுள்வும்—பொருளல்ல
காதற் படுக்கும் விழைவு மிவைமூன்றும்
பேதமை வாழு முயிர்க்கு.

20. ஐங்குரவ ராணை மறுத்தலு மார்வுற்ற
வெஞ்சாத நட்பினுட் பொய்வழக்கும்—நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலு மிம்மூன்று
நற்புடையி லாளர் தொழில்.

குறிப்புரை

1. தகைமை—ஒழுக்கம். தா இல்—கெடுதலில்லாத. நான் மறையாளர்—அந்தணர். வழி—நூல் வழி.

2. உள்ளல்—உள்ளான் என்னும் பறவை. தலைப்படல்—முயலுதல். துஞ்சு ஊமன்—தூங்குகின்ற ஊமையன்,

3. கணக்காயர்—உபாத்தியாயர். பிணக்கு—மாறுபாடு. பார்த்து கொடுத்து.

4. பொறியறை—செல்வமெல்லாம். கை—ஒழுக்கம். தட்டை—மூங்கில்.

5. வருவாய்—வரும்படி. கால்—நாலிலொரு பங்கு. செரு—போர். கோள்—கொள்கை.

6. கடிந்த—நீக்கிய. ஆர்க்கும்—கட்டும்.

7. பெறினும்—பெற்றாலும். பால்—பக்கம். சாயினும்—இறத்தல் வரினும். சான்றாண்மை—அறிவால் நிறைந்த தன்மை.

8. நச்சி—விரும்பி. எள்ளா—இகழாத. மன்னிய—நிலைபெற்ற. பொச்சாப்பு—மறதி. இகந்தான்—நீங்கினவன்.

9. கோல்—செங்கோல். வீழ்—விழுது. அமைச்சன்—மந்திரி. பற்று விடல்—சிறிதும் விடாது நடக்கக் கடவன்.

10. முந்நீர்—கடல். மேதை—அறிவுடையவன். மை—குற்றம். மயல்—ஆசை.

11. தருக்கல்—அகங்கரித்தல். தாழ்வு—பணிவு. வெஃகும்—விரும்புகின்ற.

12. கண்ணோட்டம்—தாக்ஷணிய முடைமை, நாண்—வெட்கம்.

13. கிழமை—உரிமை. கேளிர் சுற்றத்தார். மன்னர்க்கு இளையான்—இள அரசனது.

14. கிளைஞர்—சுற்றத்தார். பைங்கூழ்—பசுமையான பயிர்.

15. இல்லார்க்கு—வறியவர்களுக்கு. நெறி—நல்ல வழி.

16. கா—சோலை. தொட்டானும்—தோண்டினவனும். ஒல்வது—கிடைத்தது.

17. நல்குரவு—வறுமை. மறவன்—வீரன். திறவதின்—வேறுபாட்டின்.

18. வாய்—நீர் வரும் வழி. குழவி—குழந்தை. சேய் மரபில்—இளமைப் பருவத்தில்.

4. இன்னா நாற்பது

1. கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா ;
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா ;
கடுமொழி யாளர் தொடர்பின்னா ; இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு.

2. ஆற்றல் இலாதான் பிடித்த படை இன்னா ;
நாற்றம் இலாத மலரின் அழகு இன்னா ;

தேற்றம் இலாதான் துணிவு இன்னா ; ஆங்கின்னா
மாற்றம் அறியான் உரை.

3. கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா ;
வள்ளல்கள் இன்மை பரிசிலர்க்கு முன்இன்னா ;
வண்மை இலாளர் வனப்புஇன்னா ; ஆங்கின்னா
பண்ணில் புரவி பரிப்பு.

4. உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா ;
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனிஇன்னா ;
கண்ணில் ஒருவன் வனப்பின்னா ; ஆங்கின்னா
எண்இலான் செய்யும் கணக்கு.

5. ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகல்இன்னா ;
மான்(று) இருண்ட போழ்தின் வழங்கல் பெரி(து)இன்னா ;
நோன்(று)அவிந்து வாழாதார் நோன்பின்னா ; இன்னா
ஈன்றாளை ஓம்பா விடல்.

6. குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா ;
நிலத்திட்ட நல்வித்து நாறாமை இன்னா ;
நலம்தகையார் நாணாமை இன்னா;ஆங் கின்னா
கலத்தல் குலம்இல் வழி.

7. சிறைஇல்லா மூதூரின் வாயில்காப்(பு) இன்னா ;
துறைஇருந்து ஆடை கழுவுதல் இன்னா ;
அறைபறை அன்னவர் சொல்இன்னா ; ஆங்கின்னா ;
நிறைஇல்லான் கொண்ட தவம்.

8. நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனிஇன்னா ;
ஒட்டார் பெருமிதம் காண்டல் பெரிதின்னா ;
கட்டுஇல்லா மூதூர் உறைஇன்னா ; ஆங்கின்னா
நட்ட கவற்றினால் சூது.

9. பெரியாரோ(டு) யாத்த தொடர்விடுதல் இன்னா ;
அரியவை செய்தும் எனஉரைத்தல் இன்னா ;
பரியார்க்குத் தாம்உற்ற கூற்(று) இன்னா ; இன்னா
பெரியார்க்குத் தீய செயல்.

10. கல்லாதான் ஊரும் கலிமா பரிப்(பு) இன்னா ;
வல்லாதான் சொல்லும் உரையின் பயன்இன்னா ;
இல்லார்வாய்ச் சொல்லின் நயம்இன்னா ; ஆங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

11. நெடுமரம் நீள்கோட்(டு) உயர்பாய்தல் இன்னா ;
கடுஞ்சின வேழத்(து) எதிர்சேறல் இன்னா ;
ஒடுங்கி அர(வு) உறையும் இல்இன்னா ; இன்னா
கடும்புலி வாழும் அதர்.

12. நறிய மலர்பெய்து நாறுமை இன்னா ;
துறைஅறியான் நீர் இழிந்து போகுதல் இன்னா ;
அறியான் வினுப்படுதல் இன்னா;ஆங் கின்னா
சிறியார்மேல் செற்றம் கொளல்.

குறிப்புரை

1. மறம்–கொலைத்தொழில் (பாவம்). புணை–தெப்பம். தொடர்பு–நட்பு. இன்னா–துன்பமாம்.

2. ஆற்றல்–வலிமை. படை–ஆயுதம். தோற்றம்–தெளிவு.

3. களிகள்–குடித்துக் களிப்பவர். பரிசிலர்–யாசகர். வனப்பு–அழகு. புரவி–குதிரை. பரிப்பு–தாங்குதல்.

4. வைப்பு–சேர்த்து வைத்தல். புணர்ச்சி–சேர்க்கை.

5. பேதை–அறிவில்லாதவன். புகல்–புகுதல். மான்று–மயங்கி. வழுங்கல்–வழிச் செல்லுதல். நோன்பு–விரதம். ஓம்பா–பாதுகாவாமல்.

6. நாறுமை–முளையாமை, கலத்தல்–மணம் செய்துகொள்ளல்.

7. சிறை–மதில். துறை–படித்துறை. பறை–ஒருவகை மேளம்.

8, நட்டார்–சிநேகித்தவர். இடுக்கண்–துன்பம். ஒட்டார்–பகைவர். பெருமிதம்–செருக்கு. உறை–வாழ்தல். கவறு–பாய்ச்சி.

9. யாத்த–செய்த. பரியார்–அன்பு கொள்ளாதவர்.

10. கலிமா–குதிரை. வல்லாதான்–கல்வி இல்லாதவன். இல்லார்–ஏழைகள். கோட்டி–சபை.

11. கோடு–கிளை. வேழம்–யானை. அரவு–பாம்பு. அதர்–வழி.

12. செற்றம்–கோபம்.

III. கதைப் பகுதி

1. பொய்யால் விளைந்த வினை

1. பாவலர் புகழ்ந்து போற்றும்
பலமுடை **ருஸ்டும்** என்பான்
எவரும் போற்றத் தக்க
எழிலுடை பாரசீகன் ;
மேவிடு மற்போர் விற்போர்
மேதகு வாட்போர் இன்ன
யாவினும் சமர்த்த ளுகி
இன்புற வாழ்ந்து வந்தான்.

2. அப்பெரு வீரன் தார்த்தார்
அரசகன் னியைம ணந்தான் ;
செப்பரும் அழகி அன்னுள்
செல்வமைந் தனைப்பெற் றன்னுற் (கு)
எப்புவி யவரும் போற்றச்
சோரபென் நாமம் இட்டாள் ;
அப்பனுக் குண்மை கூற
அஞ்சினள் ஆகி அம்மை,

3. "உண்மையை உரைப்பே ளுகில்
உறுமகன் தனைக்கொண் டேகி
அண்மையில் வாரான் ; மைந்தன்
அகன்றியான் ஒருநாள் வாழேன் ;
அண்ணலுக் கொருசொல் சொல்லி
அனுப்புவேன் இன்னே : யானும்
பெண்இவண் பிறந்த தென்றே
பொய்யுரை அனுப்பு வேனே".

4. என்றவள் முடிவு செய்தாள் ;
ஏந்திழை செய்தி கேட்டே
நன்மன முடைய ருஸ்டும்
நல்லதென் றிருந்து விட்டான் ;

மன்னவர் மகிழச் சோரப்
மன்மத ரூபத் தோடே
கண்டவர் மகிழத் தாயின்
காப்பினில் வளர்ந்து வந்தான்.

5. காளையும் பதினா றெய்திக்
கலைகளிற் சிறந்து நின்றான் ;
" வேளைப் பொழுது நேரும்
வீரரெந் தையரைக் காண ?
நாளைநாம் காண்போம், போவோம்
நாமும்அப் பகைவ ரோடே.
வேளையிஃ தொன்றே உண்டிங் (கு)"
என்றவன் பகைவ ரோடே

6. கூடித்தன் தாதை யாரைக்
காணவே பார சீகம்
நாடினன். " பகைவர் பக்கம்
நல்லனோர் இளைஞன் ; அன்னோன்
தாடியும் முளையாப் பிள்ளை ;
தறுகணன் ; அவனை நீவிர்
சாடிடிற் பகைவர் அஞ்சிச்
சடுதியில் ஒழிகு வாரே"

7. என்றனன் வேந்தன். ருஸ்டும்
" ஏற்றதே " என்றான் ; "என்னே !
சின்னவ னோடு நின்றே
சமர்செயல் இழிவே யாகும் ;
என்னுடை வேடம் மாற்றி
இளைஞனோ டமர்செய் வேனெ"ன்(று)
எண்ணினன் ; எண்ணம் போல
எதிரிமுன் வந்து நின்றான்.

8. " ஐயநீ ருஸ்டுந் தானோ ?
அறைகுவாய் " என்றான் மைந்தன் ;
' மெய்புகல் நமக்கு நாணே '

என்றவன் 'இல்லை' என்றான் ;
பொய்புகன் றனள்தாய் முன்னாள் ;
தாதையும் பொய்யே சொன்னான் ;
மெய்யறி யாது மைந்தன்
மனம்நொந்து போரிட் டானே.

9. தந்தையைத் தூக்கி வீழ்த்தித்
தருக்கொடு நின்றான் சோரப்;
தந்தையென் றறியான் ; தந்தை
தரணிநின் றெழுந்து சீறி
மைந்தனைத் தூக்கி வீழ்த்தி
மார்பினில் 'ருஸ்டும்' என்றே
கத்தியைக் குத்த, மைந்தன்
கதறிவீழ்ந் தலறி, " அப்பா !

10. "உம்மையான் காண வந்தேன் ;
உம்மையான் கேட்ட போழ்தே
உண்மையை உரைத்தீர் அல்லீர் ;
உம்மகனை நீர் கொன்றீர் "
என்றவன் உரைப்ப, ருஸ்டும்
" எனக்கொரு பெண்ணே உண்டு "
என்றனன். சோரப் தாயின்
எண்ணத்தை உரைத்திட் டானே.

11. " பேதைஉன் தாயென் பா'ளோர்
பெண்மக வீன்றேன்' என்றாள்.
ஆதலால் ஏமாந் தேன்யான் ;
ஐயனே ! உன்னைக் கொல்லப்
பாதகன் யானே நின்றேன் ;
பாலனே ! உன்னைப் பெற்ற
பாதகி பொய்யால் நேர்ந்த
பழியிது அந்தோ! அந்தோ !

12. " இவ்விளம் பருவத் தில்நீ
வியப்புறு விதம்போர் செய்தல்

எவ்வுல கத்துங் காணு
ஏற்றமாம் ; உன்னைப் போற்றித்
தெவ்வரிங் களைத்து வந்து
தள்ளினர் ; உன்றன் ஆவி
வவ்வயான் இருந்தேன் ஐய!
வருவிதி தவிர்ப்பார் யாரே!

13. "பொய்யினல் விளைந்த கேடு ;
பொய்யினல் வந்த நஷ்டம் ;
பொய்யினல் உனைஇ ழந்தேன் ;
பெறற்கரு மகனே! உன்தாய்
பொய்யினல் உன்னைக் கொன்றுள் ;
பொய்யினல் யானும் கொன்றேன் ;
ஐயனே! பிழைபொ றுப்பாய் ;
அழகனே! என்றன் வாழ்வே!"

—வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L.

அரும்பொருள்

1. எழில்—அழகு, மேவிடு - பொருந்தும், மேதகு - உயர்ந்த.

2. தார்த்தார்—ஒரு தேசம், அன்னற்கு - அம்மகனுக்கு, அப்பன்-ருஸ்டும்.

3. உறு - பொருந்திய, அண்மை - (என்) அருகில், அண்ணல்-பெருமை பொருந்தியவன் (ருஸ்டும்), இவண் - இங்கு.

4. ஏந்திழை—ஏந்தலாகவுள்ள ஆபரணம் அணிந்தவள் (ருஸ்டும் மனைவி), செய்தி - பெண் பிறந்ததென்னும் பொய்யுரை, மன்னர்-பாட்டனர் (தார்த்தார தேசத்து அரசர்), காப்பு - பாதுகாவல்.

5. எந்தையர் - என் தகப்பனர், சோரப் பாரசீகத்தை எதிர்க்கச் சென்ற பெருஞ்சேனையோடு சேர்ந்து அந்தச் சாக்கிலேனும் தன் தந்தையைக் காணச் சென்றுன்.

6. தறுகண்ணன் - அஞ்சாதவன், சாடிடில்-வெல்லின்.

7. வேந்தன் - பாரசீகமன்னன், ஏற்றதே - சரி, சமர் - போர், சின்னவன் - சிறியவன் (உலகவழக்குச் சொல்)

8. அறைகுவாய் - சொல்வாய், நாணே - வெட்கம், 'இச்சிறிய வீரனிடம் மஹா வீரனகிய ருஸ்டுமா சண்டையிட வந்தான்!' என்று

பார்ப்பவர், கேட்பவர் ஏளனம் செய்வர் என்றஞ்சிய ருஸ்டும் தன் பெயர் ருஸ்டும் அன்று எனக் கூறினன்.

9. தருக்கு - கர்வம் (பெருமிதம்), வீரன் பகைவனை இறுதியாகக் குத்தும் போழ்து தன் பெயர் கூறிக் குத்தல் முறை.

10. தாயின் எண்ணம்—3—ஆம் செய்யுளின் கருத்து,

11. மகவு—குழந்தை, பேதை - அறியாதவள், அந்தோ - ஐயோ.

12. ஏற்றம்—உயர்வு, தெவ்வர் - பகைவர், வவ்வ - கவர.

IV. பல்சுவைப் பகுதி

1. தனிப்பாடல்கள்

ஆதிசேடன்

1. சென்றால் குடையாம் ; இருந்தால்சிங் காதனமாம் ;
நின்றால் மரவடியாம் ; நீள்கடலுள்—என்றும்
புணையாம் ; மணிவிளக்காம் ; பூம்பட்டாம் ; புல்கும்
அணையாம் திருமாற்(கு) அரவு.

மத்தால் அடித்தல்

2. வண்ணம் கரியனென்றும், வாய்வேத நாறியென்றும்,
கண்ணன்இவ னென்றும் கருதாமல்—மண்ணை
அடிப்பதுமத் தாலே அளந்தானை ஆய்ச்சி
அடிப்பதுமத் தாலே அழ.

'ஈவது விலக்கேல்.'

3. கொடுப்பார் அருகிருந்து குற்றங்கள் சொல்லிக்
கெடுப்பாரைத் தெய்வம் கெடுக்கும் ;—கடுக்கடலில்
பள்ளிகொண்ட மாலிருக்கப் பண்டு கரந்திருந்த
வெள்ளிகண்ணைப் பாரீர் விரைந்து.

நெசவுத் தொழில்

4. செய்யுந் தொழிலனைத்துஞ் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யுந் தொழிற்கு நிகரில்லை ;—வையகத்தில்
தெள்ளு தமிழ்வேதஞ் செப்பிஅந்நாள் சீர்படுத்தும்
வள்ளுவனர் கொண்டதல்ல வா ?

உழு தொழில்

5. ஏரும் இரண்டுளதாய், இல்லத்தில் வித்துளதாய்,
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்,—ஊருக்குச்
சென்றுவர அண்மையதாய், செய்வாரும் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது.

குறிப்புரை

1. மரவடி—பீடம், நீள்கடல்—பெரிய திருப்பாற்கடல், புணை—படுக்கை, பூம்பட்டு—மிருதுவான பட்டு.

2. வாய் வேதம் நாறி—வாயில் வேதம் மணக்கின்றவன், மண்—உலகம், அடிப் பதுமத்தாலே—திருவடித் தாமரைகளாலே, அடிப்பது மதத்தாலே—அடிப்பது மத்தினாலே.

3 கரந்து—(அர்க்கியம் விடும் கிண்டியின் வாயில் நீர் விழாமல் அடைத்து) ஒளிந்துகொண்டு, பண்டு—முன்னாள், வெள்ளி—சுக்கிராச்சாரி,

4. வையகம்—உலகம், தமிழ் வேதம்—திருக்குறள், வள்ளுவனார்—திருவள்ளுவ நாயனார்.

5. வித்து—விதை, அண்மை—(பக்கம்) சமீபம், செய்வார்—வேலை செய்யும் பண்ணையாட்கள்.

2. தமிழர் வாழ்வு

தமிழர் போர் வீரம்

கடற்படைகொண் டிலங்கைவென்று தக்கிணத்தைக்
கைப்பற்றி வங்கர்கோ சலரைவென்று,
வடநாட்டார் அடிபணிய வன்போர் செய்து,
வாகையுடன் புலிக்கொடியை இமயமேற்றி,
அடற்கரிய தமிழ்வீரப் படையால் பொன்னி
அணைகட்ட மன்னர்பணி கொண்டமன்னன்,
சுடர்மணிப்பூம் புகாராண்ட கரிகாற்சோழன்
துடங்கியநன் னாடுதித்த சூரச் சேய்காள்!

தமிழர் ஒற்றுமை

கயிறெடுத்துத் தன்கழுத்தில் மாட்டிக் கொண்டே
கதறுகின்ற பேதையைப்போற் காய வாழ்வின்
உயர்நலத்தை யுணராம லுமக்கே கேடாம்
ஊறுகளைச் செய்யாதீர் ; உலக னேகம் ;
பெயர்வடிவச் சாயத்தைப் பெரிது பண்ணிப்
பிரிவினையாம் வஞ்சப்பேய்க் கிடந்த ராதீர் ;
உயிர்க்குயிரா மொருபொருளை யுள்ளு ணர்ந்தே
ஒற்றுமையாய் வாழ்ந்திடவே கற்றூர் மேலோர்.

வாழும் வகை

தமிழ்நாட்டுக் கல்விமுறை தமிழர் கையில் ;
தாய்நாட்டுத் தொழில்களெலாந் தனயர் கையில் ;
தமிழர்வா ணிபமெல்லாந் தமிழர் கையில் ;
தமிழ்த்துறையி லியங்குவது தமிழர் கப்பல் ;
தமிழ்ச்சமுதா யப்பணியுந் தமிழர் கூட்டால்,
தமிழ்நாடு தமிழர்க்கே ; தமிழர் சேமந்
தமிழர்களின் ஒற்றுமையே ; தமிழர் உள்ளம்
தமிழுள்ள மெனில்வாழ்வு தழைப்பதாமே.

—சுத்தானந்த பாரதியார்

குறிப்புரை

1. தக்கிணம்—தெற்கு, வங்கர்—வங்காள மாகாணத்தார், கோசலர்—கோசல நாட்டார், வாகை—வெற்றி, பொன்னி—காவிரியாறு, மன்னர்—இலங்கை அரசர், புகார்—காவிரிப்பூம் பட்டினம், கரிகாற் சோழன்—வட நாட்டாரை வென்று, இலங்கையையும் வென்று, இலங்கையரைக் கொண்டு காவிரிக்கு அணைபோடச் செய்தான்.

2. ஊறு—துன்பம், பிரிவினை—சாதிப் பிரிவுகள், கற்றூர்—கற்றவர்.

3. தனயர்—பிள்ளைகள், சேமம்—க்ஷேமம்.